பெப்ரவரி 29 - மார்ச் 06,2004 24 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

24/2/2004

# சுடர் ஒளி


THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்






## சூடு பிடிக்கும் தேர்தல்களம்














## வன்னியில் தொடரும் அரசியல் சந்திப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசார வேலை ஆரம்பமாக முன்பே வன்செயல்களுக்கு பிள்ளையார் சுழி!

## தேர்தலையொட்டி பெரும் அசம்பாவிதங்கள் எதிர்பார்ப்பு

தேர்தல் என்றாலே அது இலங்கை மக்களுக்கு இன்று வெறுப்பூட்டும் ஒரு விடயமாகிவிட்டது.

தேர்தல் ஒன்று நடைபெற்றால் அடுத்த தேர்தல் நடைபெறும் காலம் வரை — பெரும்பான்மையை இழக்காத வரை — தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆட்சியில் இருக்க வேண்டும். ஜனநாயக மரபும் அதுவே.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை இது தலைகீழாக இருந்து வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் ஐந்தாண்டு பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பே மீண்டும் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு ஆட்சியும் கலைக்கப்படுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை தேர்தல் ஒன்று நடைபெறப்போகின்றதென்றால் அது முடிவுறும் வரை மக்கள் அச்சத்துடனும், பீதியுடனும் காலம் கழிக்க வேண்டி இருக்கிறது. மோதல்களுக்கும் வன்செயல்களுக்கும் பெயர்போன இலங்கை, தேர்தல் வன்செயல்களுக்காக 'கின்னஸ்' சாதனை படைத்துவிடுமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

தமது கட்சியை ஆட்சி பீடம் ஏற்ற வேண்டும் என்பதற்காக எதைச் செய்வதற்கும் தயார் என்ற நிலையில் குண்டர்கள் கூட்டம் அடாவடித் தனங்களைக் காட்ட காத்திருக்கிறது. யார் இருந்தால் என்ன, இறந்தால் என்ன கள்ள வாக்குகளால் தமது சின்னத்துக்கு புள்ளடியிட்டால் போதும் என்ற நிலையில் கட்சிகளின் வேட்பாளர்கள் செயற்படுகின்றனர்.

கடந்த தேர்தலில் இடம்பெற்ற தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் மற்றும் வழக்குகள் இன்னும் விசாரணை செய்யப்படாமல் கிடப்பில் இருக்கின்றன. மாத்தறை பகுதியில் வைத்து ஐ.தே.க ஆதரவாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக மாத்தறை நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் கடந்த 16 ஆம் திகதிதான் தீர்ப்பு வழங்கப்பட்டது. சுமார் இரண்டு வருடங்களுக்குப் பின்னரே தீர்ப்புக் கிடைத்துள்ளது.

நீதி மன்றங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் வழக்குகள் அனைத்தையும் விசாரணை செய்து முடிவு காண்பதற்கு முன்னரேயே நீதிமன்றங்கள் புதிய வழக்குகளை எதிர்நோக்கும் நிலை தோன்றியுள்ளது.

### துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்


எது எப்படியோ, தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற வன்செயல்களில் சுமார் ஏழு பேர் இது வரை தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிலாபம், மாரவில, நாத்தாண்டிய, கட்டுகஸ்தோட்ட போன்ற பகுதிகளில் இந்த மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சிலாபம், ஆராச்சிக்கட்டுவ பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அப் பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரேயே வன்செயல்களுக்கு பிள்ளையார் சுழி இடப்பட்டுவிட்டது. இனி மோதல்கள் பற்றிய செய்திகளைத் தான் வாசித்தும், பார்த்தும், கேட்டும் தெரிந்து கொள்ளப்போகிறோம்.

தேர்தல் வன்செயல்கள் மூன்றாம் உலக நாடுகளிலேயே அதிகமாக இடம்பெறுகின்றன. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் வன்செயல்கள் வழமையாகிவிட்டன. வேலையற்றவர்கள் அதிகமாக உள்ள நாடுகள் வரிசையில் இந்த நாடுகள் முதலிடம் வகிக்கின்றன. இப்படியானவர்களுக்கு தேர்தல் காலங்களில் சிறிய தொகைகளைக் கொடுத்து அவர்களை தமது கட்சி பணியாளர்களாகவும், அடியாட்களாகவும் அரசியல்வாதிகள் பயன்படுத்துகின்றனர். இலங்கையிலும் இதுவே நடைபெறுகிறது.

இந்தத் தேர்தலில் இலங்கையில் வழமையை விட மோதல் சம்பவங்கள் அதிகரிக்கலாம் எனவும் அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். தென் பகுதியில் பாதாள உலகக் கும்பல்களின் உதவியைப் பெற்று தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் படலம் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. பணத்துக்காக பாதாள உலகத்தினர் எதையும் செய்யத் தயாராக இருக்கின்றனர். தென்பகுதியில் அண்மைக் காலங்களாக இடம் பெற்றுவரும் கொலைச்சம்பவங்கள் இதனை பறை சாற்றுகின்றன.




எனவே, முன்கூட்டியே சம்பந்தபட்ட கட்சிகள் தமது தார்மீகக் கடமையை உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும். வடக்கு— கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைதவிர்ந்த ஏனைய பகுதிகளில் மூன்றாவது சக்திகள் தமிழ் — முஸ்லிம் உறவுகளைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் எனச் சந்தேகிக்கவும் வேண்டியுள்ளது. கடந்த கால கசப்பான அனுபவங்கள் பற்றி யோசிக்காமல் இருக்கமுடியாது. விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒற்றுமையை இனவாத சக்திகள் ஜீரணிக்க முடியாமல் தவிக்கின்றன. எனவே, எதிலும் அவதானம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

தமிழர்கள் ஓரணியில் திரளுவதற்கு எதிராக தென்பகுதியில் விஷமத்தனமான பிரசாரங்களில் சில பேரினவாதப் பத்திரிகைகள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எந்தக் கட்சி தென்பகுதியில் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களின் கோரிக்கைகளைத் தூக்கிக்கொடுத்து விடப்போவதில்லை. இம்முறை நாடாளுமன்றில் மூன்றாவது சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம் பெறும் என எதிர்வு கூறப்படுகிறது. தென் பகுதியில் எந்தத் தரப்புக்கும் ஸ்திரமான ஒரு நிலை இல்லாத காரணத்தால் வாக்குகளை பெறுவதற்காக எதையும் செய்யும் நிலையில் இரு பிரதான கட்சிகளும் தயாராகி வருகின்றன. ஆகவே, இனி வன்செயல் கலந்த தேர்தல் பிரசார செய்திகளையே நாம் கேட்கக் கூடியதாக இருக்கப்போகிறது.

இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போது தேர்தல் மனுக்களை பல கட்சிகள் தாக்கல் செய்திருந்தன. தாக்கல் செய்த பின்னர் கண்டி, அனுராதபுரம், தங்காலை போன்ற பகுதிகளில் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றிருந்தன. ஐந்து வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றிருந்ததாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

வன்முறைக் கலாசாரத்துக்குப் பெயர் போன இலங்கையின் தலைமைத்துவங்கள் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் நடவடிக்கைகளிலேயே இதுவரை காலமும் ஈடுபட்டு வந்துள்ளன.

சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளின் பின்னால் அணிவகுத்து அவர்களைப் பதவியில் அமர்த்துவதற்காக மரணவிளையாட்டில் ஈடுபட வேண்டுமா? அரசியலில் இன்றைய எதிரி நாளைய பங்காளி என்பது மறுக்க முடியாத உண்மை. பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஐ.தே.கவின் விரோதிகளாக இருந்தவர்கள் பலர் அக்கட்சியின் முக்கியஸ்தர்களாக இருக்கவில்லையா? இந்த உதாரணம் இன்றைய காலத்துக்கு முக்கிய பாடமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய கட்டாயமும் தேவையுமாக இருக்கிறது.

— ஆ. வரதன் —

# வாசகர் இதயம் பேசுகிறது

***சி. வசந்தி— புத்தூர்***

அன்பான சுடர் ஒளிக்கு!

நன்றி, நன்றி, நன்றி. ஆயிரம் தடவைகள் சொன்னாலும் போதாது. மிக்க மகிழ்வு கொண்டு எழுதுகிறேன் ''வாராதே! வரவல்லாய் ....'' ஜனவரி 4 — 2004 இதழைப் பார்த்துவிட்டு எனது நண்பர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு படித்தாயா என்று கேட்டார்கள்...

வெளிநாட்டில் வாழும் அவர்களை மட்டுமல்ல அனைத்து தமிழ் நெஞ்சங்களையும் வேதனையுறச் செய்திருந்தது கம்பவாரிதியின் கட்டுரை.

உன் மீது கூட எனக்கு கோபம் வந்தது. உன் அன்பு வாசகர்களின் மனதினை நோகடிக்கும் கட்டுரையை பிரசுரித்து விட்டாயே என்று. பின்னர் காரணம் உணர்ந்து நொந்த என்னை நானே தேற்றிக் கொள்ளும் அளவுக்கு பெப்ரவரி 08 இதழில் கனடா கனகசபேசனின் ''வருவோம் வாய்ப்புள்ள போதெல்லாம் வந்து வாழ வைப்போம்!'' என்ற கட்டுரையைப் பிரசுரித்தாய். மேற்படி கட்டுரைக்கு மகிழ்ச்சிகளும் நன்றிகளும்.

அது சபேசனின் மனக்குமுறல் மட்டமல்ல, அனைத்து தமிழ் நெஞ்சகளினதும் குமுறல்.

அடுத்து, அதனை கருத்தில் — மனத்தில் கொண்டு உன்னில் ஒரு பகுதியாக பிரசுரித்தாய். அதனால் உனது தனித்தன்மையை பேணியுள்ளாய். பாராட்டுக்கள்.

***க. மங்களமூர்த்தி, அராலி வட்டுக்கோட்டை***

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒளிப்பத்திரிகையான சுடர் ஒளிப் பத்திரிகையே! உன்னை வாசிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் நான் உன்னை வாசிக்கின்றேன்.

சுடர் ஒளிப் பத்திரிகையே உன்னில் தாங்கி வரும் தகவல்கள் அரியவை. அத்தோடு பல்சுவை அம்சங்களும் சேர்ந்தவை என்பதில் ஐயம் இல்லை. எனவே உன் புகழ் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

***இ.ஜெயக்குமார், கிளிநொச்சி***

தித்திக்கும் தீன் தமிழில் திக் கெட்டும் ஒளி பரப்பும் என் இனிய சுடர் ஒளியே! உன் படைப்புக்கள் அத்தனையும் தரமானவை. அதிலும் பித்தன் பதில், கவிதைப்புனல், சொற்சிலம்பம், சிறுகதை, சிறுவர் கைவண்ணம் ஆகியவை என்னை மிகவும் கவர்ந்தவை. சுடர்ஒளியே இன்று போல் என்றுமே நீ மங்காது ஒளிவீச எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள் என்றும் உனக்கே.

***வே. உஷா, புதுக்குடியிருப்பு***

நான்கு திசைகளும் சுடர் வீசும் அன்பான சுடர் ஒளியே! உன்வரவு கண்டு மகிழும் வாசகருள் நானும் ஒருத்தி. நீ தரும் அம்சங்களில் அரசியல் அம்பலம், பித்தன் பதில்கள், மசாலாமிக்ஸ், சிறார்களின் கைவண்ணம், சிறுகதைகள் என்பன என்னை மிகவும் கவர்ந்துள்ளன. உன்னில் வரும் கவிதைப்புனலினால் என் உடல் எங்கும் சிலிர்க்கின்றது. எமக்கு அறிவூட்டும் பாடத்தைத் தரும் நீ எங்கிருந்தாலும் வாழ்க. சுடரே! வாழ்க உன் புகழ்!

***பரதன்— நுவரெலியா.***

உனது ஆக்கங்கள் அனைத்தும் அம்சமானவையே. அதிலும் தேரடி அரட்டை, மலையகம் என்பன என்னைக் கவர்ந்தவை. நீ நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

***கீதா— உரும்பிராய்.***

அன்புடன் என் பத்திரிகை சகோதரனுக்கு,

உனது அபிமான வாசகர்களுள் நானும் ஒருத்தி. உனது ஆக்கங்கள் அனைத்தும் என்னை, எம்மை கவர்கின்றன. உனது ஆக்கங்களில் அரசியல் அம்பலம், கவிதைப் புனல், பித்தன் பதில் என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. ''சுவை உணவு இன்றி இருப்போம். சுடர் ஒளி நீ இன்றி இருக்கோம்'' என்ற அளவுக்கு நாம் உனது பணியை நேசிக்கிறோம். உனது பணி தொடர வாழ்த்துகிறோம்.

***வளவன்—கரவெட்டி***

தமிழுக்கு மெருகூட்டும் உன் பைந்தமிழ் கவிதைகளும், சிறுகதை, கட்டுரை அனைத்தும் அற்புதம். உனது பணி வளரவும் வாழவும் வாழ்தும் உன் வாசகன்

***சிவகுமார், வடமராட்சி.***

சுடர் போன்ற அறிவை எமக்கு தரும் ஒளியே, நீ தினம் தினம் தரும் தகவல்கள், உன் ஆக்கங்கள் அனைத்தும் அற்புதம். நீ மேலும் மேலும் வளரவும், உனது பணி சிறக்கவும் வாழ்த்துகின்ற உன் அபிமான வாசகன்.

***திவ்யா—சுழிபுரம்***

சுடர் ஒளியே,

உனது நீண்ட நாள் அபிமான வாசகி நான். உனது ஆக்கங்கள், கவிதைகள் அனைத்தும் அற்புதம். எமது வாழ்வில் ஓர் அம்சமாக இணைந்துவிட்ட நீ, நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.




உமா—கல்வியன்காடு.

உனது ஆக்கங்கள் பல் சுவை மிகுந்தவையாக எம்மைக் கவர்கின்றன. உனது ஆக்கங்களில் தேரடி அரட்டை, அரசியல்அம்பலம், வடபுலத்தானின் கட்டுரை, பித்தன் பதில்கள் அனைத்தும் அற்புதம். உன் பணி தொடர வாழ்த்தும்


சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165


### 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# அரசியல் அம்பலம்

தேர்ந்தது அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்குப் பிடிக்கவில்லையாம். ஜே.வி.பியின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்கான தமது கணவன்மாரை நினைத்து இத் தேர்தலில் இரு முன்னாள் பெண் அமைச்சர்கள் போட்டியிடப் போவதில்லை என்று இரகசியமாக அறிவித்து விட்டார்களாம்.

## போர்க்கொடி

தேர்தல் களம் இன்னும் முழு அளவில் சூடுபிடிக்கவில்லை. வேட்பு மனு தாக்கல் செய்யும் வரை இவர் அந்தக் கட்சிக்கு மாறி விட்டார். இவர் இந்தக் கட்சிக்கு மாறி விட்டார். என்று செய்திகள் அடிபடத் தொடங்கி விட்டன. ஜே.வி.பியுடன் ஸ்ரீ.ல.சு.கட்சி கூட்டுச்

## கிருஷ்ண பரமாத்மா

மத்திய மலையகத்தில் அமைச்சராக பதவி வகிப்பவர், மலையக மக்கள் முன்னணியில் இணையும் முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டதாம். கிருஷ்ண பரமாத்மா மலையக மக்கள் முன்னணியுடன் வெற்றிகரமாக இரண்டு சுற்றுப் பேச்சுக்களை முடித்திருந்த நிலையில், மலையகத் தலைவருக்கு விடயம் கசிந்து விட்டதாம். பிறகென்ன, கிருஷ்ண பரமாத்மா தாம் இருந்த கட்சியிலேயே இருக்கப் போகிறாராம்.

## தேசிய பட்டியலில் கண்

யாழ். குடாநாட்டில் பச்சைக் கட்சியில் இரண்டு தடவைகள் போட்டியிட்டு வெற்றி பெற்றவர், இத் தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று அறிவித்து விட்டார். தமிழர் ஒற்றுமைதான் பெரிது. அதனால் நான் போட்டியிடவில்லை என்கின்றார். இப்போது அவர் பச்சைக் கட்சியின் தேசியப் பட்டியலில் இடம் பெறுவதற்கு கட்சி முக்கியஸ்தர்களின் பின்னால் அலைவதாக அரசல் புரசலாக செய்திகள் வெளிவருகின்றன.

## தேர்தல் களத்தில் பிக்குகள்

இலங்கை வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு பௌத்த மத குருக்களை மட்டுமே தேர்தலில் நிறுத்த இனவாத கட்சியான சிஹல உறுமய தீர்மானித்துள்ளது.

இலங்கை வரலாற்றில் அரசர்களின் காலம் தொட்டு பௌத்த பிக்குகள் அரசியலில் தலையிட்டே வந்துள்ளனர் என வரலாறுகள் தெரிவித்த போதும், நாடாளுமன்றத் தேர்தலில் 225 பிக்குகள் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளமை பௌத்தர்களையே ஆச்சரியத்துக்கு உள்ளாக்கி இருக்கிறது.

பௌத்த முறைப்படி பௌத்த குரு ஒருவர் ஏனையவர்களுடன் சரிசமமாக அமர முடியாது. அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட விசேட அமர்வுகளில் அமர வேண்டும்.

அதாவது வெள்ளை அல்லது மஞ்சல் கம்பளத்தால் மூடப்பட்ட கதிரைகளில் அமர வேண்டும். அப்படியெனில் நாடாளுமன்றில் அவர்களுக்கென தனியான அமர்வு வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

கடந்த தேர்தலில் காலிப்பகுதியில் ஒரு பௌத்த பிக்கு நாடாளுமன்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது இலங்கையின் வரலாறு.

அண்மையில் ரஷ்யாவுக்கு சென்றிருந்த போது அங்கு மரணமான கங்கொடவில சோம தேரரின் இறுதி ஊர்வலத்தின் போது கலந்து கொண்ட பெருந்திரளான சிங்கள மக்களின் உணர்வை வைத்து சிஹல உறுமய தப்புக்கணக்கு போட்டு விட்டது என சிங்கள புத்திஜீவிகள் கூறுகின்றனர். கடந்த தேர்தலில் பத்து அல்லது இருபது வாக்குகளைப் பெற்ற சிஹல உறுமய தனது கட்சிசார்பாக பௌத்த பிக்குகளை மட்டுமே வேட்பாளர்களாக நியமித்து சிங்கள பௌத்தர்களை தனது பக்கம் ஈர்க்கலாம் என கருதுகிறது. பௌத்த பிக்குகளை சிங்கள பௌத்தர்கள் விகாரைகளில் மட்டுமே தரிசிக்க விரும்புவர். நாடாளுமன்றத்தில் அல்ல என்பதே பெரும்பாலானவர்களின் கருத்து.

இனரீதியாக பிளவுபடுத்திய பேரினவாத கட்சிகள் இன்று மதரீதியாக நாட்டில் வன்முறையை தூண்டிவிடஎடுக்கும் முயற்சியே பௌத்த பிக்குகளை தேர்தலில் நிறுத்தும் முயற்சி என்பது பலரின் கருத்து.

—ஆர்.வரதன்—




# தர்ஷனா எக்ஸ்போர்டர்ஸ்

சகல நாடுகளுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட (சகல பொருட்களும்)
சிறிய/பெரிய பொதிகளாக (Parcels) அனுப்பி, அவை நீங்கள் குறிப்பிடும்
விலாசத்திற்கே கொண்டு சென்று கொடுக்கப்படும்



Door to Door Services Available in All Countries

**THARSANA EXPORTERS**
*No: 250, 31/1 Aluthmawattha Road, Colombo - 15, Sri Lanka.*
*Tel: 0094 - 114614521, 0094 - 777635129*
*Fax: 0094 - 112335531 Telex: 0094 – 112321616*
*E.mail: tharsanaexporters@yahoo.com*

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

| கொழும்பில்... | கல்முனையில்.. |
|---|---|
| பெப்ரவரி 25 - 29 வரை சந்திக்கலாம்<br>New Ahmed Tarist Inn, Bang Bang Building<br>10 - 1/A. Bankshall Street, Colombo - 11.<br>TEl No. 5368426, 368427, Cell. 0722 910796<br>**Hot Line: 0777 569205** | மார்ச் 05, 06, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்<br>T.M.M. பாமசி கல்முனை<br>Tel No. 067 2229329<br>**Hot Line: 0777 569205** |
| **வவுனியாவில்...** | **யாழ்ப்பாணத்தில்...** |
| மார்ச் 13, 14, ஆம் திகதிகளில்<br>Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு<br>வவுனியா, Tel No. 024 2222074<br>**Hot Line: 0777 569205** | பெப்ரவரி 16 - 22வரை<br>A.S.N. சுற்றுலாவிடுதி<br>392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்<br>**Hot Line: 0777 569205**<br>Tel No. 021 2223181<br>021 222 5399<br>பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள் |

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



## பேருவளையில் பரம்பரை மாந்திரீகம்

அரபி, உருது, மலையாள மாந்திரீகம் (இன்ஷா அல்லாஹ்) இறைவன் அருளால்

**சகல இனத்தவர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்**

*செய்வினை *ஸிகுறு *ஜின் *செய்தான் *பேய் *பிசாசு போன்ற சகல பிரச்சினைகளிலிருந்தும் ஆங்கில வைத்தியத்தால் குணம் கிடைக்காத தீராத நோய்களுக்கும் தீர்வு கிடைக்கும்.

*செய்வினை அகற்றி *வீடு *தோட்டம் *வியாபார ஸ்தலம் * பகைவர்களின் தீங்கில் இருந்தும் காவல்பாடு *ஆண், பெண் திருமணத் தடை நீங்கி உடன் திருமணம் நிறைவேறுதல்

*கணவன் மனைவி விவகாரம் *புத்திர பாக்கியமின்மை *குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படுத்தல் *பிரிந்தவர்கள் கூடவும் *விரும்புபவர்களின் அன்பை பெறவும்

**உங்கள் பிரச்சினை எதுவானாலும் நேரில் சந்திக்கவும்**

(வெளிநாட்டில் இருப்பவர்கள் தொலைபேசி மூலம் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்)

**வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 7.30 மணி முதல் சந்திக்கலாம். (இரகசியம் பேணப்படும்)**

**A.H.A. நவ்பர் ஹாஜியார்,**
69 பழைய ரோட், மொள்ளியமலை, பேருவளை.
(யூனானி வைத்தியசாலைக்கு அருகில்)
தொ.பே: 034–76932
வீடு இருக்குமிடத்தை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்

அலுவலகம் :— ஷாமிலா ஜூவலர்ஸ், 15 சுப்பர் மார்க்கட், காலி வீதி, பேருவளை. தொ.பே. 034 – 77586

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை எது என்பதை புரிந்து கொள்வீர்கள்


## மாபெரும் இலக்கியப்போட்டி – 2004

கப்டன் வானதியின் பதின்மூன்றாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கப்டன் வானதி வெளியீட்டகம் நடத்தும், கவிதை, சிறுகதை, குறுநாவல், ஓவியம் மற்றும் கட்டுரைப்போட்டிகள்.

<u>போட்டி நிபந்தனைகள்</u>

படைப்புகள் தமிழ் தேசிய விடுதலை, சமூகவிடுதலை என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்டமைதல் வேண்டும்.

**கவிதைகள்**
மரபுக்கவிதைகளாகவோ, புதுக்கவிதைகளாகவோ அமையலாம். கவிதை 60 வரிகளுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

**சிறுகதைகள்**
தட்டச்சுத்தாளில் 06 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

**குறுநாவல்கள்**
தட்டச்சுத்தாளில் 60 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

**கட்டுரைகள்**
தட்டச்சுத்தாளில் பத்துப்பக்கங்களுக்கு மேற்படாமல் அமைவதோடு, தரவுகள் உண்மையாகவும் இருக்க வேண்டும்

**ஓவியங்கள்**
தட்டச்சுத்தாளில் மட்டும் வரையப்படுதல் வேண்டும்.

- ★ போட்டிகளில் பெண்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.
- ★ ஒருவர் எத்தனை படைப்புக்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- ★ படைபுக்கள் அனைத்தும் தட்டச்சுத்தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே தெளிவான கையெழுத்திலோ அல்லது தட்டச்சுப் பதித்தோ அனுப்புதல் வேண்டும்.
- ★ படைப்புக்கள் வேறு வெளியீடுகளில் வெளிவந்தவையாக இருத்தல் கூடாது.
- ★ நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தவர்களும் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.
- ★ போட்டிக்கான அனைத்துப் படைப்புக்களும் தபால் மூலமே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**படைப்பாளிகளின் பெயர், முகவரி என்பவற்றை தனித்தாளில் தெளிவாக எழுதி இணைக்கப்படல் வேண்டும்.**

**நிபந்தனைகளுக்கு அமைவதாக வந்து சேரும் படைப்புக்களே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.**

**நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.**

**பரிசுகள் வெல்ல இன்றே தயாராகுங்கள்**
**போட்டி முடிவு திகதி : 31– 03 – 2004**

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
"மாபெரும் இலக்கியப்போட்டி"
கப்டன் வானதி வெளியீட்டகம்,
இல.61, கனகபுரம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

பெப்ரவரி 29 — மார்ச் 06, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14. டெலிபோன்: 011—4734401—6
பாக்ஸ் : 011 — 4734404
E-mail: editorial@sudaroli.com

## சமாதானத்தின் எதிர்காலம்

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டு தற்பொழுது அமுலில் இருந்து வரும் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை எட்டும் வகையில் அரசும் புலிகளும் ஈடுபடுவதற்கு வசதியாக 2002 பெப்ரவரி 22 ஆம் திகதி நோர்வேயின் அனுசரணையுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வவுனியாவிலும், புலிகள் சார்பில் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வன்னியிலும், நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் முன்னிலையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் இரு வகைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. ஒன்று பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தலைவர்களும் இன்னொரு நாட்டின் அனுசரணையுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். மற்றது இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் நீண்ட காலம் அமுலில் இருந்து வரும் ஒப்பந்தமும் இதுதான்.

இந்த ஒப்பந்தம் கடந்த காலங்களில் எவ்வளவோ நெருக்கடிகளைச் சந்தித்தது. கடல் பிராந்தியம் குறித்து ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிடப்படாததால் கடலில் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. கிழக்கில் அடிக்கடி இடம் பெற்ற மோதல் சம்பவங்களும் ஒப்பந்தம் தப்பிப்பிழைக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி வந்தன. புலிகள் பொறுமையைக் கடைப்பிடித்து வந்ததால் சிறிய சிறிய மோதல் சம்பவங்கள் யுத்தமாக வெடிக்காமல் தவிர்க்கப்பட்டன.

இந்த ஒப்பந்தத்துக்கு உண்மையில் ஏற்பட்ட பெரிய அச்சுறுத்தல் நவம்பர் 4 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்ட எதேச்சதிகார நடவடிக்கை தான்.

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி திடீர் எனப் பொறுப்பேற்றதை அடுத்து சமாதானப் பேச்சுக்கள் காலவரையறையின்றி இடை நிறுத்தப்பட்டன.

அந்த நிலைமை இன்னும் தொடர்ந்து நீடிக்கிறது. சமாதானப் பேச்சுக்கள் கடந்த ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் நடைபெறவில்லை. பத்து மாதகாலமாக பேச்சுவார்த்தையும் இல்லை, யுத்தமும் இல்லை என்ற நிலைமை நீடிக்கிறது.

இந்த நிலைமை எவ்வளவு காலத்துக்குத் தொடரப் போகிறது? இதுவே இன்று எழும் முக்கிய கேள்வி.

ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் இரு கட்சிகளில் ஒன்றுதான் அதிகாரத்தைக் கைப்பற்றப் போகின்றது.

இரு கட்சிகளில் ஒன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி. மற்றது ஐக்கிய தேசிய முன்னணி.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இனவாதம் கக்கும் ஜே.வி.பியும் இருந்து வருகிறது. ஆகவே, அந்த முன்னணி வென்றால், கடந்த இரண்டு வருடகாலமாக படிப்படியாக கட்டி எழுப்பப்பட்ட சமாதான முயற்சிகளுக்கு என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜே.வி.பி. வன்மையாக எதிர்த்து வருகிறது. வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக புலிகள் சமர்ப்பித்துள்ள யோசனைகளையும் நிராகரித்துவிட்டது.

ஆனால், தனது முன்னணி வென்றால் சமாதான முயற்சிகள் தொடரும் என்று ஜனாதிபதி தற்போது கூறுகிறார். நேரத்துக்கு நேரம் ஒவ்வொன்றைக் கூறும் ஜனாதிபதியின் பேச்சை எவ்வளவு தூரம் நம்ப முடியும்?

மறுபுறம் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி பதவிக்கு வந்தாலும் தற்போதைய நிலைமைதான் தொடரப் போகிறது. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக சந்திரிகாதான் இருப்பார். பாதுகாப்பு அமைச்சை அவர் எப்படியும் கைவிட மாட்டார்.

பாதுகாப்பு அமைச்சு இல்லாமல் சமாதானப் பேச்சுக்களைத் தொடர முடியாது என்ற நிலையில் இருந்து பிரதமரும் இறங்கி வரமாட்டார்.

ஆகவே, தேர்தலில் எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் சமாதானப் பேச்சுக்கள் உடனடியாக மீண்டும் ஆரம்பிக்கப்படும் சூழ்நிலை ஏற்படப் போவதில்லை.

# ஆட்சியைப் பிடிப்பதில் கட்சிகள் காட்டும் தீவிரம்

## தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கிறது

பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஆறு வாரங்களே இருக்கின்றன. வேட்பாளர்கள் தமது மனுக்களை 17 ஆம் திகதி முதல் தாக்கல் செய்துவருகின்றனர். 24 ஆம் திகதியுடன் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் முடிவடைகிறது.

அதன் பின்பு பொதுத் தேர்தல் வரையான சுமார் ஒரு மாதகாலம் பிரசாரங்கள் உச்சக்கட்டத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரணில் அரசின் பதவிக்காலம் முடிவடைய இன்னும் நான்கு வருடங்கள் இருக்கும் போது எதேச்சதிகாரமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருப்பதும், அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமையை கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கி விட்டிருக்கிறது. ஆகவே, இதுவரை நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களில் இம் முறை நடைபெறும் தேர்தல் பிரசாரங்களே சூடு படிக்கப் போகின்றன என்பது பொதுவான கருத்து. ஐக்கிய தேசிய முன்னணி நூறு பிரசாரக் கூட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது. முதலாவது கூட்டம் 26 ஆம் திகதி கண்டியில் நடைபெறுகிறது.

### ஆட்சியாரிடம்?

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225. தற்பொழுது கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி 114 உறுப்பினர்களையும், பொதுஜன ஐக்கிய முன்னணி — ஜே.வி.பி. கூட்டு 95 உறுப்பினர்களையும் கொண்டிருந்தன.

இனி நடைபெறப் போகும் தேர்தலில் எந்தக் கட்சி பதவிக்கு வரப் போகிறது என்பது இன்னும் கேள்விக் குறியாகவே இருக்கிது. சமாதான முயற்சிகளுக்கு ஆதரவானவர்கள் ஐக்கிய தேசிய முன்னணியே பதவிக்கு வரும் என்று வாதாடுகிறார்கள். எதிர்ப்பாளர்கள் ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குச் சார்பாக கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

தற்போதைய விகிதாசார தேர்தல் முறையின் கீழ் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடையாது என்ற கருத்தும் நிலவுகிறது.

### கருத்துக் கணிப்பு

அதே சமயம் தேர்தல் குறித்து முதல் தடவையாக கருத்துக்கணிப்பு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனம் முக்கிய 12 நிறுவனங்களில் மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் பொதுத் தேர்தல் முடிவில் தொங்கு நாடாளுமன்றமே ஏற்படும் என்றும் அடுத்து ஆட்சியை அமைப்பவர் யார் என்பதை தமிழ் தேசிய கூட்டமைப்பே தீர்மானிக்கப் போகிறது என்றும் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 104 ஆசனங்களையும், பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி 99 ஆசனங்களையும் பெறும் என்றும் இந்தக் கருத்துக் கணிப்பு மேலும் கூறுகின்றது.

நாட்டில் உள்ள சிறுபான்மை மக்கள் மட்டும் அல்லர், பெரும்பான்மை மக்களும் யுத்தத்தை வெறுக்கிறார்கள். சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே எல்லோருடைய அபிலாஷைகளும்.

ஆனால், சமாதானம் எப்படியானதாக இருக்க வேண்டும் என்பதிலேயே முரண்பாடு நிலவுகிறது. சிறுபான்மை மக்களுக்கு உரிமை எதனையும் வழங்காத சமாதானமே பெரும்பாண்மை மக்களின் சிந்தனைகளில் இன்னும் இடம் பிடித்துவருகிறது. தமது அபிலாஷைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்கின்றனர் சிறுபான்மை மக்கள்.

புலிகளுடன் யுத்தம் செய்யப் போவதாக ஜனாதிபதி கூறுவதற்குத் தயங்கி வருகிறார்.

''புலிகளுடன் மீண்டும் யுத்தத்துக்கு செல்ல நாம் விரும்பவில்லை. அவர்களுடன் பேச்சு நடத்தி ஓர் அரசியல் தீர்வு காண்போம்'' என்று ஜனாதிபதி கூறி வருகிறார்.

ஜனாதிபதி தற்போது ஒன்று கூறுகிறார். தேர்தலில் வெற்றி பெற்ற பின்பு வேறொன்று கூறுவார் என்கின்றனர் எதிரணியினர்.

### காற்றில் பறந்த வாக்குறுதிகள்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம். நாடாளுமன்றத்துக்கு வகை சொல்லக் கூடிய பிரதமர் தலைமையிலான ஆட்சியை மீண்டும் உருவாக்குவோம் என்று 1994 ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குறுதி அளித்திருந்தார்.

அன்றில் இருந்து இதுவரை பத்து வருடங்கள் அவர் தொடர்ச்சியாக ஜனாதிபதியாகப் பதவியில் இருந்து வருகிறார். இந்த பத்து வருட காலத்தில் அவரது பொதுஜன ஐக்கிய முன்னணி ஏழரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்திருக்கிறது. ஆனால், ஜனாதிபதி தனது வாக்குறுதியைக் காப்பாற்றினாரா? இல்லை.

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனநாயக பாரம்பரியங்களையே மீறிச் செயற்பட்டார் ஜனாதிபதி. அவரது கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் யுத்தமும் தீவிர மடைந்தது.

தற்போது அமுலில் உள்ள 1978 அரசமைப்புச் சட்டத்தின் படி ஜனாதிபதி ஒருவர் இரண்டு தவணைகள் மட்டுமே பதவியில் இருக்க முடியும். ஆகவே அரசமைப்பின்படி ஜனாதிபதி இனி தேர்தலில் போட்டியிட முடியாது. இப்படியான நிலையில் தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் ஞானம் அவருக்கு மீண்டும் பிறந்திருக்கிறது.

சஞ்சாரன்

# முஸ்லிம் கட்சிகளின் ஐக்கியமுயற்சியும் முறியடிக்க முனையும் சக்திகளும்

பேரினவாதக் கட்சிகள் ஒன்றுபடுவதன் மூலம் சிறுபான்மைக் கட்சிகளால் ஆட்சி பீடத்திற்கு ஏற்படும் நெருக்குவாரங்களை இல்லாது ஒழிக்கலாம் என்ற சிந்தனையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தோற்றத்துக்கு காரணமாகக் கருத முடியும்.

இந்த கருத்துக்களை வலியுறுத்தியே ஜனாதிபதியின் ஆலோசகர் அநுரா பண்டாரநாயக்கா மேடைகளில் முழக்கமிட்டு வருகிறார்.

இந்த நிலையில், சிறுபான்மை மக்கள் தமது ஒன்றுமையை நிலை நிறுத்தி தமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக் கொள்ள தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

இந்த அவசியத்தை உணர்ந்து தமிழ் தரப்பும், முஸ்லிம் தரப்பும், கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதில் அக்கறை கொண்டு வருகின்றன.

இதன் காரணமாகவே முஸ்லிம் அரசியல் தலைமைகள் மத்தியில் ஒற்றுமை பற்றிய சிந்தனை உருவானது.

பல்வேறு அணிகளாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிதறுண்டு போகும் — போக வேண்டும் — என நினைத்த சக்திகளின் வியூகங்களை உடைக்க கிழக்கிலங்கையில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் முன்வந்தன. இது வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.

அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம், இந்த பாரிய முயற்சியில் குதித்தது பாராட்டுக்குரியது.

பேரியல் அஷ்ரப்பின், நு ஆ. கட்சி தவிர்ந்த ஏனைய அரசியல் பிரமுகர்கள் இந்த இணைப்பு முயற்சியில் கை கோத்தது ஆரோக்கியமான அரசியல் எதிர்காலத்திற்கு உதவும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்தின் கீழ் அஷ்ரப் காங்கிரஸின் அதாவுல்லா, ஐக்கிய தேசிய கட்சியின் மயோன் முஸ்தபா, நெளஷாத், முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக 6 உறுப்பினர்கள் ஆகியோர் சேர்ந்து முஸ்லிம் தேசியக் கூட்டணி என்ற பெயரில் இம் முறை போட்டியிடவும் முயற்சிக்கப்பட்டது. எனினும், 18 ஆம் திகதி இரவு எட்டப்பட்ட இந்த இணக்கப்பாடு மறுநாளே புஸ்வாணமாகி விட்டது.

அப்படி இருந்தும் முஸ்லிம் மக்களது பிரதிநிதித்துவ நலன் கருதி நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் பல அரசியல் அமைப்புகளும் இயக்கங்களும், பள்ளிவாசல் சமூகங்களும் தொடர்ந்து தமது பணிகளை மேற்கொள்ள துணிந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

சிறுபான்மை மக்கள் தமது வாக்குச் செறிவுகள் உள்ள பகுதிகளில் இத்தகைய தனித்துவமான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் வாக்குச் செறிவு குறைந்த பகுதிகளில், சூழலுக்கு ஏற்ப தமது செயல் முறைகளை திட்டமிட்டு வழி நடத்த வேண்டும் என்பது அரசியல் சாணக்கியத்தின் நடைமுறையாகும்.

இத்தகைய நடைமுறையானது பேரினவாதிகள் மேற் கொள்ள நினைக்கும் பேரினச் சக்திகளின் ஒன்றிணைவுக்கு ஆப்பு வைக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவின்றி எந்தவொரு அரசும், ஆட்சி அமைக்க முடியாது என்பதை நினைவுறுத்த வேண்டிய பாரிய கடமை சிறுபான்மை சமூகத்திடமே உள்ளது.

இந்த கடமையைச் செய்யத் தவறும் பட்சத்தில் பேரினவாதம் தனது சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தும் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடலாம்.

இந்த நிலையில், தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் கருத்துக் கணிப்புகள் கூட, பேரினவாத கூட்டுச் சக்திகளின் கை ஓங்கும் என்பதை சுட்டிக் காட்டுகின்றன.

இருப்பினும் ஆட்சியை தீர்மானிக்கும் நிலை சிறுபான்மைக் கட்சிகளிடமே அடங்கி இருக்கும் என்பது நிம்மதி அளிக்கிறது.

இந்த நிலைமையைச் சரிவரப் புரிந்து கொண்டு சிறுபான்மை மக்கள், தமது பிரதிநிதித்துவத்தை தவறவிடாது பாதுகாக்கும் சகல முயறிசிகளையும், மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய தேவை ஆகும்.

தத்தமது சுய எண்ண வெளிப்பாடுகளுக்காக குட்டி குட்டியாக தோன்றிய, தோன்றுகின்ற அனைத்துச் சக்திகளும், இன்று நம் முன் எழுந்து நிற்கும் பேரினவாத கூட்டு பயமுறுத்தலை எதிர் கொண்டு தகுந்த தாழ்பாளை போட்டுக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

இந்த அவசியங்களை உணர்ந்து செயற்படும் சிறுபான்மைச் சக்திகளை அறிந்து அவர்களது வெற்றி வாய்ப்புக்கு அணி திரள வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு சிறுபான்மை சமூகத்தின் வாக்காளர் கைகளிலும் அடங்கியிருப்பதும் இங்கு கோடிட்டு காட்டப்பட வேண்டியதே.

—ராகவி—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் போறபோக்கு...

அண்மைய காலங்களில் உலக நடப்புக்களைப் பார்க்கும் போது ''டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே, உலகம் போற போக்கைப் பாரு தங்கம தில்லாலே'' என்ற பாட்டுத் தான் நினைவுக்கு வருகிறது.

அந்தளவுக்கு உலக நடப்புகள் கேடு கெட்டுப் போயிருக்கின் றன. செய்திகளைப் பார்த்துவிட்டு நிர்வாணம், ஓரினச்



பிலிப்பைன்ஸில் முத்தமழை

சேர்க்கை, ஆணுறை, வல்லுறவு போன்ற சொற்களுக்கு என்ன அர்த்தம் என்று கேட்கும் வீட்டுச்சிறிசுகளுக்கு பதில் சொல்ல முடியாமல் முழி பிதுங்கிப் போயிருக்கிறார்கள் பல பெற்றோர்.

கடந்த வாரத்தில் மட்டும் செய்திகளை ஆக்கிரமித்திருந்த அஜால் குஜால் சமாச்சாரங்களை கொஞ்சம் பார்ப்போம்.

கடந்த 14 ஆம் திகதி காதலர் தினம் என்ற ஒன்று வந்தாலும் வந்தது. காதலர்கள் என்ற பெயரில் இளசுகளும் — அவர்களுடன் சேர்ந்து பழசுகளும் அடித்த கொட்டம் இருக்கிறதே! தாங்க முடியாதது.

பிலிப்பைன்ஸில் காதலர் தினத்தன்று கிளுகிளுப்பான உலக சாதனை ஒன்று நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். மணிலா நகர வீதியில் பெருமளவு காதல் ஜோடிகள் ஒரே நேரத்தில் கூடி முத்த மழை பொழிந்து சாதனை நிகழ்த்தி இருக்கிறார்கள். இந்த முத்த மேளாவில் 5 ஆயிரத்து 122 காதல் ஜோடிகள் கலந்து கொண்டனராம்.

கடந்த மாதம் சிலி நாட்டில் 4 ஆயிரத்து 445 ஜோடிகள் ஒரே நேரத்தில் முத்தம் கொடுத்து ஏற்படுத்திய சாதனையை இந்த சாதனை முறியடித்து விட்டதாக பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள் பிலிப்பைன்ஸ் காரர்கள்.

அதிலும் பிலிப்பைன்ஸ் நகர மேயர் வந்து முதலாவது 'இச்'சை தனது காதலிக்கு ஆழமாகப் பதித்து இச் சாதனையை தொடக்கி வைத்திருக்கிறார்.

இதே வேளை காதலர் தினத்தன்று அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலத்திலும் ஒரு மோசமான கூத்து அரங்கேறியிருந்தது. அதாவது நூற்றுக்கணக்கான காதல் ஜோடிகள் அன்றைய தினத்தில் திருமணம் செய்து பலரையும் முகம் சுளிக்க வைத்திருக்கிறார்கள். கலிபோர்னியாவின் நீதித்துறை இதனை கண்டு தலை குனிந்து போயிருக்கிறது. என்ன நூற்றுக்கணக்கில் திருமணம் நடந்தால் தலைகுனிய என்ன இருக்கிறது என்று யோசிக்கிறீர்களா? திருமணம் முடித்த மணமக்கள் அனைவரும் ஆண் — பெண்



பேர்லின் நகரில் மாணவர்களின் நிர்வாண கோலம்

ஜோடிகளே அல்லர். ஆண் — ஆண், பெண் — பெண் ஜோடிகள்.

கலிபோர்னிய மாநிலத்தில் இவ்வாறான திருமணங்களுக்கு நீண்ட காலமாக தடை இருந்து வருகிறது. ஆயினும் அங்கு ஆயிரக்கணக்கான அப்பாமார் அப்பாமாரையும், அம்மாமார் அம்மாமாரையும் வைச்சிருக்கும் வாழ்க்கை சாதாரணமாகநடைபெற்று வருகிறது. ஆயினும் என்ன குறையைக் கண்டு விட்டார்களோ என்னவோ? இந்த வாழக்கையை சட்டபூர்வமாக்கி — சட்டப்படி திருமணம் செய்து வாழ்வதற்கு இவர்கள் தவியாய்த் தவித்து வருகின்றனர்.

காதலர் தினமான கடந்த 14 ஆம் திகதி இவர்கள் சான் பிரான்சிஸ்கோவில் கூடினர். அங்கேயுள்ள மண்டபம் ஒன்றில் கூடி திருமணம் செய்ய திட்டமிட்டனர். இதனை அறிந்த எதிர்ப்பு அமைப்பு ஒன்று இத் திருமணங்களை தடை செய்ய வேண்டுமென நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது. இதனை அறிந்த காதல் ஜோடிகளுக்கு அதிர்ச்சி. பல வருடங்களாக காத்திருந்த கனவு நிறைவேறாமல் போய்விடுமோ என்று அழுது கண்ணீர் வடித்தனர். ஆனால் உரிய முறையில் போதிய முன்னறிவித்தலுடன் இந்த மனுதாக்கல் செய்யப்படவில்லை என்று கூறி நீதிமன்றம் மனுவை ஏற்க மறுத்துவிட்டது.

ஓரினத் திருமணம் செய்ய பச்சைக்கொடி காட்டப்பட்டது தான் தாமதம் எங்கே இன்னமும் ஏதாவது தடை வந்துவிடுமோ என்று பதற்றத்துடன் பாய்ந்து விழுந்து ஒருவருக்கொருவர் மோதிரத்தை மாற்றி திருமணத்தை முடித்துக்கொண்டிருக்கிறார்கள் இந்த காதல் ஜோடிகள். அவர்கள் தொடக்கி வைத்தபின் இது எழுதப்படும் வரை ஆயிரத்து எழுநூறு ஓரின ஜோடிகள் திருமணம் முடித்து தேனிலவு கொண்டாடப் போய்விட்டார்களாம்.

இதே தினத்தில் பேர்லின் நகரிலும் ஒரு வெட்கம் கெட்ட போராட்டம் நடைபெற்றிருக்கிறது. ஜேர்மனில் உள்ள பேர்லின் நகரில் சர்வதேச திரைப்பட விழாவில் நடைபெற்ற சினிமா தியேட்டர் வாசலில் கூடிய மாணவர்கள் சிலர்ஜேர்மன் அரசின் நிதி வெட்டு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நிர்வாணமாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்திஇருக்கிறார்கள். தமது போராட்டம் வெளிநாட்டவர்களுக்கும் தெரிய வேண்டுமென்ற நோக்கத்திலேயே சர்வதேச திரைப்பட விழா நடைபெற்ற இடத்தை இந்த மாணவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். திரைப்பட விழாவைப் பார்க்க வந்தவர்களுக்கு தியேட்டரின் உள்ளேயும் தியேட்டரின் வெளியேயும் படங்களை பார்த்து ரசிப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சியாம்.

காதலர் தினமான அன்று இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது என்பது சாதாரணமானதுதான் என்றாலும் தொடர்ந்து வெளிவரும் செய்திகளைப் பார்க்கையில் மகாத்மா காந்தியின் மூன்று குரங்குகளை போல் கண்களையும்,



ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணம்

வாயையும், காதையும்பொத்திக் கொண்டிருப்பதே நல்லது போல்தெரிகிறது.

எயிட்ஸை கட்டுப்படுத்தவென குரோஷியாவில் பாடசாலை மாணவர்களுக்கு ஆணுறைகளை விற்பதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இச் செய்தியானது உலகில் ஆண் — பெண் உறவு என்பது என்னவோ கேவலமாக போய்விட்டதையே காட்டி நிற்கிறது. இந்த திட்டத்துக்கு அந்த நாட்டில் பயங்கரமாக எதிர்ப்பு வெளியாகி இருக்கிறது.

இவ்வாறு அண்மைக்காலத்தில் உலகில் நடைபெறும் சம்பவங்கள் முகத்தை நேராக வைத்துக்கொள்ளக் கூடியவையாக இல்லை. சுளிக்கவே வைக்கின்றன.

சுருளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைக் காய்ச்சலைக்கண்டு உலக நாடுகள் பதறுவது ஏன்?

## புதிய வைரஸ் மருந்தைக் கண்டுபிடிக்க முடியாது திணறும் வைத்திய நிபுணர்கள்

பின்லேடனுக்குப் பயப்படாத அமெரிக்காவும் பிரிட்டனும் இன்று பயந்துகொண்டிருக்கின்றன இந்தப் பறவைக் காய்ச்சலுக்கு.

அந்த அளவுக்கு உலகைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் இந்த பறவைக்காய்ச்சல், என்னவோபாரிய அளவில்கொன்று குவிப்பது, பாவம் சாதாரண கோழிகளையும் கொக்குகளையும் தான். அப்படியெனில் பறவைக்காய்ச்சலைக் கண்டு மனித இனம் பயப்படுவது ஏன்?

மனித இனத்தைக் கோடிக்கணக்கில் பலியெடுத்த காய்ச்சல் இன்புளுவன்ஸா (INFLUENZA) என்ற சளிக்காய்ச்சல். எம்மால் சாதாரணமாக 'புளு'காய்ச்சல் என்று அழைக்கப்படும் சளிக்காய்ச்சல் — சிலவேளைகளில் உக்கிரம் பெற்றால் — மனித சமுதாயத்தின் தலைவிதியை மாற்றிவிடுகின்றது.


இவ்வாறுஇந்த உலகில்மூன்று தடவைகள் சளிக்காய்ச்சல் உக்கிரம் பெற்று உலகையே உலுப்பியிருக்கிறது.


1918 — 1919 க்கும் இடையில் 'ஸ்பானிஸ் புளு' என்ற பெயரில் பரவிய சளிக்காய்ச்சல் உலகளவில்50 மில்லியன் மக்களைப் பலியெடுத்தது. இதில் 5 இலட்சம் மக்கள் அமெரிக்கர். 1957 — 58 இல் 'ஏசியன் புளு' என்ற பெயரில் வந்த சளிக்காய்ச்சல் 70, 000 அமெரிக்கர்களை பலி எடுத்தது.

1968 — 69 இல் 'ஹொங்கொங் புளு' என்ற பெயரில் உலகில் பரவிய புளுக்காய்ச்சலில் 34,000 அமெரிக்கர்கள் இறந்தனர்.

எனவே இந்தப் பறவைக்காய்ச்சலைக் கண்டு அமெரிக்கா அலறுவதில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. அது சரி 'புளு' வைக் கண்டு பயப்படுவதில் அர்த்தம் இருக்கின்றது. ஆனால் பறவைக்காய்ச்சலைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.

மேலும் இதுவரை பறவைக்காய்ச்சலால்இறந்தவர்கள் என்று நிரூபிக்கப்பட்டவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையினரே. ஆனால் ஆயிரக்கணக்கில் கோழிகள் இறந்துள்ளன. வியட்நாம், தென் கொரியா, ஜப்பான், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இந்தப் பறவைக்காய்ச்சல் ஆயிரக்கணக்கில் கோழிகளைக் கொல்லுகின்றது. மேலும் இந்த காய்ச்சல் பரவாமல் இருக்க — மீதியாக உயிரோடு இருக்கின்ற கோழிகளையும் ஆயிரக் கணக்கான அளவில் கொன்றொழிக்கின்றனர். இந்த பறவைக் காய்ச்சல் இன்று மற்ற பறவைகளிலும் தொற்றிக்கொண்டிருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.





பறவையினங்களோடு புழங்குகின்ற — கோழிப் பண்ணைத் தொழிலாளர்கள், வைத்தியர்கள் போன்றோரையே பறவைக்காய்ச்சல் பீடிக்கின்றது. பறவைகளின் மல எச்சங்களில் காணப்படுகின்ற இந்த பறவைக்காய்ச்சல் வைரஸ்கிருமிகள், சுவாசத் தொகுதி வழியாக மனிதர்களைத் தொற்றிக்கொள்கின்றன. கோழி இறைச்சி, முட்டை போன்ற உணவுகள் மூலமாக இவை பரவுவதில்லை என்று உறுதியாக அறியப்பட்டுள்ளது. எனவே கோழி இறைச்சி — முட்டைகளை பயமின்றி உண்ணலாம் என்று அறிவிக்கின்றார்கள்.

தாய்லாந்து அரசர் கோழி இறைச்சி, முட்டை மூலம் பறவைக்காய்ச்சல் பரவியது என்று நிரூபித்தால் பல ஆயிரக்கணக்கான டொலரை பரிசாகத் தருவதாக பகிரங்கமாக அறிவித்துள்ளார். பறவைக்காய்ச்சலால் மனிதன் பீடிக்கப்பட்டால் — சாதாரண சளிக்காய்ச்சலுக்குரிய குணம் குறிகள் ஏற்படும். அது பின்னர் கடும் சளிக்காய்ச்சலாக மாறி — சுவாசத் தொகுதியை தாக்கி — மனிதனைக் கொன்றுவிடும். இப்படிப் பறவைக்காய்ச்சல் பரவுவதில் பெரிதாக பயப்பட வேண்டியதில்லை. ஏனெனில் பறவைக்காய்ச்சல் பறவை இனத்திலிருந்துமனித இனத்துக்கு பரவக் கூடியதே ஒழிய மனித இனதிலிருந்து மனிதனுக்கு பரவும் சக்தி அதற்கில்லை.

அப்படியென்றால் பறவைக் காய்ச்சல் மனித இனத்தை பயமுறுத்தும் நோயாக மாறுவது எப்படி?

சாதாரண புளு — சளிச்சுர காய்ச்சல் வைரஸால் பீடிக்கப்பட்டிருக்கிற மனிதனுக்குப் பறவைக் காய்ச்சல் தொற்று ஏற்பட்டால் இரண்டு வைரஸுகளும் தமது பரம்பரை அலகுகளை பரிமாறிக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.அப்படி ஏற்பட்ட பரிமாற்றத்தால் — சாதாரண'புளு' வைரஸ், உக்கிரம் பெற்று புதிய புளு வைரஸாக பரிணமிக்கிறது. இங்கு தான் ஆபத்தே ஆரம்பமாகிறது.

டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்.

பழைய புளு வைரஸ் காய்ச்சலுக்கு பழகிப்போன எமது மனித உடலுக்கு இந்த புதிய வைரஸை எதிர்க்கும் சக்தி இல்லை. எனவே காட்டுத் தீ போல் மனிதனுக்குள்ளேயே பயங்கரமாக இந்த வைரஸ் பெருவாரியாக பரவி புதிய சளிக்காய்ச்சல் கொள்ளை நோய் (EPIDEMIC) நிலையை அடைகிறது. இப்படி ஒரு நிலை ஏற்பட்டால்இலட்சக்கணக்கில் மக்கள் மடியநேரிடும் என்பதாலேயே உலகம் பறவைக்காய்ச்சல் பற்றி பயப்படுகிறது.அதுவும்அமெரிக்கா, பிரிட்டன் போன்ற குளிர்நாடுகளில் சளிக் காய்ச்சலின் பரவல்வீதம் அதிகமாகவே இருக்கும்.

பறவைக்காய்ச்சல் என்பது காலத்துக்குக் காலம் கோழிப்பண்ணைகளில் வந்து போகும் நோய் தான். ஆனால் இம்முறை வந்த பறவைக்காய்ச்சல் வித்தியாசமானது என்று விஞ்ஞானிகள் அறிந்துள்ளார்கள்.

முன்னைய காலங்களை போல் இந்த பறவைக்காய்ச்சல் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை.சிறிது நாட்களிலேயே — சீனா, தாய்லாந்து, வியட்நாம், கம்போடியா, இந்தோனேசியா, யப்பான், தாய்வான் என்று பரந்து தொற்றிக்கொண்டே போகின்றது.

ஓர் உதாரணம்

பறவைக்காய்ச்சலுக்குரிய வைரஸ் இம்முறை உக்கிரமானதாக விளங்குவதும் — கோழிகளில் இருந்து மனிதனுக்கு வெகு இலகுவாக தொற்றும் தன்மையுள்ளதாக இருப்பதும் இன்னொரு காரணம்.

அடுத்த முக்கிய காரணம்— இந்த பறவைக்காய்ச்சல் வைரஸ் பரம்பரை அலகுகளை இலகுவாக எளிதில் மாற்றிக் கொள்ளும் தன்மை உடையதாக இருப்பது.

இதனால் இன்னொருபுளு கொள்ளை நோய் உலகை பீடிக்கும் சந்தர்ப்பம் அதிகமாகவே உள்ளது.



இந்தப் பறவைக்காய்ச்சலுக்கு எதிர்ப்பு ஊசி மருந்துகளை தயாரிப்பதில் உலக சுகாதார ஸ்தாபனம் முழு அளவில் பாடுபடுகின்றது. எதிர்ப்பு ஊசி மருந்துகள் கூட முட்டைகளிலிருந்து தான் தயாரிக்கப்படுவதால் — இந்த தயாரிப்பில் முட்டைகளின் கலங்களை பறவை வைரஸ் சேதப்படுத்தி விடுவதால் — தடுப்பூசி தயாரிப்பதில் உலக சுகாதார ஸ்தாபனம் சிக்கலை எதிர்நோக்குகிறது.

பறவைக்காய்ச்சல் வைரஸ் புதிய வைரஸ் என்பதால் பழைய வைரஸ் மருந்துகள் இவற்றை அழிப்பதில்லை. எனவே புதிய வைரஸ் மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் வரை உலகின் உயிர் ஆண்டவனின் கையில் தான்.

---

# பெரிய தலை

## சின்ன விஷயம் அல்ல


மூளையின் அளவுக்கும் ஒருவரின் திறமைக்கும் தொடர்பு உண்டா? பல வருடங்களாக விவாதிக்கப்படும் ஒரு கேள்விதான் இது.

சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவில் நடைபெற்ற ஓர் ஆராய்ச்சியில் அதிக எடையோடு பிறந்த குழந்தைகள் பாடங்களைக் கற்கும் திறமை, நினைவாற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. ( அதிக எடை கொண்ட குழந்தைகளுக்கு தலையும் நிச்சயம் பெரிதாகத் தான் இருக்கும்)

மூளை வளர்ச்சியின் பெரும் பகுதி கருவிலேயே உருவாகிறதா? இந்தக் கோணத்தில் ஆராய்ச்சியை தொடரத் தீர்மானித்தார்கள் டாக்டர் கிறிஸ்டோபர் மார்ட்டினும் அவரது சகாக்களும். இவர்கள் சவுத்ஹாம்ப்டன் நகரில் உள்ள சுற்றுப்புற அறிவியல் மையத்தில் வேலை செய்பவர்கள்.

இதற்காக அவர்கள் பிறந்த குழந்தைகளின் தலைச் சுற்றளவு, உயரம் போன்றவற்றை அளந்தார்கள். நாளடைவில் அவர்களுக்கு பல்வேறு அறிவுக்கூர்மை சோதனைகளும் நடத்தப்பட்டன. குழந்தைக்கு மூன்றரை வயதான போது இதேபோன்ற சோதனைகள் மீண்டும் நடத்தப்பட்டன. குழந்தை வளர்ந்து பெரிய ஆளாக வந்த பின்பும் இதே போன்ற சோதனை நடத்தப் பட்டது.

பெரிய தலை கொண்டவர்களுக்கு நினைவாற்றல் மெதுவாகவே மங்குகிறது என்பதை இந்த ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடித்துள்ளார்கள். அதேபோல் மூளையின் பிற பாகங்களில் இயல்பாக சிறிது சிறிதாக அழியும் செல்களின் எண்ணிக்கை கூட பெரிய தலை கொண்டவர்களுக்கு அதிக அளவில் இருந்ததாம்.



கருவில் இருக்கும் கடைசி மூன்று மாதங்கள், குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு மிக முக்கியம்.

பிறந்த ஒரு வருடத்திலேயே மூளை இரு மடங்காகிறது.

இந்த ஆராய்ச்சிகளின் மூலம் கருவிலே எற்படும் மூளை வளர்ச்சியும் இளம் குழந்தையாக இருக்கும்போது எற்படும் மூளை வளர்ச்சியும்தான் நடுத்தர வயதைத் தாண்டும்போது ஒருவரது உடல்நலத்தை நிர்ணயிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன என்று கண்டறிந்திருக்கிறார்கள்.

இது தொடர்பான வேறு சில சுவையான தகவல்கள்.

*இரண்டு வயது முடிவடையும் போது மூளையின் எடையில் தொண்ணூறு சதவிகிதம் வளர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. குழந்தைப் பருவத்தில் மண்டைஓடும் தலையைச் சுற்றியுள்ள தோல்பகுதியும் மிகவும் மெல்லியவை. எனவே தலையின் சுற்றளவை வைத்துக் கொண்டே மூளையின் அளவைத் தோராயமாகக் கூறிவிடுவது எளிதுதான்.

*ஆனால் பெரியவரானபிறகு ஒருவருக்குத் தலை பெரிதாக இருக்கிறது என்றாலே மூளையும் பெரிது என்று உடனடியாக முடிவெடுத்துவிட முடியாது. இரத்தம் உள்ளிட்ட வேறு சில திரவங்கள் மண்டையில் சேர்ந்திருப்பதாலும், மண்டையோடு மிகவும் தடிப்பாக இருப்பதன் காரணமாவும் கூட தலை பெரிதாக இருக்கலாம்.


*சிறு குழந்தைகளுக்கு தலையின் ஒரு பக்கம் தட்டையாகவும் மறுபக்கம் புடைத்துப் பெரிதாகவும் இருப்பதும் சகஜம். இதற்குக் காரணம் குழந்தை பெரும்பாலும் ஒரே பக்கமாகத் தலையைவைத்து படுத்துக் கொள்வதுதான். ஆனால் இதற்காக குழந்தை வலப்பக்கமும் இடப்பக்கமுமாக மாறிமாறித்தான் படுக்கவேண்டும் என்று வற்புறுத்தாதீர்கள். ஒரு வயதாகும் போது இது சரியாகிவிடும்.

பெரிய தலை என்பது பரம்பரையையும் பொறுத்த சங்கதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புமிகு பிரதமர் அவர்களின் இதயத்திலிருந்து...



"டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்த போது எனது வழிகாட்டலின்கீழ் அவர் கொடிய யுத்தத்தின் மத்தியிலும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு விஜயம் செய்து மக்களைச் சந்தித்தார். தனது உயிருக்கு ஆபத்து நேரிட்ட பொழுதும் கூட மக்களின் மனதை வென்று அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்தார்.

"வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் அவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக அவருக்கு புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள் குடியமர்த்துகை அமைச்சர் பதவியை வழங்கினேன்.

"அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழியில் சென்று வடக்கிலும், தெற்கிலுமுள்ள மக்களுக்கிடையிலான ஒற்றுமையைப் பேணுவதற்காக அளவற்ற இன்னல்களுக்கு முகம் கொடுத்து மக்களின் ஐக்கியத்திற்காக பல நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

அவர் வடக்கிலும், தெற்கிலுமுள்ள மக்களை ஒன்றிணைக்கும் முன்னோடி ஆவார்."

**ரணில் விக்கிரமசிங்க,**
**பிரதமர்,**
**இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு.**

**பேராசிரியர், டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன அவர்களைப் பற்றி மாண்புமிகு பிரதமர் அவர்கள் 2002 ஆகஸ்ட் 3 ஆம் திகதி விடுத்த செய்தியிலிருந்து எடுக்கப்பட்டது**



அனைவருக்கும் முன் முதன்மையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஹுல், பிரியங்காவின் பிரசாரத்தை வருண் மூலம் முறியடிக்க முயற்சி

## பி.ஜே.பியின் புதிய தேர்தல் தந்திரம்

கொள்கை அற்ற அரசியல் இந்தியாவில் சர்வ சாதாரணம். எனினும் பதவியைப் பிடிக்க இப்படியுமா அடிப்படைகளை மறந்து அரசியல்வாதிகள் நடக்க வேண்டும் என்று கூறும் அளவுக்கு சமீபகால இந்திய அரசியல் சென்று கொண்டிருக்கிறது.

ராஜீவ் கொலையின் காரணகர்த்தா என தி.மு.கவை நேற்றுவரை வசைபாடி வந்த காங்கிரஸ் இன்று ஆட்சியைக் குறிவைத்து தி.மு.கவுடன் குலாவுகிறது. ஈழத்தமிழர் விடயத்தில் அனுதாபம் காட்டும் இரண்டே இரண்டு தமிழக கட்சிகளான ம.தி.மு.கவும், பா.மா.கவும் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்து விட்டன. மறுபுறம் 1999இல் தனது ஆட்சியை வீழ்த்திய ஜெயலலிதாவுடன் பி.ஜே.பி வெட்கமின்றி சேர்ந்து கொள்ளப்பார்க்கிறது.

ஜெயலலிதாவோ அரசியலில் ஒரு விசித்திரப் பிறவி. முதலில் பி.ஜே.பியுடன் கூட்டு இல்லை என்றார். பிறகு ஒருவாறு ஒப்புக் கொண்டார். இப்போது மிககுறைந்த எண்ணிக்கையான ஏழு ஆசனங்களையே அதுவும் புதுக்கோட்டை நீங்கலான ஏழு தொகுதிகளையே பி.ஜே.பிக்கு தர ஒப்புக் கொண்டுள்ளார்.

புதுக்கோட்டை எம்.ஜி.ஆரின் அமைச்சரவையிலிருந்த திருநாவுக்கரசுவின் தொகுதி. 1988இல் ஜானகி — ஜெயலலிதா சண்டையின் போது உறுதியாக ஜெயலலிதா பக்கம் நின்றவர் திருநாவுக்கரசு. பின்னர் பிரிந்து எம்.ஜி.ஆர் அண்ணா தி.மு.கவை நடத்தி கடந்த தேர்தலில் பி.ஜே.பி கூட்டணியில் சேர்ந்து புதுக்கோட்டையில் வென்றார். பிறகு பி.ஜே.பியிலேயே சேர்ந்து மத்தியில் அமைச்சராகவும் இருக்கிறார். அ.தி.மு.க.வில் எவர் தோற்றாலும் தோற்கடிக்கப்படமுடியாத மக்கள் செல்வாக்கு மிக்கவர் திருநாவுக்கரசு. அறந்தாங்கி சட்டப் பேரவைத் தொகுதியில் தொடர்ச்சியாக தோல்வியே காணாமல் வெல்பவர். 1996இல் சட்டசபை தேர்தலில் 'ஜெ' தோற்றபோதும் அ.தி.மு.க 4 இடங்களை வென்றது. அவற்றில் அறந்தாங்கியும் ஒன்று. பின்பு லோக்சபா தேர்தலில் அறந்தாங்கி உள்ளடங்கும் புதுக்கோட்டை தொகுதியில் வென்றார். அவர் பழமையை மறக்கத்தயார். அ.தி.மு.கவுடன் பி.ஜே.பி கூட்டுச் சேர்வதை வெகுவாக ஆதரித்தவர். ஆனால் 'ஜெ' வன்மம் தீர்க்கப்பார்க்கிறார். ஆகவே புதுக்கோட்டையில் திருநாவுக்கரசு இல்லாவிடின் பி.ஜே.பிக்கு அத்தொகுதியைத் தரவும் 'ஜெ' தயார். இதனால் அ.தி.மு.க — பி.ஜே.பி கூட்டணி இழுபறியிலுள்ளது.

மறுபுறத்தில் தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ் — பா.மா.க இழுபறி புதுவைத் தொகுதியில் தொடர்கிறது. புதுவைத் தொகுதியில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டாலே வெல்லும் அளவுக்கு செல்வாக்குண்டு. கடந்த 12 லோக்சபா தேர்தல்களில் புதுவையில் ஒன்பது தடவைகள் காங்கிரஸ் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் காங்கிரஸ் முகாமில் கடும் எதிப்புக் கிளம்பியுள்ளது. இது குறித்து கடந்தவாரம் சென்னை வந்த சோனியா காந்தி கருணாநிதியுடன் பேசிய


மேனகா காந்தியும் மகன் வருணும் பிரதமர் வாஜ்பாயை சந்திக்கின்றனர்.

தாக தெரிகிறது. எனினும் முடிவு எதுவும் இல்லை.

சேலத்தில் காங்கிரஸுக்கு பதில் தி.மு.கவும் கடலூரில் தி.மு.கவுக்கு பதில் பா.மா.கவும் புதுவையில் பா.மா.கவுக்கு பதில் காங்கிரஸும் போட்டியிடலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ம.தி.மு.க கடந்த ஆட்சியில் பி.ஜே.பியுடன் இணைந்து மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றாலும் வரும் தேர்தலின் பின்பு காங்கிரஸ் அரசு அமைந்தாலும் அதில் இடம் பெறப்போவதில்லை என தெரிவித்துள்ளார் வை.கோ.

அகில இந்திய அளவிலும் காங்கிரஸும் பி.ஜே.பியும் கூட்டணிகள் அமைப்பதில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன. ஆந்திராவில் தனிமாநிலம் கோரும் தெலுங்கான ராஷ்ரிய சமித்தியுடன் காங்கிரஸ் கூட்டணி சேருவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. இது சந்திரபாபு நாயுடுவுக்கு பெரும் பின்னடைவாகும். ஆந்திராவின் 42 லோக்சபாத் தொகுதிகளில் 16 தொகுதிகள் தெலுங்கானா பிராந்தியத்தில் உள்ளன. கடந்த தேர்தலில் இப்பிராந்தியம் உட்பட ஆந்திரா முழுவதும் தெலுங்குதேசம் — பி.ஜே.பி கூட்டணி அமோக வெற்றி பெற்றது. மொத்தம் 42 தொகுதிகளில் தெலுங்கு தேசம் 28 தொகுதிகளிலும் பி.ஜே.பி 7 தொகுதிகளிலும் வென்றன. காங்கிரஸ் ஐந்தே இடங்களில் தான் வெல்ல முடிந்தது. இம்முறை தெலுங்கானாவில் நாயுடு தோல்வி அடைவார் என தெரிகிறது. காரணம் புதுமாநிலம் அமைவதை நாயுடு எதிர்க்கிறார். காங்கிரஸ் ஆதரிக்கிறது.

அண்டை மாநிலமான கர்நாடகாவின் சட்டசபையும் கலைக்கப்பட்டுள்ளது. சட்டசபை கலைக்கப்பட ஆறு மாதங்கள் உள்ளபோதும் லோக்சபா தேர்தலுடன் சேர்ந்து சட்டசபைத் தேர்தல்களையும் நடத்த பதவியிலுள்ள காங்கிரஸ் அரசு முடிவெடுத்துள்ளது. இதனுடன் சேர்ந்து 4 மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்கள் லோக்சபா தேர்தலுடன் நடத்தப்பட உள்ளன. ஒரிசா, ஆந்திரா, சிக்கிம் என்பவவையே ஏனைய 3 மாநிலங்கள். ஒரிசாவில் ஆட்சியிலுள்ள பி.ஜு ஜனதா தளம் பி.ஜே.பியின் கூட்டாளி. அதனை எதிர்த்து காங்கிரஸ் எதிர்க்கட்சிக் கூட்டணியை வலுப்படுத்த முயன்று வருகிறது.

இது இவ்வாறிருக்க இந்திய அரசியலில் குடும்ப அரசியலுக்கு முதன்மை கொடுப்பதாக காங்கிரஸைச் சாடிவந்த பி.ஜே.பி அத்தகைய அரசியலுக்கு தானும் அடிமையே என்ற கேவலமான உண்மையை எடுத்துக் காட்டியுள்ளது. சஞ்சய் காந்தியின் விதவை மனைவி மேனகா காந்தியையும், மகன் வருண் காந்தியையும் பெரும் பிரயத்தனப்பட்டு தனது கட்சியில் சேர்த்துக்கொண்டதன் மூலமே இந்த வெட்கத்துக்கு தன்னை ஆளாக்கிக் கொண்டுள்ளது பி.ஜே.பி.

சஞ்சேய் காந்தியின் மரணத்தின் பின்பு இந்திராவுடனும், ராஜீவுடனும் விரோதித்துக் கொண்டு தனித்து வாழ்ந்த மேனகா, இந்திரா மரணித்த பிறகு 1989 இல் முதன்முதலாக லோக்சபாத் தேர்தலில் போட்டியிட்டு உத்தரப் பிரதேசத்தின் பிலிபீட் தொகுதியின் எம்.பியானார். வி.பி.சிங் அமைச்சரவையில் இணை அமைச்சருமானார். பின்பு வந்த தேர்தல்களில் அதே தொகுதியில் சுயேச்சையாக வெற்றி பெற்று வந்தார். கடந்த பி.ஜே.பி. அரசில் சுற்றுப்புறச் சூழல் அமைச்சராகவும் இருந்தார்.

எஸ். சுரேந்திரஜித்

அவரையும் மகனையும் பி.ஜே.பி யில் சேர்த்ததன் மூலம் சோனியா மற்றும் ராஹுல், பிரியங்கா ஆகியோரின் பிரசாரத்தை முறியடிக்க பி.ஜே.பி திட்டமிடுகிறது. சமீபத்தில் ராஹுல், பிரியங்கா ஆகியோர் உத்தரப்பிரதேசத்தில் நடத்திய பிரசாரத்துக்கு இருந்த ஆதரவு பி.ஜே.பி யை கலக்கியுள்ளது. பி.ஜே.பி.யின் கோட்டையாகவும் லோக்சபாவின் 543 தொகுதிகளில் 80 ஐக் கொண்ட பெரிய மாநிலமாகவும் இருந்து வரும் உத்தரப்பிரதேசத்தில் வெல்வது பி.ஜே.பிக்கு மிக முக்கியம். அங்கு முதல்வர் முலாயமின் சமாஜ்வாதி, பி.ஜே.பி, மாயாவதியின் பகுஜன் சமாஜ் மற்றும் காங்கிரஸ் என நான்கு முனைப்போட்டி இருக்கும். இதில் காங்கிரஸ் மாயாவதியுடன் இணைய கடுமையாக முயன்று வருகிறது. அவ்வாறு இணைந்தால் பி.ஜே.பி கடைசி இடத்துக்குப் போய்விடும். இதனால் வாஜ்பாயின் புகழை மட்டும் நம்பியிருந்து கோட்டை விட்டுவிடக்கூடாது என்பதில் பி.ஜே.பி கவனமாக இருக்கிறது. இதனால்தான் வாஜ்பாயே பரம எதிரி ஜெயலலிதாவின் ஆட்சியை கன்னியாகுமரியில் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

இதற்கிடையில் போபஸ் பீரங்கிப்பேர ஊழலில் ராஜீவையும் குடும்பத்தையும் நிரபராதிகள் என நீதிமன்றம் விடுவித்துள்ளது. இது சோனியாவுக்கு ஆறுதலும் பி.ஜே.பிக்கு ஏமாற்றமாகும்.

# ரென்ஷன்! ரென்ஷன்!! ரென்ஷன்!!

எங்கும் ரென்ஷன், எதிலும் ரென்ஷன் யாரைப் பார்த்தாலும், எவரிடம் கேட்டாலும் எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் ரென்ஷனாகவே காணப்படுகிறார்கள்.

காலையில் எழுந்தால், கணவரை அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். அவர்களுக்கு காலை உணவு தயார் செய்து, பகல் உணவையும் கையில் கொடுத்து விட வேண்டும். குறிப்பிட்ட நேரத்துக்குள் பிள்ளைகளுக்கு பாடசாலை வானும் வந்து விடும்.

இவற்றை எல்லாம் நினைத்தாலே ஓர் இல்லத்தரசிக்கு டென்ஷன் தான். போதாக் குறைக்கு வீட்டில் வயது போன பெற்றோரோ அல்லது மாமா மாமியோ இருப்பார்கள். இவர்களை வேறு கவனிக்க வேண்டுமே!

எல்லாம் செய்து முடித்துவிட்டோம் என்று சும்மா இருக்க முடியுமா? வீட்டைத் துப்புரவு செய்வது, ஒழுங்காக வைப்பது, துணி மணிகளைத் தோய்ப்பது. இவற்றையும் செய்ய வேண்டாமா?

இவற்றை எல்லாம் சமாளிக்க என்ன வழி? வேலைகளைக் கண்டு மலைத்துப் போய் விடாதீர்கள். எல்லாவற்றையும் பதற்றப்படாமல் எப்படிச் செய்வது என்று பட்டியல் ஒன்றைத் தயாரித்துக்கொள்ளுங்கள்.

முதலில் தேவையான பொருட்களை நேரகாலத்தோடு வாங்கி வைத்திருங்கள். அடுத்த நாள் காலையில் என்னென்ன சமையல் செய்ய வேண்டும் என்பதனையும் தீர்மானித்துக்கொள்ளுங்கள். நேரமிருந்தால் முதல் நாள் இரவு ஓரளவு அடுத்த நாள் காலையில் செய்ய வேண்டிய வேலைகளை ஆயத்தப் படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்.

வேலைகளை ஒவ்வொன்றாக ஒழுங்கு முறைப்படி செய்து முடியுங்கள். எல்லாவற்றையும் திட்டமிட்டபடி செய்து முடித்தால் பதற்றமோ பரபரப்போ ஏற்படாது.

பகல் உணவுக்குப் பின்பு சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது தான் மிகுதி வேலைகளையும் களைப்பின்றிச் செய்து முடிக்கலாம்.

மாலையில், வெளியில் சென்றவர்கள் வீடு திரும்பி வரும்போது வீட்டை அழகாக வைத்திருங்கள். அது மட்டுமல்லாமல், நீங்களும் 'பளிச்'சென்று இருங்கள். அப்போது தான் களைத்துப்போய் வீடு திரும்புகிறவர்களுக்கும் ஒரு உற்சாகம் பிறக்கும்.

வருபவர்கள் என்னென்ன பிரச்சினைகளுக்கு மத்தியில், எவ்வளவு டென்ஷனோடு வருவார்களோ... அதனால் வந்ததும் வராததுமாய் கேள்விகளைக் கேட்டு அவர்களை மேலும் எரிச்சலூட்டாதீர்கள்.

வந்தவர்களுக்கு சிற்றுண்டி கோப்பியோ, தேநீரோ கொடுத்து அவர்களை ஆசுவாசப் படுத்தி கொஞ்சம் 'ரிலாக்ஸ்' ஆக இருக்க விடுங்கள். பின்பு அவர்களே உங்களிடம் அன்று நடந்தவற்றைச் சொல்ல ஆரம்பிப் பார்கள். இதனால் உங்களுக்கும் ரென்ஷன் இல்லை, அவர்களின் ரென்ஷனும் குறையும்.

இந்த வேளையில் எல்லோரும் கூடி கலகலப்பாக சிரித்துப் பேசி சந்தோஷமாக இருந்தால் எல்லோருக்குமே மகிழ்ச்சி தான்!

இரவில் படுக்கைக்குப் போகுமுன்பு கணவரோடு ஏதும் பிரச்சினையாக இருந்தால்



பேசித் தீர்மானித்துக் கொள்ளுங்கள். மனதில் சுமையோடு, ரென்ஷனோடு நித்திரைக்குச் சென்றால், நித்திரையும் வராது. மனப் பாரமும் குறையாது.

மனதில் எதையும் மறைத்து வைத்துக் கொண்டு குமுறிக்கொண்டிருக்காமல், உங்களுக்கு மிகவும் நெருங்கிய, நம்பிக்கையான ஒருவரிடம் எல்லாவற்றையும் சொல்லித் தீர்த்து விடுங்கள். உங்கள் மனம் இலேசாகி விடும்.

கூடயவரை நேர்மையாகவும், உண்மையாகவும் ஒளிவு மறைவின்றியும் நடப்போமானால் அனாவசிய உறுத்தல்கள், பயங்கள் எதுவும் இன்றி நிம்மதியாக இருக்கலாம்.

இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விடயம், எவரிடமும் கடன்படாதிருப்பது. கடன் என்றாலே ரென்ஷன் தான். எப்போது கடன்காரர் வருவார், எப்படி கடனைத் திருப்பிக் கொடுப்பது என்றெல்லாம் சிந்திக்கும்போது... எப்படி ரென்ஷன் இல்லாமல் இருப்பது?

'கடன்பட்டார் நெஞ்சம் போல'என்று ஒரு கூற்று வருகிறதே.. அதை நினைக்கும் போதே 'கடன் என்றாலே கலக்கம்' என்று பரிகிறதல்லவா? எனவே கூடியவரை கடன் தொல்லை இல்லாமல் வாழப் பழகிக்கொள்ளுங்கள்.

உங்களுக்கு நேரம் இருக்கும் போது, உங்கள் வீட்டுத் தோட்டத்தில் பூங்கன்றுகளை வளர்த்து விடுங்கள். அவை பூத்துக் குலுங்கும்போது, அவற்றைப் பார்த்து ரசிப்பதில் ஓர் ஆனந்தம் ஏற்படும். இனிமையான பாடல்கள் மனதுக்கு எப்போதுமே இதமளிக்கும். நல்ல புத்தகங்களை வாசியுங்கள். எவ்வளவு வேலைகளுக்கு மத்தியிலும் ஒரு பத்து நிமிடங்களாவது கடவுளைத் தியானிக்க மறக்க வேண்டாம்.

எல்லோருடனும் அன்பாகப் பேசிப் பழகி, கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்து, வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையோடும், பிடிப்போடும் தூய மனதோடும், வாழ்ந்தால் ரென்ஷன் எங்கே வரப்போகிறது? ஏன் வரப்போகிறது?

எஸ்.ஜே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திர மனிதன்மீது குதூகலமான சவாரி



ஜப்பானிய விஞ்ஞானிகள் பாரமான பொருட்களைத் தூக்கிக்கொண்டு நடக்கும் இயந்திர மனிதனைத் தயாரித்திருக்கிறார்கள். ஜப்பானிய வசேதா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தயாரித்துள்ள இந்த இயந்திர மனிதன் மீது ஒரு பெண் ஏறி அமர்ந்திருக்க இயந்திர மனிதன் "ஹாய்" ஆக நடந்து செல்வதைப் படத்தில் காணலாம்.

# மனித எலும்புகள் பற்றி சிற்பக்கலை வர்ணனை



மனித எலும்புகளை இயற்கையாகக் காட்சிக்கு வைக்கும் போது மருத்துவத்துறையைச் சார்ந்தவர்களே அவற்றை ரசிக்கக்கூடியதாக இருக்கும். இதன் காரணமாக லண்டன் நூதன சாலை கடைப் பிரிவினர் மனித எலும்புகளைச் சிற்பங்கள் மூலம் வர்ணிக்கும் கண்காட்சி ஒன்றை அண்மையில் நடத்தினர். காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஒரு சிற்பம் இது.


மசாலா மிக்ஸ்

# இசைமூலம் காதலை வெளிப்படுத்த முயற்சி

மனதில் காதல் ஏற்பட்டு விட்டால் அதனை வெளிப்படுத்துவது அவ்வளவு சுலபம் அல்ல. அண்மையில் காதலர் தினம் வந்த போது இந்த உணர்வைப் பெற்றவர்கள் அநேகம். கலிபோர்னியாவிலுள்ள லொஸ்ஏன்ஜல்ஸ் கலை மன்றத்தில் நடைபெற்ற விழாவில் இசை வழங்கிய பாடகி பேயொன்ஸ் நோய்ஸ் இசை மூலம் காதலை வெளிப்படுத்த முயற்சிப்பதைப் படத்தில் காணலாம்.




# வெண்ணிற வேங்கையின் மிதமிஞ்சிய தாய்ப்பாசம்



நெதர்லாந்திலுள்ள அமெர்ஸ்பூர்ட் மிருகக் காட்சிச்சாலையில் ரீனா எனப்படும் வெண்ணிற வேங்கை இரு பெண்குட்டிகளை ஈன்றெடுத்தது. மிருகக்காட்சிச் சாலையில் மிகவும் அபூர்வமான முறையில் பிறந்த இந்த வெண்புலிக் குட்டிகளுக்கு நாட்டின் மகாராணி, இளவரசி ஆகியோரின் பெயர்களையே சூட்டியிருக்கிறார்கள். தனது குட்டிகள் மீது அன்பு கடந்ததாய்பாசம்கொண்ட ரீனா குட்டிகளை வாயினால் கௌவி பாதுகாப்பான இடங்களில் சேர்த்திருக்கின்றது.

# 'ஓரங்குட்டான்' இனம் அழியாதிருக்க ஏற்பாடு



மலேசியாவிலுள்ள காடுகள் அழிக்கப்படுவதால் குரங்குகள் அருகி வருகின்றன என்று சூழல் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அதிலும் போர்ணியோ தீவுகளில் ''ஓரங்குட்டான்'' குரங்கு இனம் பெரும் எண்ணிக்கையில் அருகி வருகின்றது என்று ஆய்வுகள் மூலம் கண்டறியப் பட்டிருக்கின்றது. ''ஓரங்குட்டான்'' குரங்குகளுக்கென்றே சரபாக்கில் நிறுவப்பட்டுள்ள புனர்வாழ்வு மையத்தில் தாயின் அரவணைப்பில் அமைதி காணும் குட்டி.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



பெப்ரவரி 14 , சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை இஷா கோபிகர் உடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:

*1.சி.கயல்விழி, 324,கே.கே. எஸ் வீதி, சுன்னாகம். 2.சு.யமுனா, முருகமூர்த்தி கோவிலடி, தாவடி. 3.சி.கலியுகன், சிவன் வீதி, கிளிநொச்சி. 4.சி.முகுந்தன், கந்தரோடை, அளவெட்டி . 5. சி.செ.சிவகடாட்சம், இணுவில் வீதி, மானிப்பாய்.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது?

இவர் முன்னைய காலத்தில் சிறந்த நகைச்சுவை நடிகராக விளங்கியவர். இவருடைய மகனும் பிற் காலத்தில் சிறந்த கதாநாயகனாக இருந்தவர்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின் வரும் எங்கள் புதிய முகவரிக்கு மார்ச் 06 ஆம் திகதிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரதிநிதித்துவ அதிகரிப்பே தமிழர்களின் இன்றைய அபிலாஷை

## பேரினவாதிகள் சங்கமம் ஏற்படுத்தி இருக்கும் திருப்பம்

நாடளாவிய ரீதியில் தமிழர் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற உணர்வு தமிழ் மக்கள் மனங்களில் தற்போது அதிகரித்துள்ளது.

நாட்டில் எழுந்துள்ள சமகால பேரினவாதிகளின் கைங்கரியங்களினால், இந்த உணர்வு தமிழ் மக்கள் நெஞ்சில் ஆழ வேர் ஊன்றி இருக்கிறது.

ஜனநாயக ரீதியாக எமது பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும் போதே ஆளும் வர்க்கம் எம் மீது கவனம் செலுத்தும் என்பதை கடந்த கால அரசியல் நடைமுறைகள் வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளன.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கு, மலையகம் மட்டுமன்றி கொழும்பிலும் எமது பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்பதில் கொழும்பு வாழ் தமிழர்களும் உணர்வு நிலை பெற்றுள்ளார்கள்.

கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1 லட்சத்து 36 ஆயிரம் தமிழ்வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஒருமுகப்பட்டு செயற்படுவார்களானால் கொழும்பு மாவட்டத்தில் 3க்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறும் வாய்ப்பு உள்ளது.

கடந்த காலங்களில் கொழும்பு வாழ் தமிழர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கிகளாகவே செயற்பட்டு வந்தனர். 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னரே, தமிழ் பிரதிநிதித்துத்தின் அவசியம் முன் வைக்கப்பட்டது.

இந்த அவசியம் முன் நிறுத்தப்பட்டும் கூட, தனித்துவமாக ஒரு தமிழ் கட்சி கொழும்பில் உள்ள தமிழர்களின் வாக்குகளைப் பெற்று பிரதிநிதித்துவத்தைப் பெறவில்லை என்பது கடந்த கால வரலாற்று உண்மை.

ஐக்கிய தேசியக் கட்சியில் தமிழர் எவராவது போட்டியிட்டால் அவர்களுக்கு வாக்குகளை வழங்கும் எண்ணத்தையே கொழும்பு வாழ் தமிழ் மக்கள் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைப்பாடு தொடர்பாக ஆராயுமிடத்தில் 1994 ஆம் ஆண்டு தேர்தலிலே கொழும்பில் மூன்று தமிழர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட போதும் அவர்கள் வெற்றி பெற முடியவில்லை.

அன்றைய தமிழ்வாக்காளர்கள் கணக்கெடுப்பின்படி 1 லட்சத்து 22 ஆயிரம் வாக்குகள் இருந்தன. தமிழ் வாக்குகள் என்ன காரணத்தால் சிதறடிக்கப்பட்டன என்பது கேள்வியாகின்றதல்லவா?

இதே போன்று கடந்த தேர்தலில் மூவர் – ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்டபோதும் ஒருவர் மட்டுமே 60 ஆயிரம் வாக்குகளை பெற்று வெற்றிபெற்றார். அப்பொழுது வாக்காளர் இடாப்பில் 1 லட்சத்து 36 பேர் தமிழ் வாக்காளர்களாக இருந்தமை இங்கு நினைவு கூறத்தக்கது.

இவற்றை எல்லாம் நோக்கும் போது கொழும்பு வாழ் தமிழர்கள் தமது தமிழர் பிரதிநிதித்துவத்தை நிலை நிறுத்திக்கொள்வதில் கடந்த காலங்களில் தவறிழைத்துள்ளார்கள் என்பது நிருபணமாகின்றது.

கடந்த கால தவறுகள் மேன் மேலும் ஏற்படாது தமிழ் பிரதிநிதித்துவம் கொழும்பிலும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதில் தமிழ் வாக்காளர்கள் இம்முறை கவனம் செலுத்த வேண்டியது அவசியமே!

தேர்தலில் வாக்களிப்பது என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமை. வாக்காளர் இடாப்பில் பதிந்து கொள்வதில் தமிழ் மக்கள் எடுக்கும் ஆர்வம், வாக்களிப்பதில் காட்டப்படுவதில்லை என்பது கவனத்திற்குரிய ஒன்றாகவுள்ளது.

இவ்விடயத்தில் தமிழ் மக்கள் இம் முறை உணர்வோடு செயற்பட வேண்டியது அவசியமாகும், அதேநேரத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை அடையக்கூடிய தகுதியுள்ளவர்களைத் தெரிந்து தமது வாக்குகளை வழங்க வேண்டியதும் அவசியம் ஆகும்.

வீணே தமிழ் வாக்குகள் சிதறடிக்கப்படுமானால் அதன் மூலமும், தமிழ் பிரதிநிதித்துவத்தை இழக்கும் வாய்ப்பும் உருவாகலாம் என்பதைகருத்தில்கொண்டு இம்முறை செயற்பட வேண்டும் என்பதே தமிழ் உணர்வு மேலோங்கி நிற்கும் தமிழ் நெஞ்சங்களின் எதிர்பார்ப்பாகும்.

**நாச்சியூரான்.**

---

# கவிதைப் பூங்கா

### காதல் தூது

உன்னைச் சேர்வதற்காய்
நான் சுவாசிக்கிறேன்.
உன்னைப் பார்ப்பதற்காய்
நான் பூக்களை நேசிக்கிறேன்.
உன் குரலைக் கேட்பதற்காய்
உன்னை தினம் மீட்டுகிறேன்.
என் காதலைச்
சொல்வதற்காய்
நெஞ்சமே துடிக்கிறது.
என் மீது சுமத்தப்பட்ட காதல்
காயங்களை ஆற்றுவதற்காய்
இயற்கையே தூது போ!

*க.தர்ஷினி,*
*ஊரெழு.*

### நட்பு

மனதை மனதாலறியும்
மனோ தத்துவம்.

### காதல்

காந்த முனையில்
ஒத்த முனைக்கும்
ஒவ்வாத முனைக்கும்
இடைப்பட்ட ஈர்ப்பு விசை.

### இதயம்

நாடியை நாளமாய்
நமக்குள் மாற்றிடும்
எரிபொருளில்லா
இயந்திரம்.

### செல்வம்

ஆள்கடல் நடுவே
அமிழ்ந்தாடும் வாயுக்குமிழ்.

### வாழ்க்கை

அச்சின் சுழற்சிக்கும்
சக்கரத்தின் சுழற்சிக்கும்
நடுவே இடம்பெறும்
அந்தரங்க சுழற்சி.

*சி. விதுரன்,*
*வேரவில்.*

### வேண்டும்

முத்தமிடத் தூண்டும்
உன் கன்னங்கள்.
கன்னமிடத் தூண்டும்
உன் உதடுகள்.
இடையிடையே சட்டம்
போடும் உன் வெட்கங்கள்.
வேண்டுமடி மொத்தமாய் நீ.
இன்றைக்கு நாளைக்கல்ல —
ஓராயிரம் ஆண்டுகளுக்கு!

*என்.சுந்தரராஜன்,*
*கிழக்குப் பல்பலைக்கழகம்.*

### ஏன் வந்தாய்?

தென்றலைத் தூதாக
நானனுப்ப,
புயலை ஏன் அனுப்பினாய்?
உறக்கமின்றி
நான் தவிக்க,
இரக்கமின்றி
ஏன் அரக்கி ஆனாய்?
கல் அடிகள் தாங்கிய
நான் — உன்
சொல்லடிகள் தாங்காமல்
போர் தொடுத்த என்னை
மண்டியிட வைக்கிறாய்.
முழு மனதுடன்
நான் வர,
மின்னொளியே — நீ
முழக்கத்துடன் ஏன் வந்தாய்?

*கே.என்.குருபரன்,*
*கருநாட்டுக்கேணி.*

### நினைவில்

என்னவளே...
உனைப்பிரிந்து
கடல் தாண்டிக் காத்திருக்கிறேன்
உன் வருகைக்காய்...
விழியோரம் வழிகின்ற நீர்
கடலோடு சங்கமத்தில்!
தொட்டு நாவில்
வைத்துப்பார்
பெண்ணே
உப்புக்கரிக்கும்!
உன் பிரிவால் சொரிந்த
விழி நீரின்
உப்புத் தானடி அது.
புரிந்துகொள்
என்றும் உனக்காய் நான்...!

*சி.உதயன்,*
*பிரான்ஸ்.*

### கண்ணீர்

காளையரால்
கைவிடப்பட்ட கன்னியர்
குழிக்கும் இடம்.

### வெட்கம்

பெண்களுக்கென
இறைவனால்
வழங்கப்பட்ட
ஊமை மொழி.

*தெ. சதீஸ்பாபு*
*கைதடி.*

### எப்போது வருவாய்?

கட்டிலில் வீழ்ந்து
கண்கள் மூடும்
நிசப்தப் பொழுதுகளில்
சப்தமின்றியமர்ந்திடும்
உன் நினைவுகள்...!
விழிகள் வெடிக்கும்
விடியல்களில் கூட
நீண்டு பொழியும்
உன் நினைவு மழை.
உன் வருகையின்
இதமான பொழுதுக்காய்
காத்துக்கிடக்கும்
ஞாயிறுகள்.
உன்னோடு பேச
எத்தனையோ இருக்க
வெளி வர மறுத்து
வாசலில் நின்று தவிக்கும்
வார்த்தைகள்.
இடையிடையே
பலிவாங்கிப்போகும்
பல மிரட்டல்கள்.
இத்தனைக்கும் மத்தியில்
தவிக்கும் என்னுயிருக்கு
இதம் தர
நீ எப்போது வருவாய்?

*க.தவசீலன்*
*விசுவமடு.*

### பெண்ணே

மணிக்கணக்காய்
முயற்சிக்கிறேன்.
மறக்க முடியவில்லை!
உன்னை அல்ல —
நீ என் மேல்
கொண்ட போலி நட்பினை!
என்னைக் காதலிக்கிறேன் என்றாய்
தேனாகப் பேசினாய்.
இன்று மறந்துவிடு என்கிறாய்.
கண்டதும் காதல் வராது.
நினைத்தவுடன் காதல் போகாது.
உனக்கெங்கே
இது புரியப்போகிறது?

*சி.பிரியா,*
*பளை*

### ஸ்நேகிதனே...

உன் வீட்டத் தோட்டத்தில்
மரங்கள் வளர்த்திடு.
நாளை
உதிரும் இலைகள்
என் பெயரை
கோலமிட்டுக்காட்டும்.

*எஸ்.வசந்தி,*
*வட்டக்கச்சி.*

### தொடும் பயணம்

நான் அலைமோதி
திரிந்த போது
ஒரு வட்ட நிலவு
எனைச்சுற்றி
விட்டம் பார்த்தது.
கண்களால் என்னை
கைது செய்து,
பாசமூட்டி,
நேசம் தந்து,
என்னோடு
தூர நடந்து வர
ஒப்புக்கொண்டது.
எங்கள் பயணத்தில்
அவ்வப்போது ஊடல்.
இடையிடையே கூடல்.
இருவரும்
தொட்டுவிடும்
தூரத்தில்.
அந்த நேரம்
என்றுமில்லாத நிதர்சனம்.
எங்கள் வழியே
முட் செடிகள்!
இருக்கட்டும்...
இரத்தம் துடைத்து
நடக்கிறோம்.
அவள் என்
உயிரில் கலந்தவள் — என்
எண்ணத்தில்
உறைந்து போனவள்.
கரம் பற்றி ஓரிடம் தரித்து
எங்கள் பயணத்தை
நாங்கள் தொடர்வோம் —
கணவன் மனைவியாக!

*மு.ஜசான்,*
*மாங்குளம்.*

### தேடல்

தனிமையின்
அமைதியில்
சிந்தனையில்
சிக்க வைத்து
எனை
வேடிக்கை பார்க்கும் நீ
என்
எண்ணப் பறவையின்
சிறகுகளை பறித்து
எங்கே வைத்துள்ளாய்?
அது பறப்பதற்காய்
தேடுகிறது
தன் இறகை!

*எஸ். பிரசன்னா,*
*சாவகச்சேரி.*

### ஏன்?

நீ என்னைச்
சந்தித்த வேளை —
வார்த்தையே மௌனமானது.
நான் உன்னைச்
சந்தித்த வேளை —
மௌனமே வார்த்தையானது.

*சுபா,*
*நல்லூர்.*

### ஏன் இந்த மௌனம்

என்உயிரோடு
கலந்து விட்ட உறவே!
உன் மௌனத்தின் காரணம்
எனக்குப்புரியவில்லை.
கலகலவெனச்சிரித்து
கதைகள் பல பேசும் நீ
இன்று காற்றே புகாதபடி
வாயை கட்டிப்போட்டதேன்?
காணுமிடமெங்கும்
நீயுதிர்த்த கள்ளச்சிரிப்புகள்
எல்லாம் எங்கே?
களவு போய்விட்டனவா?
என் காதலுக்கு
கடிவாளமிடுவதென்று
நீ எடுத்த முடிவின்
வெளிப்பாடுகளா இவை?
எப்படித் தான்
உன்னால்
இப்படி மாற முடிந்தது?
உன் பாரா முகம்
கண்டே என்னில்
பாதியை இழந்துவிட்டேன்.
இனி மீதி உயிர்
போகும்வரை
உன்நினைவுகளுடன்
நான்வாழ்ந்திருப்பேன்.

*யஸ்மினா,*
*மீசாலை.*

### சொல் பெண்ணே

உன் பாசவிழுதுகளால் தான்
என் நேசத்தின் விதைகள்
துளிர்விட்டு
தினமும்
உன் சூரியப் பார்வைக்காக
ஏங்கித் தவிக்கின்றன.
உன் மூச்சின் ஒவ்வொரு
உயிர்த்துடிப்பும்
என் சுவாசத்தின்
படிமங்களாகி
நேச நெஞ்சத்தை
வருடல்களாய்
சுற்றிப்படர்கின்றன.
உன் சந்திப்புக்கள்
ஒவ்வொன்றும்
புதுப்புது
சந்தோசங்களாய்
என் இதயச் சந்தங்களில்
ஞாபகங்களாய்
அரங்கேறுகின்றன.
நீ மட்டும் இன்னும் ஏன்
மௌனமாகி பார்வையால்
அர்த்தஞ்சொல்லுகிறாய்?

*க.நாகேஸ்வரா*
*சண்டிலிப்பாய்.*

### காதல் தோல்வி

குழந்தையின்
முதற் சுவாசம்
நுரையீரல் தாண்டமுன்
நுரைகக்கிச் செத்தது.

*இ.யாழவன்,*
*சபரகமுவ பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்க்காத ஏமாற்றம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



அந்திவானம் செக்கச்செவேலென சிவந்து பூமாதேவியை சபிப்பது போன்று காணப்பட ஆங்காங்கே கருமுகில் திரள்கள் தவறவிட்ட ஏதோ ஒன்றைத் தேடுவது போன்று ஓடிக்கொண்டிருந்தன. விறுவிறு என வீட்டு வேலைகளை முடித்த வாணி வெளியேவந்தாள். வானத்தைப்பார்த்து அதிர்ச்சி அடைந்தாள். இன்று நாளிதழ் பார்க்கவில்லை என்ற ஏக்கத்துடன் முல்லைப்பந்தல் நோக்கி நகர்ந்தாள். பந்தலின்கீழ் வட்டநாற்காலியில் இருந்த நாளிதழை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தாள் வாணி. திடீர்விபத்தில் இளைஞர் படுகாயத்துக்கு உள்ளாகி யாழ் பொதுமருத்துவமனையில் அவசர நோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி பஞ்சு போன்று மென்மையான மனம்படைத்த அவளை நிலைகுலையச் செய்தது. இருந்தும் அச்செய்தியை வாசிக்க வேண்டும் என்ற ஆவலுடன் மனதை கட்டுப்படுத்தி திருத்தமாகவும் நிதானமாகவும் வாசிக்கத்தொடங்கிய வாணியின் மனம், பின்பு எரிமலைக் குழம்பாகக் கொதிக்கத் தொடங்கியது. வாசித்து முடித்தவளுக்கு பிரமை பிடித்ததைப் போன்று அழுவதா ஆனந்தம் அடைவதா என்று தெரியவில்லை.

மழலை பொழிய அம்மா என்ற அழைப்புடன் பிரியா துள்ளுக்குதித்து ஓடிவந்தாள். ''யாழினிது குழலினிது என்பர் தம் மழலைச்சொல் கேளாதவர்'' என்று கூறுவார்கள். அது போன்று மழலைக் குரலை கேட்ட வாணிக்கு ஏக்கமும் பறந்துவிட, பிரியாவை தூக்கி முத்தமிட்டாள் ''அம்மா தேத்தா'' என்ற பிரியாவுக்கு வாணி தேநீர் ஊற்றி பருக்கிவிட்டு ஏதோ ஒரு ஏக்கத்துடன் மீண்டும் பத்திரிகைப் பக்கம் தனது பார்வையைத் திருப்பினாள்.

படுகாயம் அடைந்தவர் கண்ணன் வயது – 26 என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது இடம் புத்தளம் எனவும் அவரது வாகன இலக்கம் 59 – 3215 எனவும் குறிப்பிடப்பட்டு காணப்பட்டது. யார் என்று தெரியாமலே ஏக்கமடைந்த வாணிக்கு யார் என்று தெரிந்ததும் மனம் இறுகியது. காச்சிய இரும்பை நீரில் போட்டால் போல் நெகிழ்ந்த நெஞ்சு இறுக்கமடைந்தது. அவள் சிந்திந்தப்படியே ''பெண் மனதை நோகடித்தவன் வையகத்தில் வாழமாட்டான் பேயுறையும் லோகத்தில் வாழ்வான்'' எனக் கூறி எழுந்தாள்.

வாணி... எனப் பரிவுடன் அழைத்துக் கொண்டுஉள்ளேநுழைந்தான் சுதன். அவனைப் பரிவுடன் வரவேற்றாள் வாணி. சுதனது கடமைகளை முடித்து சமையல் அறையினுள் நுழைந்தாள் வாணி. உணவு பரிமாறி உணவு உண்டபின்னர் தனது அலுவலகக் கதைகளை எல்லாம் சொல்லி இருவரும் வயிறுகுலுங்கச் சிரித்துக் கொண்டு இருந்தனர்.

திடீரென என்செல்லம் பிரியா எங்கே எனக் கேட்க 'இங்கே இருக்கேன் அப்பா' என கூறிக்கொண்டு புத்தகத்தில் மூழ்கி இருந்த பிரியா அதை எறிந்துவிட்டு அப்பாவின் மடியில் வந்து அமர்ந்தாள். இன்றைக்கு ஒரு கதை சொல்ல வேண்டும் என்றான் சுதன். நான் இன்றைக்கு கதை சொல்லமாட்டேன் ஜோக் சொல்லப் போறேன் என்றாள் பிரியா. ஆமையும் முயலும் ஓட்டப்போட்டி நடத்தி முயல் தூங்கியதால் ஆமை ஜெயித்துவிட்டதாம். இப்போது சமாதான காலத்தைப் பயன்படுத்தி புளியங்குளத்தில் ஆரம்பமாகி ஆனையிறவில் முடிப்பதாக உடன்பாடு செய்யப்பட்டது. நாள் குறித்து போட்டிஆரம்பமாகியதாம். ஆமையின் நகர்வைப் பார்த்து சிரித்துவிட்ட முயல் முறுகண்டி சென்று நன்றாக சாப்பிட்டு கொண்டிருந்ததாம். ஆமை மெதுவாக நகர்ந்து ஆனையிறவை அடைந்து விட்டது. ஆமையை காணவில்லை என்ற ஏக்கத்துடன் மிக வேகமாக ஓட ஆரம்பித்த முயலை ஓவர்ஸ்பீட் என கூறி கிளிநொச்சியில் அடைந்துவிட்டார்களாம். இந்த முறையும் முயல் ஜெயிக்கவில்லை எனகூற மூவரும் சிரித்தனர். பிரியா அப்படியே தந்தையின் மார்பில் தூங்கிவிட்டாள். சிறிது நேரத்தில் மூவரும் படுக்கைக்கு சென்றுவிட்டனர்.

காலை எழுந்து கடமைகளை முடித்த சுதன் அலுவலகத்திற்கு புறப்பட ஆயத்தமானான். அன்று சனிக்கிழமை. பிரியாவை பாடசாலைக்குக் கூட்டிச் செல்ல வேண்டியதில்லை. அலுவலகத்திற்கு சுதன் சென்றபோது, பத்திரிகை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் கண்ணன் புத்தளத்தை சேர்ந்தவர் வாணியின் வீட்டில் முன்பு இருந்தவர் என்றும் பரபரப்புடன் பேசிக் கொண்டிருந்தார்கள். சுதன் சென்றதும் அப்பேச்சை அப்படியே விட்டவிட்டு ஒவ்வொருவராக கலைந்து சென்று தத்தம் வேலைகளை ஆரம்பித்தனர்.

சுதன் மனதில் ஓர் இனம் புரியாத நெருடல், மனக்குழப்பமாக காணப்பட்டது. அலுவலக வேலைகள் சனிக்கிழமை என்ற படியால் 12 மணியுடனே முடிவடைந்தன. சுதன் தனக்கு நன்கு பிரியமான அலுவலக தோழி சுஜாத்தாவிடம் நடைபெற்ற விடையங்களைக் கேட்டான். கண்ணன் வாணிக்கு நிச்சயிக்கப்பட்டதாகவும் வாணி அவனை காதலித்ததாகவும் அவர் பின்பு சீதனம் அதிகம் கேட்டதால் விலகிச் சென்றார் என்ற உண்மையையும் சுஜாத்தா கூறினாள்.

வாணிக்கு முன்பு ஒருவர் நிச்சயமாகி இருந்தார் அவர் தந்தையுடன் முரண்பட்டதால் திருமணம் செய்யவில்லை என வாணி கூறி இருந்ததும் நினைவுக்கு வந்தது. ஓரளவு மனதைத் தேற்றினாலும் அவனை உறுத்தத்தான் செய்தது. பத்திரிகை பார்த்த வாணி தன்னிடம் விவரத்தை கூறவில்லை என்ற ஏக்கத்துடன் வீடு சென்றான் சுதன்.

மணம்முடித்து 10 வருட வாழ்கையில் தனக்கு ஏற்பட்ட அதிர்வு இதுவே என எண்ணிக்கொண்டு தன் சாய்மனைக் கதிரையில் சாய்ந்தான். வாணி ''இஞ்சாருங்கோ'' எனக் கூறிக் கொண்டு வர, முறைத்துப் பாத்து விட்டு தன் தலைவிதி என்றான் சுதன். காங்கேசன்துறையில் பிறந்து நீர்கொழும்பில் வளர்ந்த நான் புத்தளத்தில் வந்து உன்ர கழுத்தில் கட்டினேன் என தனக்குத்தானே கூறிக்கொண்டான். திடிரென திரும்பி யாரடி கண்ணனாமே அக்சிடண்ட்பட்டு கிடக்கிரானாமே நீ பார்க்க போகவில்லையாடி? என அதட்டினான்.

10 வருட காலமாக துன்பத்திற்கு இடமில்லா நெஞ்சில் பேரிடியால் அடிப்பட்டு ''மரம் விழ காட்டாறு அரித்துச்செல்வது போல்'' அவள் கண்களில் இருந்த பெருக்கெடுத்து கொட்டியது கண்ணீர். ''கண்ணன் தாயும் தந்தையும் இல்லாத அனாதை. அப்பாவின் கடையில் பணிபுரிந்தார். அவர் என்னை ஒருவருட காலம் காதலித்து இருந்தார். கலியாணத்திற்கு நாள்குறித்த பின்பு 15 லட்சம் சீதனம் தந்தால் என்னைத் திருமணம் செய்வதாக அப்பாவிடம் கூற அப்பா அவரை ஊரைவிட்டே கலைத்துவிட்டார். அத்துடன் அப்பாவும் என் ஏக்கத்தில் உயிர்துறந்துவிட்டார். பின்புதான் உங்களை என் மாமா திருமணம் முடித்து வைத்தார். இவற்றை எல்லாம் மாமா கூறி இருப்பார் என நினைத்தேன். இது என் தலைவிதி'' என கூறி கூறி அலற ஆரம்பித்தாள் வாணி.

கேற்றில் மணி அடிக்கும் சத்தம் கேட்க அங்கு சென்ற சுதனுக்கு தபால்காரன் ஏதோ ஒரு கடிதத்தை கொடுத்துவிட்டு சென்றான். கடிதத்தில் அனுப்பியவர் யாழ்.மருத்துவமனை என கூறிப்பிடப்பட்டு இருந்தது. அடியே உனக்கு உன் காதலன் கடிதமடி, வாசிக்கிறேன் கேளடி என கூறி வாசிக்கத் தொடங்கினான்.

''என்றும் என் தங்கை, மச்சான் அறிவது. நான் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் வேளையில் சில உண்மைகளை தெரியப்படுத்த வேண்டியிருக்குது. இல்லாவிட்டால் உங்கள் வாழ்வில் காலம் செல்லச் செல்ல பிரச்சினைகள் தோன்றலாம். என் ஆத்மாவும் சாந்தி அடையாது. நான் தங்கை என குறிப்பிட்டேன் என நீங்கள் யோசிக்கலாம்.

வாணியின் தந்தை ஓர் வணிகர் . அவர் எமது ஊரான கண்டிக்கு தேயிலை கொள்வனவுக்காக வந்து எனது அம்மாவை திருமணம் செய்து கொண்டார். அவர் நான் பிறந்த பின்பு அம்மாவை விட்டு விட்டு பிரிந்து சென்றுவிட்டார். அந்த ஏக்கத்தில் அம்மாவும் உயிர் துறந்துவிட எனது அம்மம்மாவின் ஆதரவில் நான் வளர்ந்தேன். என் அப்பாவை பழிவாங்கும் கோரமனப்பாங்கு என் மனதில் குடிகொண்டிருந்தால் புத்தளத்தில் இருப்பதாக அறிந்து புத்தளத்தில் அவர் கடையில் யார் என்று தெரியாமலே பணிபுரிந்தேன். இவர்தான் எனது தந்தை என எனக்கு தெரியவரவே அவரை பழிவாங்கும் பொருட்டு என் தங்கை வாணியை காதலிப்பதாக நடித்து இலட்சகணக்கில் சீதனம் கேட்டு பழிவாங்கி அவரையும் மேலே அனுப்பிவிட்டேன். அப்போது நான் மிகவும் சந்தோசப்பட்டேன். இப்போது என் மனம் தெளிந்து என் தங்கையை வாழவைக்க வேண்டிய நானே அவமானப்படுத்திவிட்டேனே என மனம் வேதனை அடைகிறது.

என்னை தயவு செய்து மன்னித்துக் கொள்ளவும். மச்சான் என் தங்கை கண்கலங்காது சுதந்திரகாற்றைச் சுவாசிக்கிறாள் என என் நண்பர்கள்தொடர்புகொண்டு கூறுவார்கள். கையெடுத்து கும்பிடவேண்டியதெய்வமாகிய நீங்களும் என்னை தயவுகூர்ந்து மன்னிக்கவும்.'' இப்படிக்கு கண்ணன் என கையெழுத்து இடப்பட்டிருந்தது.

வாசித்து முடித்த சுதன் மனம் துவண்டு ''வாணி என்னை மன்னித்துவிடு'' என காலில் விழுந்து அழுதான். ''கதை கட்ட ஒருவன் பிறந்து விட்டால் கண்ணகி வாழ்விலும்களங்கமுண்டு'' உண்மைபுரிகிறது என்னை மன்னித்து விடு எனக் கேட்டு நாளை வைத்தியசாலைக்குச் செல்வோம் என கூறி வாணியின் மனதை தேற்றி அன்று இரவே செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்து முடித்தான். மறுநாள் பயணம் மேற்கொண்டுவைத்தியசாலையை அடைந்த அவர்கள் அவசர அவசமாக, அவசர நோயாளர் பிரிவுக்கு சென்றனர்.

அங்கு கண்ணனை விசாரிக்க டாக்டர் அவர்களை அழைத்துச் சென்று வாணியின் அடையாள அட்டையை வாங்கிப் பார்த்துவிட்டு தன்னிடமுள்ள வங்கிப்புத்தகத்தில் உள்ள அடையாள அட்டை இலக்கத்தையும் சரி பார்த்துவிட்டு வங்கிப்புத்தகத்தை வாணியிடம் கொடுத்தார். பிரித்துப் பார்த்தாள் வாணி. 20 லட்சம் ரூபாபணம் நிலையான வைப்பில் இருந்தது. இது என்ன என வாணி அலற கண்ணன் தனது உறுப்புக்களை எல்லாம் தானம் செய்தது பற்றி யாரிடமும் கூறக் கூடாது என கூறியது டாக்டருக்கு ஞாபகம் வர கண்ணன் சிகிச்சைக்காக லண்டன் அனுப்பப்பட்டுள்ளார் என கூறிவிட்டு சென்றுவிட்டார் டாக்டர்.

(யாவும் கற்பனை)

ந.கோபிகிருஷ்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி செய்திகள்


அனிதா

அஞ்சு அரவிந்த் – ஹோம்லியாக நடிக்கத் தெரிந்த நடிகை. நல்ல வரவேற்பு இருந்தும் காதல் வயப்பட்டு வாய்ப்பைக் கோட்டை விட்டவர். விஜய்யுடன் 'ஒன்ஸ்மோர்', 'பூவே உனக்காக' படங்களில் நடித்து நல்ல புகழைப் பெற்றவர். தனது உறவினர் ஒருவரை 'காதலித்து பெற்றோரின் எதிர்ப்பை மீறி' திருமணம் செய்து கொண்ட அஞ்சு, இப்போது விவாகரத்து கேட்டு குடும்ப நல நீதி மன்றில் மனுச் செய்திருக்கிறார். லேட்டஸ்டாக சீதா, சுகன்யா, ஹீராவைத் தொடர்ந்து அஞ்சு அரவிந்த்

***

போதனைகளையும் பொழுது போக்கினையும் இணைத்து பண்பாட்டை– பயிற்றுவிக்கும் – திரைப்படமாக உருவாகிறது 'திருவிளையாடல்'. அட, இதென்ன பழைய பெயராக இருக்கிறதே என்று நினைக்க வேண்டாம். இது புதுத் திருவிளையாடல். மனித இனத்தை அழிக்க விஷக் கிருமி நோய்களோ, பேரழிவு ஆயுதங்களோ காரணமல்ல. மனித இனத்தை அழிப்பது மனித சக்திகளே. இந்த ஆற்றல்மிகு சக்தியை நல்வழியில் பயன்படுத்தினால் நல்லது. அல்லல் வழியில் பயன்படுத்தினால் ஆபத்து என்பதைச் சொல்ல வருகிறது 'திருவிளையாடல்' படம்.

***

சூர்யா , மாதவன், சித்தார்த் – மீரா ஜாஸ்மின், த்ரிஷா, ஈயோ தியோல் இந்த மூன்று ஜோடிகளுடன் பாரதிராஜா வில்லனாக நடிக்க ஜனகராஜ், ஸ்ரீமன் ஆகியோரும் 'ஆயுத எழுத்து' படத்தில் நடிக்கிறார்கள். இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மையமாக வைத்துத் தனக்கே உரிய வித்தியாசமான கோணத்தில் இயக்கியுள்ளார் மணிரத்தினம். இளைய சமுதாயம் உதாசீனப்படுத்தப்படுவதால் ஆயுதம் போன்றவலிமையான அவர்கள், சமூகவிரோதிகளால் தவறான பாதைக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் . இந்தப் பின்னணியில் அமைந்திக்கிறது கதை.

***

## மூன்று நாயகிகளுடன் ரி.ராஜேந்தர்

ஒரு தாயின் சபதம், காதல் அழிவதில்லை உட்பட பல படங்களை தயாரித்த ரி.ராஜேந்தரின் சிம்பு சினி ஆட்ர்ஸ், அடுத்து ஒரு புதிய படம் தயாரிக்கிறது.

'வீராசாமி' என்று இப்படத்துக்கு பெயர் சூட்டியிருக்கிறார் ராஜேந்தர். தனது படங்களுக்கு 9 எழுத்துக்களில் பெயர் சூட்டுவது அவரது வழக்கம். முதல் முறையாக 4 எழுத்தில் பெயர் சூட்டியிருக்கிறார்.

இது, இளைஞர்களைக் கவரும் பொழுது போக்கு அம்சங்களைக் கொண்ட கதை. காதலிப்பது உண்மை என்றால், இதயத்தை திறந்து காண்பி என்ற கருத்தை வலியுறுத்தும் படம்.

உயிருள்ளவரை உஷா படத்தில் வந்த செயின் ஜெயபால், 'தங்கைக்கோர் கீதம்' படத்தில் வந்த சூலக்கருப்பன் போன்ற ஒரு வீரமான கதாபாத்திரத்தில் ரி. ராஜேந்தர் நடிக்கிறார்.

''அவன் வணங்குவது வீரன்சாமி, அவன் அநியாகத்துக்கு தலைவணங்காத வீரஆசாமி. அவன் அறிவால் பேசினால் கம்யூனிசம். அரிவாள் கொண்டு வீசினால் ரவுடிசம்'' என்று தனது கதாபத்திரம் பற்றிக் கூறுகிறார் ரி.ராஜேந்தர்.

அவருடன் முரட்டுத் தனமான காதலன் வேடத்தில் ஒரு புதுமுகம் அறிமுகம் ஆகிறார்.

படத்தில் மூன்று கதாநாயகிகள் பங்கு பெறுகிறார்கள். அவர்களில் இரண்டு பேர் இளமை துள்ளல் நிறைந்த புதுமுகங்கள்.

மற்றும் குறளரசன், சார்லி, தாமு, பாண்டு, மதன்பாப, கொட்டாச்சி, ஷர்மிலி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

## ஐஸ்வர்யா ராயின் குமுறல்

அண்மையில் ஐஸ்வரியா ராயும் ஒரு பரபரப்பு செய்தியில் பலமாக அடிபட்டு இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்! லண்டனில் ஒரு ஆங்கிலப் பட படப்பிடிப்பில் பிசியாக இருக்கும் அவர், நைஸாக விமானம் ஏறி பாகிஸ்தானுக்குப் போனாராம். அங்கு இரண்டு பகல், மூன்று இரவுகள் ஒரு சொகுசுப் பண்ணை வீட்டில் தங்கியிருந்தாராம்.

அது பிரபல பாகிஸ்தானிய அரசியல் வதிக்குச் சொந்தமானதாம். இந்திய – பாகிஸ்தான் உறவு விஷயத்தில் ஒரு சுமுகமான போக்கு ஏற்பட வேண்டும் என்பதற்காக இந்த சமாதான 'உடன்படுக்கையா' என்று பலரும் பல யூகங்கள் அவிழ்த்து விட்டிருக்கின்றார்கள். இப்படியான அந்தச் செய்தியைப் படித்தஐஸ்கொதித்துப்போய் ''நான் பாகிஸ்தானையே பாத்ததில்லை. அங்கே போனதே இல்லை. இப்படியெல்லாம் எழுதி இருக்கிறார்கள்'' என்று குமுறி இருக்கிறார்.


ஐஸ்வர்யா

## தமிழ் சினிமாவுக்கு புதிய கட்டுப்பாடு

சமீபத்தில்தமிழக பிலிம்சேம்பர்வளாகத்தில் தமிழ் திரைப்பட விநியோகஸ்தர்களும், தயாரிப்பாளர்களும் சேர்ந்து அதிரடிக் கூட்டுக் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். இந்தக் கூட்டத்தில் பல தடாலடி முடிவுகள் எடுக்கப்பட்டன.

இனி வெளிவரும் படங்களுக்கு பொருந்தக் கூடிய அந்தக் கட்டுப்பாடுகளில் இருந்து சில காப் சிகள்:–

தயாரிப்பாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் தயாரிக்கும் படங்களை மட்டுமே விநியோகஸ்தர்கள் வாங்கி விநியோகிக்க வேண்டும்.

ஒரே நடிகரின் பல புதுப் படங்களுக்கு பூஜை போட்டால் ஒன்றுக்கு ஒன்று முரணாக வெளிவரக் கூடாது. முதலில் பூஜை போட்ட படம் முதலில் வெளி வர வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட நடிகர் பொறுப்பு ஏற்க வேண்டும்.

ஒரே நடிகர் நடித்த 2 படங்கள் ஒரே சமயத்தில் வெளிவரக் கூடாது. குறைந்தது ஒரு மாத காலம் இடைவெளி இருக்க வேண்டும்.

புதிய படங்களை டி.வி., சாட்டிலைட்டான் ரிலீஸ் தேதியில் இருந்து 3 ஆண்டுகளுக்கு யாருக்கும் தரக் கூடாது. இதற்குத் தயாரிப்பாளர் சங்கத்தில் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.


ரதி

## கலக்கல் நடிகர் த... வாழ்வில் ஒரு காத...


தனுஷ் – ஸ்ரீதேவி

இன்று கொடிகட்டிப் பறக்கும் முன்னணி இளம் நடிகர் தனு... அனுபவத்தை வெளியிட்டிருக்கின்றார்.

'காதல் பற்றி ஒரு கலாட்டா...'என்ற அரட்டை நிகழ்ச்சியை... ஒன்று ஏற்பாடு செய்திருந்தது. அதில் மன்மதராஜாக்களின் ச... களின் தரப்பில் நடிகை ஸ்ரீதேவியும் (நடிகர் விஜயகுமார் – நடி... மகள்) தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

அந்த அரட்டையிலேயே தமது இளவயது காதல் சோகங்... கொண்டனர்.

அவர்கள் பரிமாறிக்கொண்ட.. பார்ப்போமா? (இது நடிப்... என்பதை வாசகர்கள் மனதில் இருத்திக் கொள்ளவேண்டும்...)

தனுஷ்:– ஸ்ரீதேவி அழகாக இருக்கிறீங்க... நிச்சயமாக – ... ஏகப்பட்ட அப்ளிகேஷன்கள் வந்திருக்குமே அதைப் பத்திச்... வெட்கத்தைப் பாரேன்....!

ஸ்ரீதேவி ; ''அட... இதில என்ன வெட்கம் ... (சிரிக்கிறார்... யாக எனக்குப் பத்துப் பதினஞ்சு அப்ளிகேஷ... வந்திருக்கு... கிக்கிட்டே இருப்போம். சட்டுனு ஒரு நாள் 'ஐ லவ் யூ'னு வந்து... 'போய்யா ... போ ஒஒ'னு ஜெயம் 'சதா' மாதிரி விரட்டிருவேன்... ஒருத்தர் மட்டும் ரொம்ப டீஸன்டா வந்து ' உன்னை கல்யா... பண்ணிக்க விரும்பறேன்'னு சொன்னார். என்ன சொல்றது... தெரியலை. 'இப்ப எனக்கு அந்த மாதிரியெல்லாம் ஐடியா... இல்லை. நான் கல்யாணத்துக்கு ரெடியாகும்போது ஒரு வேளை நீங்களும் கல்யாணமாகாம இருந்தா பார்ப்போம்'னு சொல்லிச் சமாளிச்சேன்!''

தனுஷ்: ''அது... அதாங்க எங்க பிரச்னையே! 'பார்ப்போம்'னுதான் மையமா சொல்லி... கிறுக்குப் பிடிக்கவிடுறீங்க பாருங்க...(ஆதங்கத்தோடே) அதான் பொண்ணுங்களோட லாஜிக்.அதுசரி... ஸ்ரீதேவி, நீங்க யாருக்... கேஷன் போட்ருக்கீங்களா மறைக்... லுங்க....''

ஸ்ரீதேவி: ''ஐயோ, தனுஷ்.... நீங்களே.... ஓகே. எனக்கும்... லியர் இருக்கு. 'சட்... என்று ஜாதகத்தில்... சோடு காதல் வரும்... லையே'ங்கற... காதல் வந்... னர் )... ணிட்... டக்னு... எ... மாதி... தது.(சி... அவர் கிட்... டேன். முதல்... ட்ரம்ஸ் அடிக்கு... எல்லாத்தையும் மீ... என் காதலை அவர் ட... வாரம் கஷ்டமா இருந்த... கொஞ்சமா சரியாகிட்டேன்...''

தனுஷ்: ''அட.... தேவதை... இந்தப் பூமியில் இருக்காங்களா? (... அந்தப் புண்ணியவான் யாருனு சொ...''

ஸ்ரீதேவி:(தனுஷை ஒரு செல்லக் கோ...) ''அதெல்லாம் ரகசியம்.... விட்ருங்க. அதுச... களை எடுத்துவிடுங்க....''

தனுஷ்: ம்ம்.... என்ற பெருமூச்சோடு கூட ''இ... எஸ்.எம்.எஸ்.எல்லாம் நடிகன் தனுஷுக்கு வர்ற... மறக்க முடியாத காதல் நினைவுகள் இருக்கு. நான்... பொண்ணு இருந்தா. நாங்க ரெண்டு பேரும் அத்தனை... எப்பவும் ஒண்ணாவே சுத்துவோம்... படிப்போம்... அவ ஒரு நா... எல்லா விஷயத்துலயும் அனுசரிச்சுப் போறோம். நாம ஏன்... பண்ணிக்கக் கூடாது?'னு கேட்டா. நான் அவளை முழுக்... பார்த்துட்டேன். ஒரு வாரம் யோசிச்சுப்பார்த்துட்டு, 'இ... சொன்னேன். அதோட அந்த நட்பே முறுஞ்சு போசசு!''

ஸ்ரீதேவி: ''நீங்க யாருக்காவது அப்ளிகேஷன் போட்ருக்கீ...''

தனுஷ்:''அதே ப்ளஸ் டு! ஒருத்தியைப் பார்த்துப் பழகி... ஒண்ணு தோணும்ல.... அப்படி ஒரு பொண்ணு சிக்கினாள்... தேதி அவகிட்டே போய்ல என் காதலைச் சொன்னேன். ... பதினாலு நாள் கழிச்சு 'ஓகேடா!'னு பச்சைக்கொடி காட்டின... துல என் ரூம்ல ஃபுல் சவுண்ட்ல மியூஸிக் போட்டு செம டான்... பேசினோம். ஊர் சுத்தினோம். மற்றர் எப்படியோ அவங்க வீ... வேண்டாம் பிரபு ... நாம பிரிஞ்சுடுவோம்'னு சலனமில்லாம... நொறுங்கிப் போயிட்டேன். பைத்தியம் பிடிச்ச மாதிரி ஆகி... எதுக்கும் அவகிட்டேயிருந்த பதில் இல்லை. ஒரு வருஷம்... அப்பதான் ஒரு வெறி வந்தது. நம்மளை வேண்டாம்னு விட்... ஐயோ இவனை மிஸ் பண்ணிட்டோமேனு ஃபில் பண்ண... னிக்கு நான் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கேன்னா அதுக்... இருப்பத்தைந்து வீதம் காரணம். இப்பவும் அந்தப் பொண்ணு... எங்கே இருக்கா... என்ன பண்றா... எல்லாம் தெரியும். ஆன... தோணலை.... அது அப்பவே உடைஞ்சுபோச்சு....'' (சிறிது ... தோட முடித்தார் தனுஷ்)

ஸ்ரீதேவி:''அடேங்கப்பா.... உங்களுக்குப் பின்னாடி இப்... (கண்களை அகல விரித்தபடி ஸ்ரீதேவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளம் நடிகர் தனுஷ், தமது இளவயது காதல்

டை நிகழ்ச்சியைச் சென்னை தமிழ் ஊடகம்
தராஜாக்களின் சார்பில் தனுஷும், தேவதை
விஜயகுமார் – நடிகை மஞ்சுளா தம்பதியரின்
கொண்டனர்.

காதல் சோகங்களை அவர்கள் பரிமாறிக்

மா? (இது நடிப்பல்ல உண்மை அனுபவம்
ாள்ளவேண்டும்.)

... நிச்சயமாக – கண்டிப்பாக – உங்களுக்கு
அதைப் பத்திச் சொல்லுங்கோ.... ஐ தோடா!

... (சிரிக்கிறார்) இதுவரைக்கும் நேரடி
ஷ் வந்திருக்கு ல்லா பழ
லவ் யூ'னு வந்து நிப்பாங்க.
ரி விரட்டிருவேன். ஆனா,
உன்னை கல்யாணம்
ன்ன சொல்றதுனே
யல்லாம் இடியா
தம்போது ஒரு
ந்தா பார்ப்

னயே!
லி

# ...ர் தனுஷின் காதல் சோகம்!

காவது அப்ளி
காமச் சொல்

இப்படி மாட்டி விட
ஒரு குட்டி லவ் ஃபெயி
டென்று காதல் வரும்
சொல்லலையே. நெஞ்
என்று நேற்றுவரை நம்ப
மாதிரி ஒருத்தர் மேலே எனக்கும்
தது. (சி நேரம் யோசித்து பின்
அவர் கிட்ட சொல்ல முடிவு பண்
டேன். முதல் முறையா நெஞ்சுல படக்ப
ட்ரம்ஸ் அடிக்குது. நெத்தியில் வியர்க்குது.
லாத்தையும் மீறி சொல்லிட்டேன். ஆனா,
ாதலை அவர் டீஸன்டா மறுத்துவிட்டார். ஒரு
ஷ்டமா இருந்தது... அப்புறம் கொஞ்சம்
சரியாகிட்டேன்.''

ட..... தேவதையை நிராகரிக்கறவங்ககூட
ருக்காங்களா? (நக்கல் கலந்த சிரிப்போடு)
ான் யாருனு சொல்லுங்க?''

ஒரு செல்லக் கோபத்தோடு அடித்து விட்டு)
விட்ருங்க. அதுசரி.... உங்க காதல் காவியங்

ச்சோடு கூட "இப்ப எனக்கு வர்ற லெட்டர்,
னுஷ்க்கு வர்றது. ஆனா, பழைய பிரபுக்கு
இருக்கு. நான் ப்ளஸ் டூ படிச்சப்ப ஒரு
ரும் அத்தனை நெருக்கமான ஃப்ரெண்ட்ஸ்.
ாம்... அவ ஒரு நாள் திடுதிப்னு வந்து 'பிரபு...
றாம். நாம ஏன் லவ் பண்ணிக் கல்யாணம்
அவளை முழுக்க முழுக்க ஃப்ரெண்டாவே
பார்த்துட்டு, 'இது சரிவாராது'னு பதில்
போச்சு!''

ஷன் போட்ருக்கீங்களா..?''

பார்த்துப் பழகினவுடனே, உள்ளே ஏதோ
னு சிக்கினாள். ஒரு மே மாதம் பதினாலாம்
சொன்னேன். உடனே ஒப்புக்கலை. சரியா
க்கொடி காட்டினா. அன்னிக்குச் சந்தோஷத்
ாட்டு செம டான்ஸைப் போட்டேன். நிறைப்
யோ அவங்க வீட்ல தெரிஞ்சுப்போச்சு! 'இது
சலனமில்லாமச் சொல்லிட்டுப் போயிட்டா.
டிச்ச மாதிரி ஆகிப்போச்சு. போன், மெயில்
ல. ஒரு வருஷம் ஆச்சு, மீண்டு வர்றதுக்கு.
ண்டாம்னு விட்டுட்டுப் போனவ. நாளைக்கு
ஃபில் பண்ணணும்'னு நினைச்சேன். இன்
கேன்னா அதுக்கு அந்தக் காதல்தோல்வியும்
அந்தப் பொண்ணுக்குக் கல்யாணமாகலை.
ம் தெரியும். ஆனா, போய்ப் பார்க்கணும்னு
ச்சு....'' (சிறிது சோகம் கலந்த வாடிய முகத்

பின்னாடி இப்படி ஒரு சோகக்கதையா?''

# நிஜவாழ்க்கையில் இவர்கள் இப்படி!



விக்ரம்

ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் இயல்பான கிரகக் குணங்கள் உண்டு. சினிமா நட்சத்திரங்களும் அப்படித்தான்! திரைக்குப்பின்னால் இவர்களது நிஜப் பேச்சு, குணங்கள் என்ன? நெருங்கிப் பழகியவர்களிடம் இருந்து கறக்கப்பட்ட விஷயங்கள் இவை:—

**ரஜினிகாந்த்**

ஜாலியாகவும், விஷயமாகவும் பேசக் கூடியவர். தனது பேச்சு யாரையும் புண்படுத்தி விடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பார். அதனாலேயே இவர் படம் பார்க்க வந்தால் நன்றாக இல்லாத படத்தையும் கூட 'சபாஸ்', 'வெரிகுட்' என்றே சொல்லிவிடுவார். எதைப் பேசினாலும் செய்தியாகிவிடும் என்பதால் நெருக்கமானவர்களிடம் மட்டுமே தற்சமயம் பேசி வருகிறார்.

**கமலஹாசன்**

பேச்சில் ஏராளமான பொருள் பொதிந்து இருக்கும். புதுப்புது வார்த்தைகளும் இருக்கும். ஆனால் சாதாரணமானவர்களுக்கு பாதி விஷயம் புரியாது. நடு நடுவே வயிறு குலுங்கும்படி ஜோக் அடிப்பார். எவ்வளவு கோபம் வந்தாலும் அது வார்த்தைகளில் இருக்கும். முகத்தில் தெரியாது. யாராக இருந்தாலும் எளிதில் பழகுவார்.

**விக்ரம்**

எப்பேர்பட்ட 'டென்சனுக்கு' மத்தியிலும் சிரித்த முகத்துடன் பேசுவார். கடைக்கோடி ரசிகர் வரை ஒரே மாதிரி பழகுவார். ரசிகர் வீட்டில் சாப்பிட அழைத்தாலும் கூடச் செல்வார். பேச்சினூடே நிறைய கடி ஜோக் அடிப்பார். மடக்கியும் பேசுவார்.

**அஜித்**

மனதில் சிறு துளி விஷயத்தையும் மறைக்க முடியாது. யாராவது சீண்டிவிட்டால் போதும் ஆவேசம் வந்துவிடும். மூக்கில் வியர்த்துவிடும் அளவிற்குப் பேசுவார். பேச்சில் நிஜம் இருக்கும். உண்மை இருக்கும். யாரையும் எதிர்த்துப் பேசுவார். குறிப்பிட்ட சிலருடன்தான் நெருக்கம் வைத்துக்கொள்வார்.

**விஜய்**

உம்... ஆம்... இல்லை.. என்பது போன்ற சிறு வார்த்தைகளைத் தவிர அதிகம் பேச மாட்டார். பழகுவதில் கூச்ச சுபாவம் அதிகம் இருக்கும். மிகத் தனியாகச் சந்தித்தால் மட்டும் இவற்றில் இருந்து விலக்கு இருக்கும். ரசிகர்களை அதிகம் மதிப்பார். போனில் அவர்களிடம் பேசுவார். பொசுக், பொசுக் எனக் கோபம் வரும்.

**சூர்யா**

தான் தான் என்கிற எண்ணம் இவரிடம் அதிகம் உண்டு. மூக்கின் மீது சரளமாகக் கோபம் வரும். யாருடனும் நெருங்கி நட்பு வைத்துக்கொள்ள மாட்டார். பிறர் மன நிலை அறிந்து பேசமாட்டார். இருந்தாலும் மனதில் கள்ளம், கபடம் வைத்திருக்க மாட்டார்.

**சரத்குமார்**

விக்ரம் மாதிரியே எப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலும் ஆவேசம் அடையமாட்டார். யாரிடமும் எளிதாகப் பழகுவார். உதவி செய்யும் குணம் உண்டு. எல்லோருக்கும் மரியாதை தருவார். எதையும் அளவோடு வைத்துக்கொள்வார்.

**விஜயகாந்த்**

சிடு, சிடு என்ற நிற்பார். சூழ்நிலை பார்க்காமல் விடயத்தைப் போட்டு உடைத்து விடுவார். யார் குறை சொன்னாலும் கேட்டு, நிறைவேற்ற முயற்சி எடுப்பார். லோக்கலான கெட்ட வார்த்தைகள் நிறையவே வரும். எதிர்த்து மடக்கிப் பேசுவார். மனசு சுத்தமானவர்.

**ஸ்ரீகாந்த்**

ரொம்ப வெகுளித்தனமானவர். யாரிடமும் அன்பாகப் பேசுவார், பழகுவார்.. பந்தா தெரியாது. பொசிட்டிவ் ஆகவே பேசுவார். ரசிகர்களிடம் பாசம் கொண்டவர். திட்டமிட்டு பேசப் பழகத் தெரியாதவர்.

**தனுஷ்**

பணிவாக பேசுவதற்கு நன்குதிட்டமிட்டவர். அடிக்கடி கோபம் வரும். வீட்டில் அதைக் காட்டுவார். வெளியே அதைக் காட்டிக்கொள்ளமாட்டார். நிஜமாகவே யாருடனும் பேசப்பிடிக்காது. வேலையை மட்டும் செய்து விட்டு வீட்டுக்குப் போக வேண்டும் என்று நினைப்பவர். ரசிகர்களிடம் பேசத் தெரியாதவர்.

**சிம்பு**

பேச்சில் கோபத்தையும், கறாரையும் தவிர எதுவும் தெரியாது. சூர்யா போலவே தான் என்கிற குணம் உண்டு. தனது முடிவே சரி என்று எண்ணுபவர். பாராட்டுபவர்களையும் கூட வேஷம் போடுபவர் என்று சந்தேகப்படக் கூடியவர்.

# அரசின் சட்டத்தினால் ஆடிப்போன சினிமா

சமீபத்தில் அரசு எடுத்த அதிரடி முடிவால் தமிழ் சினிமா ஆட்டம் கண்டுபோய் இருக்கிறது. விஷயம் இதுதான்:—

ஆயுதம் வைத்திருப்பது 'பொடாக் குற்றம்' என்று தமிழக அரசு முடிவெடுக்க.... சினிமா முழுக்க இன்றைய தேதியில் ஆயுத கலாச்சாரம்தானே!

தூள், சாமி, திவான், பீஷ்மர், திருமலை, ஜெய், விருமாண்டி என ஏற்கனவே வெளிவந்த பல படங்கள் அரிவாள் கத்திகளைத் தூக்க... வெளி வர இருக்கும் சுள்ளான், போஸ், ராம், அருள், எதிரி, கில்லி, மன்மதன், ஜோர், கம்பீரம், ஜெய்சூரியா என வரிசையாகப் புதிதாக வெளியிடப்படவிருக்கும் படங்களும் ஆயுதங்களைக் கையில் ஏந்தியபடிதான் திரையில் மிரட்டப் போகின்றன.

ஆயுதம் வைத்துக் கொள்வதே தவறு என்று அரசு முடிவு எடுக்கும் பட்சத்தில், ஆயுதங்களை வைத்து மிரட்டும் தமிழ் சினிமா இதற்கான தூண்டுகோல்தானே! வன்முறையைக் கிளறிவிடும் சினிமா மீது அடுத்த கட்டமாகத் தமிழக அரசின் சட்டம் பாயுமோ என்கிற பீதி படத் தயாரிப்பாளர்களுக்கும், இயக்குநர்களுக்கும் ஏற்பட்டு உள்ளது.

'சுள்ளான்' படத்தில் தனுஷை வைத்து இயக்குநர் ரமணா ஒரு புது வகைக் கத்தியைத் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தும் இந்தச் சமயம் பார்த்து.. அரசின் முடிவு அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.



சரத்குமார் – கிரண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் காலில் வளரும் உரோமம் ஹார்மோன்கள் குறைவு காரணம்

**கேள்வி:— வயது 19. மாதவிலக்கு ஒழுங்கில்லை. தாமதமாக வருகின்றது. இரத்தப்போக்கும் குறைவு — டாக்டர் ஆலோசனைப்படி—'மித்திரி' மாத்திரைகளையும்—இரும்புச் சத்து மாத்திரைகளையும் உபயோகித்த போது — மாதவிலக்கு ஒரளவு ஒழுங்காக வருகின்றது. தொடர்ந்து உபயோகிக்காத போது — மறுபடியும் தாமதமாக வருகின்றது. குறைவாகவும் போகின்றது. முகத்தில் மயிர்கள் தோன்றியுள்ளன. உடல் பருத்து வருகின்றது.**

பதில்:— மாதவிலக்கு ஒவ்வொரு மாதமும் ஒரே திகதியில் வரும் என்று நம்புகின்றவர்கள் பலர். இக்கருத்து தவறு. ஒரு கிழமை — முன்னர் அல்லது பின்னர் வருவது சாதாரணமானது. அதுபோல் மாதவிலக்கு ஏற்பட்டால் குறைந்தது மூன்று நாட்களுக்காவது இரத்தப்பெருக்கு இருக்க வேண்டும் என்ற கருத்தும் தவறு. குறைந்தது ஒரு நாளுக்காவது நல்ல இரத்தப்பெருக்கு இருந்தாலே போதும். ஆனால் வழக்கமாக கிரமமாக வரும், வந்தால் வழக்கமாக 3 நாட்களுக்கு இரத்தப்பெருக்கு இருக்கும் மாதவிலக்கின் போக்கில் ஏதாவது மாற்றம் ஏற்படின் கவனம் எடுக்க வேண்டும். உடலில் இரத்தச் சத்து குறைவாக இருத்தல், ஹார்மோன்களின் அளவு குறைதல், மனஉளைச்சல், கவலை என்பவை கூட தாமதமாகும் மாதவிலக்குக்கும், குறைவான இரத்த பெருக்கிற்கும் காரணங்களாகின்றன. உங்கள் கடிதத்தில் முகத்தில் மயிர் முளைப்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தீர்கள். இவை உடலில் பாலியல் ஹார்மோன்களின் தாக்கத்தால் ஏற்படவும் கூடும். எனவே வயிற்றை SCAN பண்ணி—சூலகம், கருப்பை என்பனவற்றில் கோளாறுகள் எதுவும் இல்லை என உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மேலும் 'மித்ரி' மாத்திரைகள் மாதவிலக்கை கிரமத்திற்கு கொண்டுவர உதவும். ஆனால், வேறு காரணங்களால் மாதவிலக்கு பிரச்சினைகள் ஏற்படவில்லை என்றால் மாத்திரமே 'மித்ரி' யை உபயோகிக்க வேண்டும். அதுவும் 6 மாதம் வரை உபயோகித்து மாதவிலக்கு கிரமத்துக்கு வந்த பின்னர் நிறுத்தி விடலாம்.

**கேள்வி:— பெண். வயது 20. இருதொடைகளும் உராய்வதனால் அந்தப்பகுதி கருமை பெற்று அழகில்லாமல் இருக்கிறது. பெண் உறுப்பில் இருபக்கத்திலும் படை மாதிரி இருக்கின்றது பரிகாரம் சொல்லவும்.**

பதில்:— பெண் உறுப்பின் இருபக்கத்திலும் உள்ள படை அரிப்புடன் கூடியதாக இருப்பின்—RINGWORM என்ற பங்கசு தொற்றாக இருக்கலாம். அதற்கு NIZORAL, CANDID கிறீம் போன்ற பங்கசு கொல்லிகளை உபயோகப்படுத்தலாம். அரிப்பு இல்லாவிடில் பெண் உறுப்பு கசிவுகள் அமிலத்தன்மையானவையால் — அவை படும் இடங்களில் கருமை நிறம் வரலாம். தொடைகள் உராய்வதால் — தோலில் ஏற்படும் மாற்றங்களும் கருமை நிறத்துக்கு காரணம். இவற்றிக்கு கிறீம் உபயோகிக்கலாம். நீங்கள் பருத்த தேகம் உடையவராக இருந்தால்—தொடைகளும் பருத்து இருப்பதால் உராய்வு ஏற்படலாம். இதற்கு உங்கள் நிறையை குறைப்பது அவசியம்.

**கேள்வி:— ஆண் வயது 19. இரவில் நித்திரையின்போது விந்து வெளியேறுகிறது. காரணம் என்ன?**

பதில்:— இது ஒரு நோயல்ல. இயற்கை வெளியேற்றமே. திருமணமாகாத ஆண்களுக்கு இது ஒரு சாதாரண நிகழ்வு. ஆண் மகன் முதிர்ச்சி அடையும் வயதில் விந்து சுரக்க ஆரம்பித்து — விந்து பையில் நிரப்பப்படுகின்றது. உணர்ச்சி ஏற்படும் போது இந்த பை சுருங்கி விந்து வெளியேறுகிறது. நித்திரையின் போது பாலுணர்வு கிளர்ந்து எழுவதால் இது நடைபெறுகிறது. இரவில் தூங்கு முன் நல்ல சிந்தனைகளுடன் தூங்கினால் இது நடைபெறாது தவிர்க்கலாம். மலச்சிக்கல் , தூங்குமுன் வயிறுநிறைய உணவு கொள்ளல், கிளர்ச்சியூட்டும் திரைப்படங்கள், நாவல்களைப் தூங்கு முன் பார்த்தல், ரசித்தல் என்பன தூக்கத்தில் விந்து வெளிப் போவதற்கு சில காரணங்களாகும்.

**கேள்வி:— வயது 19. பருவடைந்து 4 வருடங்கள். கடந்த $1^1/_2$ வருடங்களாக மாதவிலக்கு வரும்போது வயிற்றுவலியும் வருகின்றது. மாத்திரைகள் உபயோகித்தும் பயன் இல்லை.**

பதில்:—உலகில் உள்ள பெண்களில் 80 சதவீதமானோருக்கு மாதவிலக்கு காலத்தில் – மாதவிலக்கு வருமுன்போ அல்லது மாதவிலக்கின் போதோ – வயிற்றுவலி ஏற்படுகின்றது என்று மருத்துவர்கள் கணக்கிட்டு இருக்கின்றார்கள். மாதவிலக்கின்போது கருப்பைச் சுவர்கள் சுருங்குவதாலேயே இவ்வலி உண்டாகின்றது. மாதவிலக்கின்போது இரத்தம் உறைந்து குருதித் துண்டுகளாக வருவதும் இந்த வலிக்கு ஒருகாரணம். இப்படி மாதாமாதம் வலியால் அவதிப்படுபவர்கள் மாதவிலக்கு வருவதற்கு ஒரு தினத்திற்கு முன்னர் இருந்து MEFNEMIC ACID மாத்திரைகளை தினமும் இரண்டு வேளை மூன்று நாட்களுக்கு உபயோகிப்பது பலனைத்தரும். அநேகமானவர்களுக்கு அவர்கள் திருமணமாகி – குழந்தை ஒன்று பெற்றவுடன் – தானாகவே இந்த வலி போய் விடுவதுமுண்டு.

**கேள்வி:— பெண் வயது 21. காலில் மயிர்கள் வளர்ந்து அடர்த்தியாகவும் சுருண்டும் உள்ளன. கொழும்பில் உள்ளவர்களின் கால் மெழுகுபோல் காணப்படுகிறது. எனது காலில் உள்ள உரோமத்தை அகற்ற வழி சொல்லுங்கள்?**

பதில்:— பெண்களின் உடலில் பெண் ஹார்மோன்கள் சிறிது குறைந்திருந்தால் உரோமவளர்ச்சி அதிகரித்து ஆண்மைபோன்ற தோற்றம் தெரிய வாய்ப்புண்டு. இவற்றைப் போக்க மருந்துகள் இல்லை. கொழும்பில் உள்ள பெண்கள் அழகு சிகிச்சை நிலையங்களில் தமது உடலில் உள்ள தேவையற்ற உரோமத்தை பல ஆயிரம் ரூபாய்கள் செலவழித்து பிடுங்கிக்கொள்வார்கள். என்றாலும் வருடத்திற்கு இருதடவையாவது இந்த சிகிச்சையை செய்ய வேண்டும். இந்த சிகிச்சை இலகுவாகப்படும். முகத்தில் உள்ள மயிர்களை அகற்ற THREADING என்றும் காலில் உள்ள மயிர்களே அகற்ற WAXING என்று பெயர். சவரம் செய்வது மூலமும் அகற்றலாம். ஆனால் அடிக்கடி சவரம் செய்வதால் தோல் தடிக்கவும் – கருமை நிறம் பெறவும் சந்தர்ப்பம் உண்டு.

**கேள்வி:— ஆண் வயது 18. எனக்கு சுய இன்ப பழக்கம் உண்டு. இதனால் பக்கவிளைவுகள் உண்டா? மலட்டுத்தன்மை ஏற்படுமா?**

பதில்:— சுய இன்பம் மனிதர் – குரங்குகள் மற்றும் பல மிருகங்களில் பொதுவாக காணப்படும் ஒரு பாலியல் பழக்கம். மனிதனின் பாலியல் வளர்ச்சியில் ஓர் அங்கமாக இன்றைய மனோவியல் நிபுணர்கள் சுய இன்பத்தை அங்கீகரித்துள்ளார்கள். எனவே உடலியல் ரீதியல் சுயஇன்பம் ஒரு நோயல்ல – அதனால் எதுவித தீங்கும் வரப்போவதில்லை.

ஆனால், மனோவியல் ரீதியில் சுயஇன்பம் அனுபவிக்கும் மனிதர்கள் சிலர் – பாதிக்கப்படுகின்றார்கள். சுயஇன்பம் தப்பில்லை, தவறில்லை என்ற மனோபாவம் கொண்டவர்கள் எதுவித மனஉளைச்சல் – மனோவியல் பாதிப்புகள் எதுவுமின்றி ஆரோக்கியமாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். திருமணமானவர்கள் கூட சுயஇன்பத்தில் ஈடுபடுவதுமுண்டு. உண்மையில் பாலியல் மனஉளைச்சல்களுக்கு வடிகாலாக சுய இன்பத்தை மருத்துவர்கள் அங்கீகரித்துள்ளார்கள். பல காலம் விண்வெளிவாசத்தில் இருக்கும் விஞ்ஞானிகள், சிறைவாசிகள், அண்டைய நாடுகளில் தனிமையில் பணிபுரியும் போர் வீரர்கள் மத்தியில் சுய இன்பம் சாதாரணமாக காணப்படுகின்றது. கிளர்ந்தெழும் பாலுணர்வுகளே சுய இன்பம் மூலம் வடிகாலாக்காவிடில் அவை மனஇறுக்கத்தை உருவாக்கி மனிதர்களை மனநோயாளிகளாக்கிவிடும் என்று கருத்தும் மனோவியல் நிபுணர்களும் உள்ளனர். சுய இன்பம் கேடுவிளைவிக்கும் நிலை ஒன்று உண்டு. அதாவது சுய இன்பம் கெட்டது – பாவமானது, மத, கலாசார பாரம்பரியங்களுக்கு எதிரானது என்று குற்ற உணர்வோடு சுயஇன்பத்தில் ஈடுபடுபவர்களுக்குத்தான் உடல் களைப்பு, அசதி – நெஞ்சு படபடப்பு, ஞாபகசக்தி குறைவு – தலைமிர்ந்துநின்றுபேசகூச்சம், பெண்களைக் கண்டதும் விந்து ஸ்கலிதம் மனஉளைச்சல் – மனஇறுக்கம், சோர்வு போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. இவை நிச்சயமாக சுயஇன்பத்தின் பக்கவிளைவுகள் அல்ல. சுயஇன்பத்தைப் பற்றிய குற்ற உணர்வுகளால் ஏற்படும் மனோவியல் சம்பந்தப்பட்ட உடல் உபாதைகள். இதனை ஆங்கிலத்தில் PSYCHO SOMATIC ILLNESS என்று அழைப்பார்கள்.

---

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

---

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | | | | | | அன்பு மடல் | அன்பு மடல் |
| 7.05 | | | | | | வணக்கம் தமிழகம் | காலைக்கதிர் |
| 7.30 | | | | | | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | ஹிட்ஸ் மூவி | நகைச்சுவை நேரம் |
| 9.00 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலங்கள் ரசித்தவை | ஜீபூம்பா | ஸ்டார் சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலாம் பாடலாம் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | ஹிட் லிஸ்ட் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | டொப் 10 மூவிஸ் |
| 11.30 | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | சினி சொய்ஸ் | சின்னசின் ஆசைகள் |
| 12.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ரிலாக்ஸ்டைம் | சின்னசின் ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்ஷன்) | (கொமடி) | (கிளசிக்) | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விவரண சித்திரம் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீபூம்பா |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி—மென் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | இசை நிகழ்ச்சி |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சாய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | இன்றும் கலாட்டா | வீக் என்ட் மேட்னி | ஒப்போடு |
| 5.30 | திரையிசை | திரையிசை | திரையிசை | திரையிசை | திரையிசை | | |
| 6.00—6.15 | களம் | இளைய கானம் | ஒப்போடு | 6.00 பாடல்கள் / 6.15 இளந்தளிர் | திரை வானம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | வீக் என்ட் மூவி | வேலன் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | வீக் என்ட் மூவி | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | விசேட நிகழ்ச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவத்தின் பின் வேலையா?

பிரசவகால விடுமுறையின் பின் வேலைக்குப்போவதென்பது பெண்களின் மனநிலையில் சற்று மாற்றத்தை ஏற்படுத்துவது வழமை தான். அதுவும் குழந்தையை வீட்டில் விட்டு வேலைக்குப் போவதென்பது மிகவும் சிரமம் தான்.



பிரசவத்துக்குப் பின் ஒரு தாய் தன் தூங்கும் நேரத்தை மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. பகலில் உழைத்து விட்டு இரவில் நித்திரை கொள்வதற்குப் பதிலாக இரவில் கண் விழித்துக் குழந்தையைப் பார்த்துக் கொள்ள வேண்டியிருப்பதால் பகலில் தூங்கும் வழக்கம் பிரசவ விடுமுறையில் ஏற்பட்டுவிடும். நீண்ட கால விடுமுறைக்குப் பின் வேலைக்குப் போவது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும்குழந்தையை வீட்டில் விட்டு வேலைக்குப் போவது சிலருக்குக் குற்ற உணர்வை ஏற்படுத்தலாம்.6 அல்லது 12 வார விடுமுறைக்குப் பிறகும், பெண்கள் இன்னும் சற்று நீண்ட நாட்கள் விடுமுறை கிடைக்காதா என்று ஏங்குகிறார்கள்.



ஆனால் சில தாய்மாருக்கு வேலைக்குப் போகாமல் வீட்டில் இருப்பது குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது. தொடர்ந்து தன் குழந்தைகளுடன் இருந்து பல தூக்கமற்ற இரவுகளை கழித்த பிறகு தாய்க்கு மாற்றம் தேவை தான்.

நீங்கள் பிரசவ விடுமுறையின் பின் மீண்டும் வேலைக்குத் திரும்பிய பின் உங்கள் நண்பர்களும் உறவினர்களும் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். அவர்களின் உதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் குழந்தையைப் பிரிந்து வேலைக்கு வரும்போது குழந்தையை நினைத்து உங்களுக்கு ஒருவித பயம் இருக்கலாம். நீங்கள் உங்கள் முழு நேரத்தையும் குழந்தையுடன் செலவிட முடியாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

குழந்தை பிறந்தவுடன் நீங்கள் மிகவும் உற்சாகத்துடன் இருப்பீர்கள். உங்களின் உலகமே மாறி விட்டதாகத் தோன்றலாம். ஆனால் அதுவே உங்களின் எல்லாப் பேச்சிலும் பிரதிபலிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

சில நிறுவனங்களில் கணவர்களுக்கும் பிரசவ காலத்தில் விடுமுறை கிடைக்கிறது. அந்த வசதி உங்கள் கணவருக்கு இருந்தால் இருவரும் அந்த விடுமுறையை ஒரே சமயத்தில் எடுக்காமல் முதலில் நீங்களும், பிறகு உங்கள் கணவரும் பிரசவ கால விடுமுறையை எடுத்தால், குழந்தை பெற்றோரின் கவனத்தில் இருக்கிறது என்ற நினைப்பு உங்களுக்கு நிம்மதியளிக்கும்.

எல்லா வேலைகளிலும் முடியாது என்றாலும், நீங்கள் முடிந்தால் உங்கள் வேலை நேரத்தை மாற்றிக்கொள்ள முயற்சியுங்கள். அது உங்கள் குழந்தையைப் பார்த்துக் கொள்ள இலகுவாக இருக்கும். அல்லது வீட்டிலிருந்தே அலுவலக வேலையைச் செய்து கொடுக்க முயற்சிக்கலாம்.

என்ன தாய்மார்களே, குழம்பிப்போயிருக்கும் உங்கள் முகத்தில் கொஞ்சம் புன்முறுவல் தெரிகிறது போல் தெரிகிறதே? புரிந்துகொள்ளுங்கள்,செயலாற்றுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே!

# உதட்டை மெருகூட்ட.....

பெண்களுக்கு அழகு சேர்ப்பவை அழகான கண்கள், தலை மயிர், புருவம், உதடுகள் போன்றவை. அழகான உதடுகள் அனைவரையும் கவரும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஆனால் முறையான பராமரிப்பில் தான் அவை அழகாகத் தோற்றமளிக்கும் என்பதை பலர் மறந்துவிடுகின்றனர்.



காய்ந்த வெடித்த உதடுகள் அழகான தோற்றத்தைக் கெடுத்துவிடுகின்றன. அத்தோடு பேசுவதிலும், புன்னகைப்பதிலும்கூட அவை கஷ்டத்தைத் தந்து விடுகின்றன.

எனவே இன்றுநாம்அழகான உதடுகளை மேலும் அழகாக்க என்ன நடைமுறைகளைப் பின்பற்றலாம் என்று பார்ப்போம்...

*லிப்ஸ்டிக் தடவுவதற்கு முன் கோல்ட் கிரீம், மாய்ஸ்சுரைஸர் மற்றும் லிப் பாம் தடவுவது சிறந்தது.

*உதடுகள் இளஞ் சிவப்பு நிறத்தைப் பெறுவதற்கு, தூங்குவதற்கு முன் பீட்ரூட் சாறு தடவலாம்.

*உதடுகள் வழுவழுப்பாகவும், இளஞ் சிவப்பு நிறத்திலும் இருக்க ரோஜா இதழ்களை அரைத்துத் தடவுவது சிறந்தது.

*வெந்நீரால் உதடுகளைக் கழுவி, வஸ்லின் மற்றும் தேன் கலந்து குறைந்தது வாரத்துக்கு இருமுறை உதடுகளில் தடவி வந்தால் உதடுகளில் வெடிப்பு மறையும்.

*ரோஜா இதழ்களை வெண்ணெயில் கலந்து அதைக் கடைந்து உதட்டில் தடவலாம்.

*இரண்டு துளி கிளிசரின் மற்றும் அரைத் தேக்கரண்டி எலுமிச்சைச் சாறு கலந்து உதடுகளில் தடவினால் உதடுகள் பிளவுபடாமல் இருக்கும்.

*நாம் உண்ணும் உணவில் விட்டமின் பி மற்றும் சி ஆகியவற்றை அதிகம் உட்கொள்வதால் உதட்டுவெடிப்பைத்தடுக்கலாம்.

*இரண்டு துளி கிளிசரின் மற்றும் ஒரு தேக்கரண்டி பாலாடையை உதடுகளில் தடவி வர உதடுகள் வழுவழுப்பாக மாறும்.




# குட்பை சொல்லுங்கள் வயிற்று வலிக்கு!

பொதுவாகப் பெண்களுக்கு இருக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று தான் வயிற்று வலி. மாதவிலக்கு என்றில்லை... சாதாரண சமயங்களில் கூட வயிற்று வலியால் துடித்துப்போகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்காக இன்று நாம் சில பயிற்சிகளைப் பார்ப்போம்.

முதலில் சுவரில் முதுகை ஒட்டி, நிமிர்ந்தபடி, சப்பாணிகட்டி அமருங்கள்.

இடது உள்ளங்கையை விரித்து வயிற்றில் வைத்துக்கொள்ளுங்கள். வலது உள்ளங்கையை விரித்து வலப்புறத் தோளுக்கு அருகே வைத்துக்கொள்ளுங்கள். பிறகு மூச்சை உள்வாங்கிக் கொண்டே வலது கையால் மலையைத் தள்ளுவது போலக் கற்பனை செய்து கொண்டே அந்தக் கையை முன்னால் நகர்த்துங்கள். பிறகு மூச்சை வெளியே விட்டு வலது கையை பழைய நிலைக்குக் கொண்டு வாருங்கள்.



தொடர்ந்து இப்படி ஏழு முறை செய்யுங்கள்.

அடுத்து எழுந்து நின்று வலது உள்ளங்கையை விரித்தபடி நேராக மேலே தூக்குங்கள். இடது கையை விரித்துத் தரையைப் பார்த்தபடி வைத்துக் கொள்ளுங்கள். கால்களை அகல விரித்து நின்று கொண்டு அடிவயிற்றிலிருந்து '' ஊ...'' என்று சத்தம் எழுப்புங்கள்.

ஆறு முறை இப்படிச் செய்தால் வயிற்று வலி பறந்து உங்கள் உடல் இலேசாகி மனதில் நிம்மதி பரவும்.


நேராக நின்று, வயிற்றின் நடுப் பகுதியில் கையை வைத்து மசாஜ் செய்வது போல கடிகாரச்சுற்றில் தடவுங்கள். சின்னச்சின்ன வட்டமாக ஆரம்பித்து பிறகு பெரிய வட்டங்களாக்குங்கள்.

பிறகு பெரிய வட்டங்களை எதிர்ச்சுற்றில் சிறிதாக்கிக் கொண்டே வந்து தொடங்கிய இடத்தில் முடியுங்கள்.

இப்படி இரண்டுதிசைகளிலும்தொடர்ந்து சில நிமிடங்கள் செய்தால், வயிற்று வலிக்கு ''குட்பை'' சொல்லிவிடலாம்.

என்ன சகோதரிகளே, இத்தனை நாள் இது தெரியாமல் போய்விட்டதே என்று யோசிக்கத் தோன்றுகின்றதா? இனிக் கவலையை விடுங்கள். தேவையற்ற வலியைத் தூர விரட்டுங்கள்.

# அவல் சப்பாத்தி



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| அவல் | அரை கப். |
| கோதுமை மா | 1 கப் |
| சிறிது புளித்த தயிர் | 1 கப் |
| மிளகாய்த் தூள் | 1 மேசைக்கரண்டி |
| சீரகம் | 1/2 மேசைக்கரண்டி. |
| உப்பு | தேவையான அளவு. |
| எண்ணெய் | தேவையான அளவு. |

**செயன்முறை**

அவலைச்சுத்தம் செய்து அதனுடன் தயிர்,சிறிதளவு உப்பு சேர்த்து கலந்து ஒரு மணி நேரம் ஊற வையுங்கள். பிறகு அதனுடன் கோதுமை மா,மிளகாய்த் தூள், உப்பு, சீரகம், சிறிதளவு தண்ணீர் சேர்த்துப்பிசையுங்கள். இதனை சிறுசிறு உருண்டைகளாக எடுத்து சூடான தோசைக்கல்லில் போட்டு சுற்றிலும் எண்ணெய் அல்லது நெய் விட்டு சுட்டெடுங்கள். பரிமாறி மகிழுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விடுகதைகள்

* உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார். அவர் யார்? – தராசு
* தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்? - பென்சில்
* வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்? - மண்புளு
* வெயிலில் மலரும், காற்றில் உலரும் அது என்ன? - வியர்வை
* தீக்குளித்தாலும் திடமாக இருப்பார். அவர் யார்? - செங்கல்
* புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு அவன் யார்? - கலண்டர்
* கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவர் யார்? - ஆமை

*கு.சாருஜா, தரம் 9, கொ/இந்துக் கல்லூரி.*

# மானம் போகக் கூடாது

பிரெஞ்சுப் பேரரசர் பதின்மூன்றாம் லூயியிடம் அறிவுக் கூர்மை மிக்க ரிச்லு என்பவர் அமைச்சராக இருந்தார். அரசர் சொல்கிறாரே என்பதற்காக எதையும் அவர் ஒப்புக் கொள்ள மாட்டார். அரசரிடமே எதிர்த்துப் பேசுவார். இதனால் கடுப் படைந்த அரசர் எல்லோர் முன்னிலையிலும் அமைச்சரை அவமானப் படுத்த வேண்டும் என நினைத்தார்.



அரசசபை கூடியது. முதலாவது அரசரும் அடுத்து ரிச்லுவும் மற்றும் அமைச்சர்களும் பிறரும் நின்று பேசிக் கொண்டிருந்தனர். வழக்கம் போல அரசரின் பேச்சில் குறுக்கிட்டார் ரிச்லு. வாய்ப்பை எதிர்பார்த்த அரசர் அவரின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தார்.

எதிர்பாராது நடந்ததைக் கண்ட ரிச்லு அதிர்ந்து போனார். திருப்பி அரசரை அறைய முடியாது. அப்படிச் செய்தால் மறுகணமே உடலில் உயிர் இருக்காது. இந்த இக் கட்டான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டும். இல்லை என்றால் மானம் போய்விடுமே. ''என்ன செய்வது?'' என்று சிந்தித்தார்.

தன்பக்கத்திலிருந்த அமைச்சரை ஓங்கி அறைந்த ரிச்லு, "அரசர் என்னை அறைந்து பக்கத்தில் இருப்பவருக்குக் கொடுக்கச் சொன்னார். நீரும் அப்படியே அடுத்தவருக்கு அனுப்பி விடும்" என்றார்.

சிறிது நேரத்திற்குள் நிலைமையைச் சாதகமாக்கி விட்டார் ரிச்லு. அப்படியே அங்கிருந்த எல்லோரும் பக்கத்தில் இருந்தவரிடமிருந்து அறைவாங்கினர்.

ரிச்லுவின் அறிவுக் கூர்மையை அரசனால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

# அறிவுக்கு சில விருந்து

* முட்டாள் பறவை என வர்ணிக்கப்படுவது – வான் கோழி
* ஒட்டகம் ஒரு நாளுக்கு சராசரியாக தரும் பாலின் அளவு – 24 லீட்டர்
* 300 அடி உயரத்திலிருந்து கீழே உள்ள பொருளை அறியும் பறவை – ஆந்தை
* மிக சோம்பேறியான பறவை ( மழை காலத்தில் – நடக்கும் போது பாசி பிடிக்கும் என வர்ணிப்பார்கள்) – தேவாங்கு
* பறக்கும் நரி என எந்த பறவையை அழைப்பர் – பல்லி
* தலை மயிரின் நிறத்துக் கேற்ப மனிதனுடன் ஒட்டி வாழும் தன்மை கொண்டது – பேன்
* அதிக மூளை வளர்ச்சி கொண்ட பிராணி – குரங்கு
* அடைகாக்கத் தெரியாத பறவை எது – குயில்
* ஒரு நாளில் (3/4) முக்கால் நாள் தூங்கியே கழிக்கும் பிராணி – தேவாங்கு

*தி.சாரங்கன்*
*தரம் – 10*
*யா/கொக்குவில் இந்து கல்லூரி.*

# ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள்

உலக சுகாதார நிறுவனம் உருவாக்கப்பட்ட ஆண்டு – 1948 ஆம் ஆண்டு.
சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு – 1907 ஆம் ஆண்டு.
தபால் முத்திரை அட்சிடப்பட்ட ஆண்டு – 1948 ஆம் ஆண்டு.
நோபல் பரிசு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு – 1901 ஆம் ஆண்டு.
தபால் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு – 1832 ஆம் ஆண்டு.
உலக வளிமண்டல ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்பட்ட ஆண்டு – 1950 ஆம் ஆண்டு.
முதலாவது உலக மகாயுத்தம் நடைபெற்ற ஆண்டு – 1914 ஆம் ஆண்டு.
எயார் லங்கன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு – 1979 ஆம் ஆண்டு.
உலகில் முதலாவது செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட ஆண்டு – 1967 ஆம் ஆண்டு.
முதலாவது தரை கோள் செய்மதி நிலையம் தொடங்கப்பட்ட ஆண்டு – 1976 ஆம் ஆண்டு.

*எம்.பிரதீப், செங்கலடி, மட்டக்களப்பு.*

# உங்கள் சிந்தனைக்கு

உலகில் எதுவுமே இல்லாதவனுக்குத் தான் எதையும் தாங்கும் இதயம் உண்டு.
தீக்குச்சி ஒரு முறை சிரிப்பதால் மெழுகுவர்த்தி வாழ் நாள் முழுவதும் அழுகின்றது.
தன்னைத் தானே புகழ்பவன் தன்னலவாதி.
எள்ளைக் கொட்டினால் பொறுக்கலாம் ஆனால் சொல்லைக் கொட்டினால் பொறுக்க முடியாது.
கட்டுப்பாடு மனிதனுக்கு அவசியம் கட்டவிழ்த்தால் கெட்டு விடும் இலட்சியம்.

*தி.சரன். மட்டுவில்*

# நாடுகளின் இயல்பு


| | | |
|---|---|---|
| உலகத்தின் கூரை | - | திபெத் |
| சீனாவின் துயரம் | - | குவாங்கோ நதி |
| ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - | சுவிற்சர்லாந்து |
| மத்திய தரைக்கடலின் திறவுகோல் | - | ஜிப்றோல்ரர் |
| நைலின் கொடை | - | எகிப்து |
| ஏழு குன்றுகளின் நகரம் | - | றோம் |
| பொன் வாயில் நகரம் | - | சான் பிரான்சிஸ்கோ |
| தெற்கேயுள்ள பிரித்தானியா | - | நியூசிலாந்து |

*ச.மதுமதி, ஆண்டு 9, யா/இ.ம.கல்லூரி.*

# சிறார்களின் கைவண்ணம்



ருஷினி காந்தன், தரம் 10, யா/ஹென்ஸ்லியாய மத்.ம.வித்தியாலயம்.



வி.சுதர்சினி, தரம் 9, கிளி/மாசார் அ.த.க.பாடசாலை.



கு.கிருஷ்ணா, தரம் 10, சிவநகர் அ.த.க.பாடசாலை.



வ.பிரியதர்சன், தரம் 9, யா/மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நெட் குழப்பம்



அருகே உள்ளது வித்தியாசமான, விநோதமான படம் ஒன்று. படத்தைப் பார்த்தால் மாடிக் கட்டடம் ஒன்று ஏதோ இடிந்து விழுந்து விட்டது போலவும் - சிலர் நின்று அதனைத் திருத்துவது போலவும் தெரிகிறது.

ஆனால், உண்மை அதுவல்ல. தட்டையான சுவர் ஒன்றில் யன்னல்கள், தூண்கள் என்பன இருப்பது போன்ற ஓவியத்தை ஓவியர்கள் சிலர் வரைந்து கொண்டிருக்கிறார்களே தவிர அங்கே மாடிக் கட்டடம் இடிந்து விழவும் இல்லை எவரும் அதனைத் திருத்தவும் இல்லை.

# நெட் குறும்பு



இந்த படத்தில் எத்தனை பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கேட்டால் இரண்டு பேர் என்று தடாலடியாக பதில் தந்து விடுவீர்கள். ஆனால், நாங்கள் மூன்றுபேர் என்றவுடன் அடுத்த நபர் படத்தின் உள்ளே எங்கேயாவது ஒளிந்திருக்கிறாரோ... என்று கூர்ந்து பார்க்கப் போய்விடாதீர்கள்.

அந்த இரண்டு பெரிய மனிதர்களுக்குப் பின்னால் ஒரு சிறிய மனிதர் போகிறாரே... அவரைப் பார்த்தால் பெரிய மனிதர் போல் தோன்றவில்லையா.

## ஜோக்

புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட 'வக்கும் கிளீனர்' **(Vacuum Cleaner)** ஒன்றை விற்பனை செய்வதற்காக ஒரு விற்பனைப் பிரதிநிதி ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். உயரமான பெண் ஒருத்தி கதவைத் திறந்தாள். அவள் பேச முன்னரே உள்ளே நுழைந்தவர் வீட்டின் ஹோலுக்குள் சென்று விட்டார். தனது கறுப்பு நிற பிளாஸ்டிக் பையிலிருந்த முழுச் சாணத்தை யும் அங்கு விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தில் கொட்டினார். "மடம் என்னிடன் உள்ள புதிய வக்கும் கிளீனரால் சாணத்தை முற்றாகச் சுத்தம் செய்ய முடியாமல் போனால் சாணத்தை நான் தின்னுவதற்கு தயார்" என்று சவால் விடுத்தார்.


வீட்டுக்காரி கேட்டாள் "அப்படியானால் உங்களுக்கு தக்காளி சோஸா அல்லது மிளாகய் சோஸா தேவை".




"ஏன்?" என்று கேட்டான் வந்தவன்.


காலையில் தான் இந்த புதிய வீட்டில் குடியேற வந்தோம். இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை" என்றாள் வீட்டுக்காரி.

# கண்ணாமூச்சி



மேலே உள்ள படத்தில் குறடு, சுத்தியல் போன்ற சில ஆயுதங்கள் தெரிகின்றன. கறுப்பு நிறத்திலே பார்த்தால் சில ஆயுதங்கள் தெரிகின்றனதான். அதேவேளை அந்த கறுப்பின் பின்னால் தெரியும் வெள்ளை நிற பகுதியைப் பாருங்கள் மேலும் சில ஆயுதங்கள் ஒளிந்திருக்கின்றன.

# மௌனச் சிரிப்பு



போக வழி தெரிகிறது - ஆனால் வெளியே வருவது எப்படி....?

# நெட் ஓவியம்



அருகேயுள்ள படத்தைப் பாருங்கள் சிலர் ஏதோ குடித்துவிட்டு கன்னா பின்னா வென்று விழுந்து கிடப்பது போல தெரிகிறது... அவர்கள் அப்படி விழுந்து கிடக்கிறார்களோ.... என்னவோ? ஆனால் விழுந்து கிடப்பதில் ஓர் அழகு தெரிகிறது அல்லவா..? அதாவது ஒரு மனித முகத்தின் உருவம் வரக் கூடிய வாறாக விழ்ந்து கிடக்கிறார்கள் அல்லவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதித் தேர்தல் களத்தில் புதிய முகங்கள்!

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரண்டு கட்சிகள் மாத்திரம் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்ற நிலையில் யாழ். குடாநாட்டு தேர்தல் களம் இன்னமும் சூடு பிடித்திருப்பதாகத் தகவல் இல்லை.

பிரதான கட்சிகள் இன்னமும் இதனை எழுதும்வரை களம் இறங்காத நிலையில் வேட்பாளர்கள் யார் யார் என்ற பரபரப்பு பொது மக்கள் மத்தியில் கடந்த வாரம் முழுவதும் காணப்பட்டது.

குடாநாட்டு தேர்தல் அரங்கில் இந்த முறை பல புதிய முகங்கள் தோன்றியிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களில் அரைவாசிப்பேர் புதியவர்கள்என்ற தகவல் பத்திரிகைகளில் வெளி வந்துள்ளது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் தேசிய எழுச்சிப்பேரவையின் தலைவருமாகிய சூ.சிறில், விவசாயச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம், சர்வதேச மாணவர் பேரவைத் தலைவரும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவருமாகிய கஜேந்திரன்ஆகியோரும் புதிய முகங்களில்அடங்குவர்.

கடந்த காலங்களில் இவர்கள் பல மக்கள் போராட்டங்களையும், மாணவர் எழுச்சி நிகழ்வுகளையும் முன்னெடுப்பதில் தீவிர பங்கு வகித்தவர்கள்.

விடுதலைப்புலிகளின் வழிகாட்டலை ஏற்று அவர்களோடு நெருங்கிச் செயற்பட்டு வந்தவர்கள். கட்சி மற்றும் அரசியல் பின்புலங்கள் இன்றியே பொதுப்பணிகளில் ஈடுபட்ட இவர்கள் இத் தேர்தல் மூலம் அரசியலில் பிரவேசிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இவர்களுடன் திருமதி பத்மினி சிதம்பரநாதன் என்ற பெண் வேட்பாளரும் ஒருவர்.பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக பெண் வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடிவாகி இருக்கிறது. வட மாகாண பனைத் தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சிவனேசனும் வேட்பாளர் பட்டியலுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறார். இவர்களில் யார் யார் களத்தில் குதிப்பார்கள் என்பது வேட்பு மனு தாக்கல் செய்யப்படும் போது தான் நிச்சயமாகும்.




இந்த புதியவர்களின் வருகையால் குடாநாட்டு அரசியலில் புதிய பரிணாம மாற்றங்களும் நிகழக் கூடும் என்பது பலரது எதிர்பார்ப்பு.

மூத்த அரசியல்வாதி ம.க. ஈழவேந்தனின் பெயரும் வேட்பாளர் பட்டியலில் இடம் பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட பின்னர் இவர் தற்போது யாழ்ப்பாணத்தில் அரசியல் பேச்சாளராக இருந்து வருகிறார் விடுதலைப்புலிகளின் கொள்கைகளை வலியுறுத்திகூட்டங்களில் உரையாற்றி வருகிறார். விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரோடும் நெருங்கிச் செயற்பட்டு வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. சார்பில் யார் யார் போட்டியிடப் போகிறார்கள் என்பது இன்னமும் ரகசியமாகவே இருந்து வருகிறது. பரப்புரை மற்றும் தேர்தல்பணிகளை முழுவீச்சில் ஆரம்பிக்க அக்கட்சி தயாராகி வருவதாக கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் புளொட் அமைப்பினர் ஈ.பி.டி.பி.யோடு சேர்ந்து போட்டியிடுவர்என்று வெளியாகிய தகவல்களை புளொட் மறுத்திருக்கிறது. அப்படி ஒரு எண்ணமும் தமது தலைமைக்குக் கிடையாது என்று புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட பிரமுகர் ஒருவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் இந்த முறை ஜனநாயக சூழலில் நடைபெறமாட்டாது என்றே எதிர்பார்ப்பதாகவும் அதனால் யாழ்ப்பாணத்தில் போட்டியிடாமல் ஒதுங்கி இருக்க கட்சி முடிவு செய்யக் கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் தேர்தல் வியூகம் என்ன என்பது தெரியவில்லை. கடந்த தடவை போன்று சுயேச்சைக் குழு ஒன்றையே அது களமிறக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கடைசி நேரத்தில் சுயேச்சையாக தேர்தலில் குதிப்பார் என்று அவரது தீவிர ஆதரவாளர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள்.

இந்தத் தேர்தலில் வடக்கு — கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சேர்ந்த 2 லட்சத்து 66 ஆயிரம் வாக்காளர்களும் வாக்களிப்பதற்கு வசதி செய்யப்படுமா என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இவர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் எங்கே நிறுவப்படும் என்பது இன்னமும் நிச்சயிக்கப்படவில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தேர்தல் வாக்களிப்பை நடத்துவது தொடர்பாக தேர்தல் திணைக்களமும் இதுவரை முடிவு எதனையும் அறிவிக்கவில்லை. தேர்தல் நெருங்கும் சமயத்தில் — காலக்கிரமத்தில் — அதற்கான வாய்ப்புகள் ஏதும் இருந்தால் அதுகுறித்து ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தெரிவித்திருக்கிறார்.




கடந்த தடவை தேர்தலின் போது இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கான நிலையங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களிலேயே அமைக்கப்பட்டன.

இந்தத் தடவை தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை நிறுவ விடுதலைப்புலிகள் அனுமதிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**- வலிகாமத்தான் -**

---

## சொற்சிலம்பம் போட்டி இல.96

**சொற்சிலம்பம் 96 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் மார்ச் 06 ஆம் திகதி ஆகும். விடைகள் மார்ச் 13 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மார்ச்20 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.94க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.**

**தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.94

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 க | 3 வை | ■ | 4 உ | 5 ப | 6 ச | 7 ரி |
| 8 க | ண் | ண | 9 கி | ■ | 10 க | ட் | சி |
| ம் | ■ | 11 வ | ழி | 12 கா | ட் | டி | ■ |
| 13 பா | 14 க | ம் | ■ | 15 த | டு | ■ | 16 கு |
| 17 வ | டை | ■ | 18 க | லி | ■ | 19 க | ரு |
| ம் | ■ | 20 தூ | ண் | ■ | 21 க | ல் | வி |
| ■ | 22 ம | ண் | ட | ப | ம் | ■ | ச் |
| 23 வே | ண் | டு | ம் | ■ | 24 பி | ச் | சை |

## சொற்சிலம்பம் போட்டி இல.96

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| 10 | | 11 | ■ | 12 | | | |
| | ■ | 13 | 14 | ■ | | ■ | |
| ■ | 15 | | | 16 | ■ | 17 | |
| 18 | | | ■ | 19 | | | |
| 20 | | ■ | 21 | | ■ | | ■ |
| 22 | | | | ■ | 23 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.96

**இடமிருந்து வலம்**

1. வேடிக்கைப் புலவன்.
5. சுட்டும் சொல்.
7. திசையின் சுருக்கம்.
8. எங்கும் நிறைந்திருக்கும் தன்மை.
10. மாட்சிமை/மேன்மை.
12. மீண்டும் வா/சென்ற திசைக்கு எதிர்ப்புறம் பார்க்க உத்தர விடுவது.
13. இணங்க.
15. பாட்டின் பதத்தில் ஓர் உறுப்பு.
17. வீதம் கணக்கிடுவது இந்த அடிப்படையில்.
18. மேலிருந்து நீர் விழும் இடம்.
19. ஆரவாரம்/ ஜனக் கூட்டத்தில் ஏற்படுவது.
20. கூட்டல் குறி.
21. இணக்கச் செயல்.
22. ஒரு தானக் குறிப்பு.
23. சர்ப்பம்.

**மேலிருந்து கீழ்**

1. கமக்காரன்.
2. சமுத்திரம்.
3. பாடல்.
4. நோய்.
5. உள்புறம்.
6. கூட்டுவதற்கு உதவும்.
9. குடி.
11. மகள்.
14. சேர்.
15. அருந்துதல்.
16. நஞ்சு.
17. நூறு செய்யுள் கொண்ட தொகுதி.
18. களைப்பால் வருவது.
21. முதல்எழுத்தை இப்படித் தான் உச்சரிப்போம்.

## சொற்சிலம்பம்-93 பரிசு பெறுவோர்.

1. சா. கமலராணி,
   167, மத்திய வீதி,
   திருகோணமலை.
2. அ. சஞ்ஜீவன்,
   77/3 ஓடைக்கரை வீதி,
   குருநகர், யாழ்ப்பாணம்.
3. கே.சாமினி,
   54/6 கடல் காட்சி வீதி,
   திருகோணமலை.

### பாராட்டுப்பெறுவோர்

1. திரு. இ.இராசையா,
   ரதி வாசம்,
   கோப்பாய்.
2. கா.வாமதேவன்,
   அன்பு வெளிபுரம்,
   திருகோணமலை.
3. யே.ஜெமி, இல.135,
   பெரிய கமம்,
   மன்னார்.
4. த.ரஜிதரன்,
   நீதிமன்ற வீதி,
   திருகோணமலை.
5. த. தவேல்,
   புகையிரத வீதி,
   யாழ்ப்பாணம்.
6. ம.நித்தியராஜ்,
   புதுக்கமம்,
   மன்னார்.
7. இ.குலசிங்கம்,
   5 ஏ வட்டாரம்,
   நயினாதீவு.
8. திருமதி. ஜெயமணி ஜேசுநாதன்,
   91/1 மேபீல்ட் லேன்,
   கொழும்பு — 13.
9. எஸ்.சுந்தரலிங்கம்,
   மயூரா பிளேஸ்,
   கொழும்பு — 06.
10. பூ.லோகினி,
    அரியாலை,
    யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்

# பித்தன் பதில்கள்

*கி.நாதன், பொலன்னறுவை*

**கேள்வி— பித்தரே! சினிமாவில் நடப்பது போன்று கணவன் மனைவியை தூக்குவது — அடிப்பது என்பன உண்மையான வாழ்க்கையில் சாத்தியமா?**

பதில் — எனது வாழ்க்கையில் தூக்



குவது என்பது சாத்தியப்படாத ஒன்று ஏனென்றால் எனது மனைவியை தூக்குவதும் — ஒரு மூடைமாவைத் தூக்குவதும் ஒன்றுதான். ஆனால் அடிப்பது என்பது... அடிக்கடி... ஹி.. ஹி.. ஹி...

தம் சுகம் தரும் என்று ஆசிரியர் படிப்பித்தால் அதனைக் கேட்பார்கள். ஆனால், இந்தக்கால மாணவர்கள் இல்லை இல்லை முத்தம் சுகம் தரும் என்பதுதான் சரியானது என்று வாதிடுகிறார்கள்.

*செ.வத்சலா — திருநெல்வேலி.*

**கேள்வி — பித்தா உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை என்று எதனை சொல்லுவீர்கள்?**

பதில் — ஸ்குரூட் ரைவரை.

*து.துவாரகா— வண்ணார்பண்ணை.*

**கேள்வி — பித்தா நீங்கள் அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு செல்ல தாமதித்து விட்டால் உங்களது மனைவி உங்களுக்கு என்ன தண்டனை வழங்குவார்?**

பதில் — அன்றைக்கு எனது மனைவியே சாப்பாடு சமைப்பாள். அதுவே எனக்கு பெரும் தண்டனை தானே.

*சு.வேல் முருகன், வத்தளை*

**கேள்வி — வல்லினம், மெல்லினம், இடையினம் என்பவற்றை உதாரணங்களுடன் விளக்கிக் காட்டுங்கள்?**

பதில் — வல்லினம் — குஷ்பு
மெல்லினம் — சிம்ரன்
இடையினம் — ஸ்நேகா

கொஞ்சம் பொறுங்கள் யாரோ வரும் சத்தம் கேட்கிறது. பார்த்துவிட்டு வந்து மிகுதிப் பதிலைத் தருகிறேன்... ஐயய்யோ எனது மனைவி வருகிறாள்... தாரத்திடம் தான் இவைகளையெல்லாம் பெற்றுக் கொள்ளலாம்.

*சு.தர்ஷினி — கல்வயல்*

**கேள்வி — இந்த தேர்தலில் மூட்டை**



**கட்டுவது யார்? அம்மையாரா? அங்கிளா?**

பதில் — அம்மையார் கூடாத கூட்டத்துடன் கூட்டுச் சேர்ந்திருப்பதால்... அங்கிளின் மூட்டை முடிச்சுக்கள் இருந்த இடத்திலேயே இருக்கும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்... ஆனால், அதிகாரம் அம்மையாரின் கையில் இருப்பதால் அங்கிள் ஆட்சியைப் பிடித்தால் அதனையும் கலைத்து விட்டு மீண்டும் அம்மையார் தேர்தல் வைப்பார் போலத் தெரிகிறதே.

*ஐ.அ?ங்கசுகன் — பெரியகேரதீவு*

**கேள்வி — ஐயா! நான் பேச்சுப் போட்டி ஒன்றில் கலந்து கொண்டு பரிசு பெற ஆசைப்படுகிறேன். நான் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும்?**

பதில் — வீட்டில் உங்கள் அப்பாவை அம்மா ஏசுவார் அல்லவா! அதனைப் பார்த்து பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

## பித்தனின் கேள்வி

***கேள்வி:— பித்து சார் காதல் என்பது கண்களைப் பார்த்தவுடன் வருமா அல்லது வயதுக்குத்தான் வருமா?***

## வாசகர் பதில்கள்

*த. ஹரன் — திருகோணமலை.*

அது கண்களைப் பார்த்தும் வராது! வயதுக்கும் வராது. நல்ல மனங்களைப் பார்த்துத்துதான் வரும்.

*விஜித்தா — அளுத்மாவத்தை.*

கண்களால் பார்த்துத்தான் வரும். ஆனால், கண்களையும், வயதையும் பார்ப்பதற்குமுன் அவரிடம் இருக்கும் பணத்தையும், கவர்ச்சி அழகையும் பார்த்தால் இந்தக் காலத்தில் 'பட்' என்று காதல் வரும்.

*கவிதாஞ்சனா — ஹா-எல.*

என்ன கதையா?.... கண்களால் பார்த்தவுடன் காதல் வருவதென்றால் இப்போ எத்தனை தடவைகள், எத்தனை பேர் என்னைக் காதலித்திருக்க வேண்டும்.

*தர்ஷினி — வத்தளை.*

கண்களால் பார்த்து, வயதை—இன்னும் பலதை அறிந்து மனதில் ஒரு கணக்குப் போட்டு அது.. அது எல்லாம் ஒரு கலையப்பா... பேசாமா நீங்களும் காதலித்துப் பாருங்கள்....

*சிபா — மாபொல.*

காதலா? அது வரவே கூடாது என்பது தான் என் கருத்து. அது கண்ணைப் பார்த்தும் வரக்கூடாது! வயதைப் பார்த்தும் வரக்கூடாது. வரக்கூடாது..! கூடாது..! வரவே கூடாது..!

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை பெப்ரவரி21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



*அமலன் — சாவகச்சேரி.*

கேள்வி:— பூமியில் வாழ்வதற்கு எந்த இடம் சிறந்தது பித்தா?

பதில்:— எந்த இடத்தையும் சிறப்பாக அமைத்து அதில் வாழ்வதுதான்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே...நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள்பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.

*ஏ. வைகுந்தன், தாளையடி.*

**கேள்வி — பித்தா! சீதனம் வாங்கி சின்னதாக ஒரு வீடு கட்டலாம் என்று நினைக்கிறேன் உங்கள் அபிப்பிராயம் என்ன?**

பதில் — சீதனப் பணத்திலே — சின்னவீடா... யப்பா.. பச்சைத் துரோகம்...

*கே.அ.சேனாதிராஜா, கரவெட்டி.*

**கேள்வி — பித்தா! பிள்ளைகளுக்கு கோடீஸ்வரன் என்று பெயர் வைத்தால் — கோடீஸ்வரர்களாகவும், அறிவுச் செல்வன் என்று பெயர் வைத்தால் அறிவுள்ளவர்களாகவும் வருவார்கள் என்கிறார்களே! அது உண்மையா?**

பதில் — 'பேர்' ஆசை பெரு நட்டம் என்பார்கள்... சும்மா பெயரை வைத்துவிட்டு பிள்ளை அப்படிவருவான், இப்படி வருவான் என்றெல்லாம் கனவு காணாதீர்கள். பிள்ளையை நன்றாக படிப்பித்து நல்ல நிலைக்கு வரப்பண்ணுங்கள்.

*வை.கமலாஜினி, மன்னார்.*

**கேள்வி — பித்தா! அந்தக் கால மாணவர்களுக்கும் இந்தக் கால மாணவர்களுக்கும் வித்தியாசம் என்ன?**

பதில்— அந்தக்கால மாணவர்கள் சுத்




*ச.துஷ்யந்தன், மண்டான்*

**கேள்வி — ஜோக் பிளீஸ் பித்தா!**

பதில் — ஒரு அதிகாரி தனது ஊழியனை அழைத்து இரண்டு கடிதங்களைக் கொடுத்து அவைகளை தபாலில் சேர்த்து விட்டு வரும்படி கூறினார். கடிதங்களில் ஒன்று லண்டன் செல்ல வேண்டியது. மற்றது யாழ்ப்பாணம் செல்ல வேண்டியது. தபால் நிலையத்துக்கு சென்று விட்டு வந்த ஊழியனை அழைத்து கடிதங்கள் இரண்டையும் தபாலில் சேர்த்துவிட்டாயா? என்று கேட்டார் அதிகாரி. ஊழியன் சொன்னான் " ஆம் ஐயா!ஆனால் அதில் ஒரு சிக்கல். நீங்கள் லண்டன் செல்ல வேண்டிய கடிதத்துக்கு 4 ரூபா 50 சதம் முத்திரையும். யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய கடிதத்துக்கு 20 ரூபா முத்திரையும் ஒட்டி விட்டீர்கள்" என்றான். அப்படியென்றால் முத்திரைகளை கிழித்து மாற்றி ஒட்டி அனுப்பியிருக்கலாமே என்றார் அதிகாரி. ஊழியன் சொன்னான்" முத்திரைகளை கிழிக்க எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன். முடியவில்லை. கடைசியில் முத்திரைகளுக்கு தக்கதாக விலாசத்தை மாற்றி எழுதி அனுப்பி விட்டு வந்தேன்."

*க. மதிவதனன்— மல்லாவி*

**கேள்வி— இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஹெல்மெட்டை தலையில் அணிந்து செல்வோர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றதும் அதனைக் கழற்றி கையிலே கொண்டு செல்கிறார்களே! இது எதைக் காட்கிறது.**

பதில்— விடு— தலை கிடைத்து விட்டதைக் காட்டுகிறது.

*கை.விந்தன், சிலாபம்*

**கேள்வி — உண்மையான அன்பு, பாசம், கருணை என்பவற்றை தாயிடமா, தாரத்திடமா பெற்றுக் கொள்ளலாம்?**

பதில் — நிச்சயமாக தாயிட...



*இ.விஜிகரன், கொச்சிக்கடை*

**கேள்வி — பித்தா உங்கள் மனைவியின் சேலையைத் துவைக்க உங்களுக்கு வெட்கம் இல்லையா? உங்களுக்கு ஒரு மீசை தேவையா?**

பதில் — யார் சொன்னது நான் எனது மனைவியின் சேலையைத் துவைப்பதாக. அப்படி என்ன நான் கேடு கெட்டவனா? ம் ஹம்.. எனது மனைவி சுடிதார் தான் அணிவார். ஹி.. ஹி.. ஹி...

*க.ஜெளலி— பெரிய பளை*

**கேள்வி— பித்தா நன்றி மறந்தவரை எவ்வாறு உணர வைக்கலாம்?**

பதில்— நாயை விட்டு கடிக்க வைக்கலாம். அப்போதாவது அதன் குணம் அவரில் சுவறும் அல்லவா?

*ந. நிறோஜினி இராமநாதன் வீதி— யாழ்ப்பாணம்.*

**கேள்வி— மை டியர் பித்தா... ஒரு மனிதனுக்கு இன்பமான வாழக்கையை மட்டும் கொடுக்காமல் இறைவன் ஏன் துன்பத்தையும் கொடுத்துள்ளான். பிளீஸ் பதில் கூறுங்கள்..?**

பதில்— கண்ணா.. உங்கட டக்கா டிக்கா விளையாட்டுக்கள் எல்லாம் கடவுளுக்கு தெரியாதா என்ன?.. வாழ்க்கையிலே இன்பத்தை மட்டுமே கொடுத்தால் நீங்கள் எங்கே கடவுளை நினைக்கப் போகிறீர்கள்...

*சுபா ஜெகநாதன் — நல்லூர்.*

**கேள்வி— திருமணம் என்பது ஒருவரது வாழ்க்கைக்கு அவசியமானது தானா?**

பதில்— அவசியம் இல்லை என்று நான் சொன்னால் எவராவது அதனை ஏற்றுக் கொண்டு திருமணம் முடிக்காமல் இருக்கப் போகிறார்களா என்ன?

*க. பிரசாத் — திருவையாறு*

**கேள்வி— பித்தா! இப்பொழுது பெண்கள் இறுக்கமான ஆடைகளை அணிகிறார்களே! ஏன்?**

பதில்— ஐயா... ராசா... இவ்வளவு நாளும் எங்கே அய்யா இருந்தீர்கள்? எப்பொழுதோ இருந்தே பெண்கள் இறுக்கமாக ஆடை அணியத் தொடங்கி விட்டார்கள். நாமும் அது பற்றி எழுதித் தள்ளி விட்டோம். ஆனால் யாரும் கேட்டு திருந்தியதாக இல்லை. மாறாக நாங்கள் கண்டித்து எழுத எழுத இறுக்கங்கள் மேலும் மேலும் இறுக்கியதே தவிர இளகிய மாதிரித் தெரியவில்லை. எனவே இதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரிய பின்விளைவுகளை உத்தேசித்து நாமும் கண்டித்து எழுதுவதை கைவிட்டு விட்டோம் இந்த இவ்வளவும் நடந்து முடிந்து விட்ட நிலையில் இப்போதான் நீர் வந்து பெண்கள் இப்பொழுது என்று கேள்வி கேட்கிறீரே.. ஐயா.... இது நியாயமா, தர்மமா, உலகம் இதைத் தாங்குமா...?

*எஸ்.கயூ, விஸ்வமடு*

**கேள்வி — கட்டிய மனைவியை மதிப்பவனை எப்படி அழைப்பது? மிதிப்பவனை எப்படி அழைப்பது?**

பதில்— மதிப்பவனை — ஆண் பிள்ளை எனலாம். மிதிப்பவனை — அலி என்று அழைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்தளை புனித அன்னமாள் பாலர் பாடசாலை வருடாந்த கலை நிகழ்ச்சி





வத்தளை புனித அன்னம்மாள் பாலர் பாடசாலையின் வருடாந்த கலை நிகழ்ச்சி அண்மையில் கொழும்பு டவர் மண்டபத்தில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கலை நிகழ்ச்சியில் இடம் பெற்ற சிறார்களின் நடனக் காட்சிகளையும், முன்னாள் மாணவர்களின் நடனக் காட்சிகளையும் படங்களில் காணலாம். 26 ஆவது தடவையாக இப் பாலர்பாடசாலையின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# கலை நிகழ்வுகள்



இலங்கையின் 56 ஆவது சுதந்திர தினத்தன்று முஸ்லிம் சமய விவகார அமைச்சின் அனுசரணையில் கலாசார அமைச்சு ஏற்பாடு செய்திருந்த கலாபூஷணம் விருது விழாவில், பதக்கம் பராட்டுப்பத்திரம்– பொற்கிழிபெற்ற கலை–இலக்கிய வாதிகளான திக்கவல்லை கம்மால், ஜோபு நஸீர், நெய்நஹீம் ஸஹீத், மானா மக்கின், எச்.எம்.புண்ணியாமீன், எம்.என்.மிஹ்ராஜ ஆகியோரை படத்தில் காணலாம்.

# இலங்கையில் வெளியிடப்படும் ஆபாசத் திரைப்படங்கள்

இலங்கையில் தொடர்ந்து திரையிடப்பட்டு வரும் தமிழ் ஆபாசத் திரைப்படங்கள் தொடர்பில் ஆரம்பத்தில் பல எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும், இப்போது இவை பற்றி எவரும் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

நாளுக்கு நாள் இந்த குப்பைகளின் இறக்குமதி தொடர்ந்து கொண்டிருக்கிறது. வடக்கு, கிழக்கில் இப் படங்களை வெளியிட முடியாதபடி விடுதலைப் புலிகள் கடுமையான கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

ஆனால், கொழும்பிலும், மலையகத்திலும் இத் திரைப்படங்கள் சக்கை போடு போடுகின்றன. கலாசாரத்தையும், மாணவ சமுதாயத்தையும் தவறான வழிக்குள் இழுத்துச் செல்லக் கூடிய இத் திரைப்படங்களின் இறக்குமதியை ரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தலைநகரிலுள்ள இளைஞர் அமைப்பொன்று இப்படங்களை தடைசெய்யக் கோரி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தியது. அதன் பின்னர் இது தொடர்பாக மேலதிக எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

கொழும்புலும் மலையகத்திலும் பல தரப்பட்ட தமிழ் இயக்கங்கள் தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்கள், அரசியல்வாதிகள், மத அமைப்புக்கள், பண்பாட்டுக் கழகங்கள் இருந்தும் கூட இத் திரைப்படங்கள் இறக்குமதி செய்யப்படுவது தொடர்பிலும் திரையிடப்படுவது தொடர்பிலும் எத்தகைய கரிசனையும் கொள்ளவில்லை என்பது தெளிவாகப் புலனாகிறது.

வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள் நிறைந்த இடங்களில் காணப்படும் தியேட்டர்களில் இப் படங்கள் தொடர்ச்சியாக திரையிடப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் உள்ள மக்கள்கூட இத் திரைப்படங்களை தமது பகுதியில் வெளியிட வேண்டாம் என்ற எதிர்ப்பை முன் வைக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

வடக்கு, கிழக்கில் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்ட போது பொது இடம் ஒன்றில் இத்தகைய ஆபாசப் படங்களைக் கொண்ட புத்தகங்கள், சீ.டிக்கள், வீடியோ நாடாக்கள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன.

ஆனால், கொழும்பிலும் மலையகத்திலும் இப்படங்கள் வைக்கும் தீயில், மாணவ சமுதாயமும் இளையோர் கூட்டமும் கருகிக் கொண்டிருப்பதை எல்லோரும் கண்மூடி பார்த்துக் கொண்டிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. இவர்களது இந்த முடியாமைக்கு காரணம் என்ன என்பதே கேள்வியாகின்றது.

திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த கலாசார சீரழிவுக்கான நடைமுறைக்குள் வியாபாரத் தந்திரம் இப் படங்களை இறக்குமதி செய்வதில் முன்நோக்கமாக இருந்தாலும் உள்நோக்கம் எது என்பதை தமிழர்கள் தெரிந்து கொள்ளாமல் இல்லை.

கண் இருந்தும் குருடர்களாய் நம்மவர்கள் இவ்விடயத்தில் அக்கறை காட்ட மறுக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இக் கருத்துக்களை உங்கள் கவனத்துக்கு முன்வைக்கின்றோம். இதற்கான அதிரடி நடவடிக்கை தொடருமா?

-நாச்சியூரான்-

# ஸ்ரீ சங்கரின் 24 ஆவது நினைவு தினவிழா

ஈழத்துத் திரையுலகின் முன்னணி கலைஞர் அமரர் ஸ்ரீ சங்கரின்24 ஆவது நினைவு தினவிழா அண்மையில் கொழும்பு சுல்பின்ஸ்டன் கேட்போர் கூடத்தில்நடை பெற்றது.

அமரரின் ஆத்ம நண்பரும் அவரால் கலையுலகுக்கு அறிமுகம் செய்யப்பட்டவருமான கலைஞர் சண்முகராஜா. 24 ஆண்டுகளாக இவ்விழாவை ஏற்பாடு செய்து நடத்தி வருவது சிறப்பான அம்சமாகும்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கலைஞர்அன்ரனி ஜீவா, "அமரர்ஸ்ரீ சங்கர் தமிழ் நாடக்கலை உலகுக்கு ஆற்றிய சேவைகள் இவ்வாறான கூட்டங்களில் மட்டும்நினைவு கூரப்படுவதை விடுத்து. நூலுருவில் இவற்றை ஆவணப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போது தான் எதிர்காலப் பரம்பரை இவரது தியாகங்களையும். சேவைகளையும் அறியும்" என்றார்.

கலைஞர் கலைச் செல்வன் தனது உரையில் "வளமான தொழில் வாய்ப்பும், வசதியும் இருந்த போதும் அவற்றையெல்லாம் உதறிவிட்டு நாடக உலகைப் புதிய பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்பதில் துடிப்போடு இயங்கியவர் அமரர் ஸ்ரீ சங்கர். நாடக சபை முறையை தோற்றுவித்து இலங்கை நாடக முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்பது அவரது பேரவாவாக இருந்தது." என்றார்.

கலைஞர்களான மானாமக்கீன், ராஜா திவ்வியராஜன், கம்பனை தாசன், எம். உதயகுமார், எஸ்.என்.நடராஜா, தம்பி ஐயா தேவதாஸ், இராதாகிருஸ்ணன், சுப்பிரமணிய தாஸ் . ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

அமரர் ஸ்ரீ சங்கரின் நினைவாகப் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்களும் அப்பியாசக் கொப்பிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவற்றைக் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் கே.செல்லச்சாமி, த.பாலச்சந்திரன், ஜெனிபர் பெர்னாண்டோ, ஜே.பி.ஜெயராம் ஆகியோர் வழங்கினார்கள்.



சென்னை எழும்பூரில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 87ஆவது பிறந்த நாள் விழா கழக செயலாளர் ஏ.பி.இலங்கை நெய்னார் தலைமையில் நடைபெற்றது.

சின்ன திரை நடிகர்,நடிகைகளுக்கு எம்.ஜி.ஆர் விருதை நீதிபதி பாஸ்கரன் வழங்கினார். அநுராதா ஜெயராமன், நடிகர் ராஜீவ், நடிகைகள் கீர்த்தனா, தாரணி, நிசா நிவ்யா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்ரான் என்ன இராமனா? இந்தச் சீதாவை ஏற்பதற்கு!

பொதுசன நூலகம்

இப்போதெல்லாம் கிரிக்கெட் வீரர்களுக்கு 'குருபெயர்ச்சி' சரியில்லைப் போலும். அந்தப் பக்கம் ஷேன்வோர்ன் தினமும் ஒரு பிரச்சினையில் மாட்டிக் கொண்டிருக்க, இந்தப் பக்கம் காலே மாட்டிக் கொண்டார்.

இந்தப் பிரச்சினைகள் இப்படியிருக்க, இன்னொரு கிரிக்கெட் வீரர் ஒரு பெரிய பிரச்சினையில் மாட்டிக் கொண்டார். அவர் தான் அந்நாளின் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான். சுமார் 25 வருடங்களுக்கு முன் இம்ரான் நடத்திய சரஸ சல்லாபங்கள் தற்போது அவருக்குப் பெரும் தலைவலியாக மாறிவிட்டன. தகாத உறவினால் பிறந்த ஒரு பிஞ்சுக் குழந்தை ''அப்பா! என்னை அடையாளம் தெரியலையா?'' என்று 'கூக்லியை' வீசிக் கொண்டிருக்க, இம்ரான் கான் 'டிஃபென்ஸும்' ஆட முடியாமல் சிக்ஸரும் அடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்.

இந்த 'இம்ரான் ஆட்டம்' எல்லோருக்கும் தெரிந்ததுதான். அழகான பல்துறை வல்லுநராகத் திகழ்ந்த இம்ரான், பல பெண்களின் கனவு நாயகனாகவும் இருந்த. இப்படி இம்ரானை நேசித்த எத்தனையோ பெண்களில், சீதா வைட்டும் ஒருவர். பெயரில் சீதா இருப்பதால் அவரை இந்தியப் பெண் என்று நினைக்க வேண்டாம். சீதா வைட் ஒரு அமெரிக்கப் பெண். அவருக்கு சீதா என்ற பெயர் எப்படி வந்தது என்பதை பிறகு பார்க்கலாம்.

1980களில் அமெரிக்க கோடீஸ்வரர் சேர் வைட்டின் மகள் சீதா வைட்டுடன் இம்ரான் காதல் கொண்டார். கிட்டத்தட்ட பத்து வருடங்கள் இரண்டு பேரும் காதல் உல்லாசத்தில் மிதந்தனர் பலனாக, 91 இல் சீதா வைட் கர்ப்பமுற்றாள். 'ஸ்கானிங்' எடுத்துப் பார்க்கையில், சீதாவின் வயிற்றில் பெண் குழந்தை வளர்ந்து கொண்டிருப்பது தெரியவந்தது.

''அப்போது அவர் உடனே, 'அபார்ஷன்' செய்துகொள்ளும்படி என்னை வற்புறுத்தினார். 'எனக்குப் பையன்தான் வேண்டும். பெண்ணாலே கிரிக்கெட் விளையாட முடியாது' என்று இம்ரான் என்னை வற்புறுத்தினார்'' என சீதா வைட் குற்றஞ்சாட்டுகிறார்.



மனைவி ஜமீனாவுடன் இம்ரான்

ஆனால், இம்ரான் பேச்சுக்கு செவி சாய்க்காத சீதா வைட், ஓர் அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அந்தக் குழந்தைக்கு 'டிரியன் ஜாட் வைட்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

அப்புறம் தன் குழந்தைக்கு இம்ரான் கான் தான் தந்தை என்று சீதா வைட் லண்டனில் வழக்குத் தொடர்ந்தார். ஆனால், இம்ரான் கொடுத்த உத்தரவாதங்களுக்கு மயங்கி, வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டார். டிரியன் பள்ளிக் கூடத்தில் சேரும்போது கூட 10,000 டொலர் கட்டணத்தை இம்ரான்தான் செலுத்தினார். சில நாட்களுக்கப்புறம் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜெமீனாவை மணந்த இம்ரான் சீதாவை ஒதுக்கத் தொடங்கினார்.

டிரியனின் அப்பா யார்? என்ற விஷயம் மறுபடியும் தலைதூக்கத் தொடங்கியது. சீதா வைட் மறுபடியும் நீதிமன்றத்தை நாட, நீதிமன்றம் இம்ரானுக்கு 'சம்மன்' அனுப்பியது. இம்ரான்தான் 'தந்தை' என்று நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லியது.

இதை ஒப்புக் கொள்ள மறுத்த இம்ரான், 'இரத்தப் பரீட்சைக்குத் தயார்' என்று சவால் விட்டார். சீதா அதற்கு ஒப்புக் கொண்டதும் இம்ரான் ஜகா வாங்கிவிட்டார்.

இதற்குள்ளே குழந்தை டிரியன் 'தந்தைக்கு' ஈ—மெயில் செய்தாள். ஆரம்பத்தில் மகள் டிரியனுடன் பேசிய இம்ரான், அதற்கப்புறம் அவ்வளவாகப் பேசவில்லை. இந்த விஷயத்தை இம்ரான் மனைவி ஜமீனா கூட பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு கட்டத்தில் ஜமீனா, டிரியனை தங்களின் வீட்டுக்கு அழைத்தார். அந்தச் சுட்டிக் குழந்தை டிரியனின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

''அப்பாவுடன் பேசினேன். என்னைப் பாகிஸ்தான் கூட்டிட்டுப் போவதாகச் சொன்னார். ஆனால் இதுவரைக்கும் கூட்டிட்டுப் போகவே இல்லை'' என்று சோகமாகச் சொல்லும் டிரியனுடன் தற்போது இம்ரான் பேசுவதே இல்லையாம். எத்தனை ஈ—மெயில் அனுப்பினாலும், தொலைபேசி அழைப்பு எடுத்தாலும்' கடிதங்கள் எழுதினாலும் இம்ரானிடமிருந்து பதிலே இல்லையாம். தற்போது ஜெமீனாவும் டிரியனை கண்டுகொள்வதே இல்லையாம்.

டிரியனைத் தன் குழந்தையாக ஏற்றுக் கொள்வதற்கு இம்ரான் தயாராக இல்லாத நிலையில், டிரியன் மட்டும் தன் பெயருக்கு 'கான்' எனும் பெயரைச் சேர்த்துக் கொள்ள ஆசைப் படுகிறாள். அமெரிக்கச் சட்ட திட்டங்களின் படி, அப்படி மாற்றிக் கொள்ள வேண்டுமென்றால், தந்தையின் அனுமதி வேண்டுமாம்.

இதனாலே, மறுபடியும் சீதா வைட் நீதி மன்றத்தை நாடுகிறார்.

''எனக்கு என்னவானாலும் பரவாயில்லை. என் மகளுக்காகவாவது நீதி கிடைக்க வேண்டும். தேவைப்பட்டால், பாகிஸ்தான் இஸ்லாமிய சட்டத்தின் முன் நிற்பேன். அங்கு இம் மாதிரி (கள்ளத்) தொடர்பு கொண்டு ஒரு குழந்தையைப் பெற்ற பெண்ணை, கற்களால் அடித்துச் சாகடிப்பார்களென்று கேள்விப்பட்டேன். அதற்கும் நான் தயார். என் குழந்தைக்கு நீதி கிடைத்தால் போதும்'' என்கிறார் சீதா வைட் உடைந்த குரலுடன்.

இம்ரான்கான் வாய்திறக்காவிட்டாலும், அவருடைய தொண்டர்கள், ரசிகர்கள் சீதா விஷயத்தைக் கடுமையாக மறுக்கின்றனர்.

''தெஹ்ரிக்—எ—இன்சாஃப்'' என்று இம்ரான் கான் ஒரு அரசியல் கட்சியைத் தொடங்கின விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. மக்களுக்கு இன்சாஃப் (நீதி) செய்வதற்கே தாம் தெஹ்ரிக்—எ—இன்சாஃப் கட்சியைத் தொடங்கினார் என சொல்லும் இம்ரான் கான், சீதாவுக்கு இன்சாஃப் கொடுப்பாரா? இல்லையா? என்பதுதான் தற்போதைய கேள்வி.

சீதா என்ற பெயர் எப்படி வந்தது?

தற்போது யோகா பயிற்சியாளராக இருக்கும் சீதா வைட்டின் அசல் பெயர் அனாலுசியா. சீதாவின் தங்கைக்கு அனாலுசியா என்று அழைப்பதற்கு சிரமமாக இருக்க 'சிஸ்டர்' என்று கூப்பிடத் தொடங்கி, கடைசியில் 'சிஸ்டா' என்று கூப்பிட்டாள். அந்த 'சிஸ்டா'தான் காலப்போக்கில் 'சீதா'வாக மாறிவிட்டதாம்!

# ராசி பலன்

**29—02—2004 முதல் 06—03—2004 வரை 'ராசிபலன்'**

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிநாதன் ஆட்சியாக இருப்பது நல்ல அம்சம். சூரியனின் நட்சத்திரமான கார்த்திகையில் சஞ்சரிப்பது நல்ல அம்சம். ராகு கேதுக்களின் தொடர்பு கூடாது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பக்க உதவிகள் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,7) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7 இல் கேது இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. நான்காம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். தொழிலுக்குரிய சனி மூன்றில் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். குரு, சூரியன் ராசியைப் பார்ப்பதும் ராசியில் மூன்று கிரகங்கள் இருப்பதும் நல்ல பலா பலனை எதிர்பார்க்கலாம்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிக்குரிய சுக்கிரன் 12 இல். அதாவது மறைகிறார். அத்துடன் கேதுவின் நட்சத்திரமான அச்சுவினியில் சஞ்சரிப்பதும் கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். தேச சஞ்சாரப்பலன் உண்டு. சயன சுகம் உண்டு. (2,5) உரிய புதன் 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். நாலுக்குரிய சூரியன் 10 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7க்குரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் திருமண பலன் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். தொழிலுக்குரிய சனி இரண்டில் இருப்பதும் 10இல் சூரியன் புதன் இருப்பதும் தொழில் துறை முன்னேறும். அரச உதவி கிடைக்கும். பக்க உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 9இல் இருப்பது மிகவும் நல்லது. மேலும் குருவின் நட்சத்திரமான பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிப்பதும் நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். ஆலய வழிபாட்டில் ஆர்வம் அதிகரிக்கும். பிரயாண வாய்ப்பும் உருவாகும். இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். நாலுக்குரிய புதன் 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,10) உரிய குரு மூன்றில் இருப்பதும் சனி முறையே குருவையும் 7ஆம், 10ஆம் இடங்களைப் பார்ப்பதும் நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில் துறை பாதிப்புக்குள்ளாகலாம்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் மிதுனம் முதல் சிங்கம் வரை சஞ்சரிப்பதும் தனது ராசியைக் கடப்பதும் நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இரண்டுக்குரிய சூரியன் 8 இல் மறைந்தாலும் இரண்டில் குரு இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 10 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். நண்பர்களால் தொல்லை வரலாம். 7க்குரிய சனி 12இல் இருந்தாலும் இரண்டில் குரு இருப்பதால் திருமண பலன் உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்காது. 10ஆம் வீடு பலம் பெற்று இருப்பதால் தொழில் துறை முன்னேறும். புதிய தொழில் அமையலாம். குரு, சுக்கிரன் இருப்பு நன்மை செய்யும்.

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | சுக்கிரன் செவ்வாய் ராகு | | சனி |
| புதன் சூரியன் | | | |
| | | | குரு |
| | | கேது | |

மாசி 17 முதல் மாசி 23 வரை

புதன் கும்பம் முதல் மீனம் வரை

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 7 இல் இருப்பது நல்லது. அத்துடன் குருவின் நட்சத்திரமான பூரட்டாதியில் நகர்வதும் நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,11) உரிய புதன் 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். நண்பர்கள் உதவுவர். (4,9) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். 7க்குரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய சுக்கிரன் 9இல் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். ராசியில் குரு இருப்பதும் அதை சனி பார்ப்பதும் சற்று பின்னடைவை ஏற்படுதக்கூடும். சுக்கிரன், செவ்வாயின் இருப்பும் சூரியன், புதன் பார்வையும் நல்ல பலனைச் செய்யும்.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 6இல் இருப்பது நல்லதல்ல. புதன் குருவின் நட்சத்திரமான பூரட்டாதியில் நகர்வது நல்லது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். தொழில் துறையில் பின்னடைவு வரலாம். (2,9) உரிய சுக்கிரன் 8இல் மறைவது கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. (4,7) உரிய குரு 12 இல் மறைவது கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண பலன் குறையலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. சனி 10இல் இருப்பதால் எந்தக் கஸ்டம் வந்தாலும் அதை எதிர்கொள்ளும் மனத் தைரியம் இருக்கும். மற்றைய கிரக நிலைகளின் அமைப்பு சாதகமான பலனைத் தராது.

**துலாம்: சித்திரை 3,4. சுவாதி. விசாகம் 1,2,3.**

ராசிக்குரிய சுக்கிரன் 7இல் இருப்பது விசேஷம். ஆனால் கேதுவின் நட்சத்திரமான அச்சுவினியில் இருப்பது நல்லதல்ல. மேலும் ராகு கேதுக்களின் தொடர்பு அவ்வளவு நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். (2,7) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகளின் தொழிற்பாடு திருப்திகரமானதாக இருக்கும். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும். 11 இல் குரு இருப்பதால் நல்ல பலனைத் தரலாம்.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் தனது இன்னுமொரு வீட்டில் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் சுக்கிரனின் நட்சத்திரமான பரணியில் சஞ்சாரம் செய்வது சிறப்பு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய குரு 10 இல் இருப்பது கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்திகரமானதாக இருக்கும். 4க்குரிய சனி 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாதாவுக்கு நல்லதல்ல. 7க்குரிய சுக்கிரன் 5இல் உச்சமாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய சூரியன் 4 இல் புதனோடு இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரியகுரு 9இல் இருப்பது விசேஷம். மேலும் சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் இருப்பது மிகவும் நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். (2,3) உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். 4க்குரிய குரு 9இல் இருப்பதால் வீடு, வாகனம் வாங்க விற்க ஏற்ற காலம். (7,10) உரிய புதன் 3இல் சூரியனோடு குரு பார்வை பெற்று இருப்பதால் தொழில்துறை முன்னேறும். திருமண பலன் தாமதமாகலாம். சனியின் பார்வையும் இருப்பும் தடைகளை உருவாக்கலாம். சனி 7இல் இருப்பது குடும்ப அமைதி குறையலாம்.

**மகரம்: உத்தராடம் 2,3,4,. திருவோணம் அவிட்டம் 1,**

ராசிக்குரிய சனி 6 இல் இருப்பது நல்லது. மறைவிடங்களில் கெட்ட கிரகங்கள் நன்மை செய்யும். ஆனால் ராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் சஞ்சரிப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். இரண்டில் சூரியன், புதன் குரு பார்வை இருப்பதால் கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். 4க்குரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7 ஆம் வீடு சுத்தமாக இருப்பினும் குரு மறைவதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்கும் 10க்குரிய சுக்கிரன் 4இல் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். குரு சுகம் இல்லாதிருப்பது குறை தான்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல. மேலும் ராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் சஞ்சரிப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். சூரியன், புதன் ராசியில் இருப்பது கல்வியில் ஆர்வம் இருக்கும். இரண்டுக்குரிய குரு 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,9) உரிய சுக்கிரன் 3இல் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பெற்றோருக்கு நல்லதல்ல. 7க்குரிய சூரியன் ராசியில் இருப்பதும் 7இல் குரு இருப்பதும் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய செவ்வாய் 3 இல் ஆட்சியாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும். குரு நல்ல நிலையில் இருப்பது நல்ல பலனைத் தரும்.

**மீனம்: பூரட்டாதியில். உத்தரட்டாதி.**

(1,10) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. ஆனால் சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (2,9) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4,7) உரிய புதன் 12 இல் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. குருவையும் 10 ஆம் வீட்டையும் ராசியையும் சனி பார்ப்பதால் பல வழிகளிலும் தடை வர வாய்ப்பு உண்டு. குரு மறைவதும் பெரிய குறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது

''வாங்கோ, வாங்கோ, எப்படியோ அடுத்த திருவிழா தொடங்கிப் போட்டுது. இனி அரட்டையடிக்க விஷயத்துக்குப் பஞ்சமிருக்காது'' தேரடிக்கு வந்த பெரியவர்கள் இருவரையும் உற்சாகமாக வரவேற்றான் லோகன்.

''பூனைக்கு விளையாட்டாம், சுண்டெலிக்குச் சீவன் போகுதாம், என்ற மாதிரி இருக்கு. ஏதோ பேச்சு நடந்தால் எங்கடை பிள்ளைகள் சேதமில்லாமல் வேண்டியதைப் பெற்றுக் கொள்ளுவினம். நாங்களும் நிம்மதியாக வாழலாம் என்று நினைச்சம். ஆனால், அம்மாவின்ரை ஆட்டத்தினால எல்லாமே குழம்பிப் போட்டுது.'' – என்றார் வேதனையுடன் விநாசியர்.

''இதிலை ஒரு வேடிக்கை பார்த்தியளே, முந்தி புலிகள் யுத்தத்திலை ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அம்மாவும் கதிர்காமரும் ஒவ்வொரு நாடாகப் போய்ப் புலிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்திச்சினம். ஆனால், இப்ப தங்களுக்குள்ளை அவை அதிகார வெறியிலை அடிபடுகினம். எங்கடை ஆள்கள் ஒவ்வொரு நாடாகப் போய், அதிலும் அவையின்ரை 'ஹெலி'யிலையே வெளிக்கிட்டுப் போய் ஆதரவு தேடிக் கொண்டு வருகினம். எப்படி காலம் தலைகீழாக மாறுது பார்த்தியளே?'' – கேட்டான் டானியல்.

''எனக்கு இப்ப ஒரு 'ஹெலி' கிடைச்சால் அதில போய்க் கொஞ்சப் பேரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்க வேணும் என்று தான் ஆசை'' என்றான் லோகன்.

'ஏன் அவையைப் பார்க்கப் போக 'ஹெலி' தேவையா? அவைதான் இனி பச்சை உடுப்பும், காக்கி உடுப்பும் புடை சூழ, காந்திப் படம் போட்ட காசோட யாழ்ப்பாணத்துக்கு வரத்தானே போகினம். அப்ப கதைக்கலாமே? – கேட்டான் டானியல்.

''தம்பி யாரைச் சொல்லுறீர்? வீணை வாசிக்கிறவையைத்தானே?'' கேட்டார் மாஸ்ரர்.

''இல்லை மாஸ்ரர், அவை எவ்வளவோ பரவாயில்லை. தாங்கள் இன்னார் தான் என்று பகிரங்கமாகச் சொல்லுகினம். சனமும் அதுக்கேற்ற மாதிரி அவையை வைக்கிற இடத்திலை வைக்கும். ஆனால், கூட இருந்து குழிபறிக்கிறவைக்குத்தான் எல்லோரையும் விட்டுப் போட்டு அதிக பாடம் படிப்பிக்க வேணும். ஆனால், அவையைப் பற்றி நான் இப்ப கதைக்கவில்லை. நான் சொல்லுறது சண்டை நேரத்திலை, நாங்கள் தான் சமாதானக் கடவுள்கள் என்ற மிதப்பிலை புலிகளைக் கண்டிக்கிறதையே பிழைப்பாக நடத்தின வெள்ளைத் தோல் காரரையும், அம்மா போய்க் காலிலை



## தேரடி அரட்டை

விழுந்த உடனே, யாழ்ப்பாணத்துக்குக் கப்பல் அனுப்பி சிக்கியிருக்கிற 40 ஆயிரம் ஆமியையும் கூட்டிப் போறோம்! என்று கூறி முதுகிலகுத்தின அயலவரையும் தான். இவையைப் பார்த்து சமாதானம் தான் முக்கியமென்றால், இப்ப வெண்ணெய் திரண்டு வாற நேரத்திலை தாழியைப் போட்டுடைக்கிற அம்மா, இப்ப மட்டும் வாயை மூடிக் கொண்டு இருக்கிறியள். வாயிலை என்ன 'சான்ட்விச்சும், திருப்பதி லட்டும்' அடக்கி வைச்சிருக்கிறியளோ என்று கேட்க வேணும்'' பொறி பறந்தது லோகனின் வார்த்தைகளில்.

''அவை எப்படி இப்ப கதைப்பினம். ஒரு நாட்டின் மீது படை யெடுத்துப் போட்டு, அங்கே பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்று பிரச்சினை கிளம்ப, தாங்களே யுரேனியத்தைச் செறிவாக்கும் கருவியைக் கொண்டு போய் வைச்சு நாடகமாடுகினம். அயலவையோ, நாடாளுமன்றக் கதிரையைப் பிடிக்க கொள்கைகளைக் காத்திலை பறக்க விட்டுட்டு கூட்டணி அமைச்சுக் கூத்தடிக்கினம்!'' எரிச்சலுடன் கூறினார் டானியல்.

''ஆனாலும், தம்பி அவையின்ரை அலுவல்களை 'டக்'கென்று பார்க்கவும், ஆனந்தமாகச் செய்யவும் தான் பச்சை நோட்டுகளைக் கொடுத்து இங்கே ஆள்களை 'செற்' பண்ணியிருக்கினம். இவை இங்கே 'கோடரிக் காம்பு' வேலையைப் பார்க்கினம் தானே'' – கூறினார் விநாசியர்.

''அதிலை ஒரு பகிடி விநாசியர், ஒருத்தர் சொல்லுறார், தன்ரை கட்சி சார்பாக கட்சிக் காரரைத் தானாம் நிற்பாட்டுவார். இல்லா விட்டால், புலிகளே வேட்பாளர்களை நிறுத் தட்டும். நாங்கள் ஆதரவு கொடுக்கத் தயார் என்று. ஏதோ தான் சொன்னால் முழுச்சனமும் வாக்குப் போட்டிடும் என்ற நினைப்பெல்லோ இவருக்கு. புலிகள் போட்டியிட்டால் இவரெல்லே வெற்றி பெறச் செய்யிறாராம். இப்படி கனவுலகத்திலை அரசியல் நடத்திற ஆளை என்ன செய்யிறது?'' பேசி முடித்த மாஸ்ரர் காலை நீட்டி மடக்கினார்.

''அதிலை மாஸ்ரர், இப்ப ஏதோ தன்ரை கட்சிக் காரர் என்று கதை விடுகிறார். போன தேர்தலிலை தெம்பிருந்திருந்தால் கூட்டமைப்பிலை இணையாமல் தனியாக ஆனந்தமாய் கூத்தாடியிருக்கலாமோ? அப்ப மட்டும் யாராலை கூட்டமைப்பு உருவானது என்பது வடக்கு கிழக்கிலை நேற்றுப் பிறந்த குழந்தைக்குக் கூடத் தெரியும். அப்பமட்டும் வெள்ளை வேட்டி கசங்காமல்கதிரையைப் பிடிக்க வாத்தியார் கமுக்கமாய் இருந்து போட்டு, இப்ப மட்டும் ஏனாம் இந்தக் குதிகுதிக்கிறார்.'' சீறி விழுந்தார் விநாசியர்.

''கடந்த தேர்தல்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் முன் நின்று உழைத்தவர்களைத்தான் தன்ரை கட்சியிலை வேட்பாளராக்குவேன் என்று மண்ணிலை விழுந்து புரண்டு அழுகிறார் அவர். அப்படிப் பார்த்தால் அவரையும் அவரின்ரை சில எடுபிடிகளையும் தவிர, மிச்ச எல்லோரையும் வேட்பாளராக்கலாம். ஏனென்றால், அந்தக் கட்சியிலை கஷ்டப்படாமல் இருக்கிறவர்கள் அவர்கள் மட்டும்தான். அவரின்ரை கூட்டங்களிலை நடக்கிற குழப்பங்களுக்கு உள்கட்சிப் பிரச்சினை காரணமே தவிர, எதிர்த்தரப்பு எதிர்ப்புகள் காரணமில்லை!'' என்றார் டானியர்.

''ஆனால், இந்த ஆளுக்கு இன்னும் ஒரு விஷயம் விளங்கேல்லை என்றுதான் கவலையா இருக்கு. கூத்தணியோ, கும்மியடிப்போ, யாரென்றாலும், புலிகளின் ஆள்கள் என்றுதான் தமிழ்ச்சனம் வாக்களிக்குது. அதை விளங்காமல் ஏதோ புலிகள் தனியாக வேட்பாளர் பட்டியல் தரட்டும் என்று இந்த ஆள் வெட்டிச் சவால் விடுகுது.'' சிரித்தபடியே கூறினான் லோகன்.

இந்த நேரம் பார்த்து ஐஸ்கிறீம் வான்!

வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்பட வசனத்துடன் போனது...

''எட்டப்பன் ஒருவன் தான் என்றிருந்தேன். ஆனால், அவனையும் நல்லவன் என்றாக்கிவிட்டார் எனது நண்பர் இராஜாதிராஜ, இராஜமார்த்தாண்ட விஜயஇரகுநாதத் தொண்டமான்....''

அனைவரும் அர்த்தத்துடன் ஒரு வரை ஒருவர் பார்த்தபடியே எழுந்து நடந்தனர்.

தேரடி கலைந்தது.

-ஏகலைவன்-

---

மாலை வேளை. சரண்யா மெதுவாக அந்தப் பூங்காவனத்தை நோக்கி நடந்தாள். இலேசான இளந்தென்றல் இதயத்தில் ஒரு

# சொல்ல நினைத்தது!

புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. வங்கி ஒன்றில் கணக்குப் பிரிவில் வேலை செய்யும் சரண்யா இன்று அரைநாள் லீவு எடுத்திருந்தாள். அவளுடன் வேலை செய்த வசந்த், இப்போது வேறொரு தனியார் நிறுவனத்தில் கைநிறைய சம்பளத்துடன் வீடு மற்றும் வாகன வசதியுடன் இருக்கிறான்.

வசந்த், சரண்யாவுடன் ஒன்றாக வேலை செய்த நாட்களில் இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்தார்கள். ஆனால், தங்களின் மனதில் இருந்த காதலை இருவருமே வெளிப்படுத்தவில்லை. வசந்த் முதலில் சொல்லட்டும் என்றிருந்தாள் சரண்யா. சரண்யா வாய் திறக்கட்டும் என காத்திருந்தான் வசந்த். காத்திருப்புக்கள் அதிகரித்தனவே தவிர அதிகார பூர்வமாக தமது காதலை வெளிப்படுத்தவில்லை.

இன்று – வசந்த் மிகவும் தயங்கித் தயங்கி அந்தப் பூங்காவனத்துக்கு அவளை வர சொல்லியிருந்தான். முக்கியமான விஷயம் பேச வேண்டுமாம். அதற்காகத்தானே அவளும் காத்திருந்தாள். சரண்யா மனதுக்குள் தீர்மானித்துவிட்டாள், இன்று எப்படியும் தன் உள்ளத்தில் உள்ளதை கொட்டிவிட வேண்டும் என்று. இனியும் காத்திருப்பதில் பிரயோசனமில்லை. காத்திருப்புக்கள் அதிகரிக்கும் போது காதல் காணமல் போய்விடலாம். சுமார் ஒரு வருடமாக பரஸ்பரம் அன்புடன் பழகி வரும் அவர்கள் இருவருமே தங்களின் காதலை வெளிப்படுத்தாதது உண்மையிலேயே அதிசயம் தான்.


சரண்யா பூங்காவனத்தை அடைந்தாள். ஏராளமான கிளைகளுடன் ஓங்கிவளர்ந்திருந்த அந்த உயரமான மரத்தின் அருகில் வந்து நின்றாள். தூரத்தில் அடிவானம் இலேசாக சிவந்திருந்தது. நடுவானில் மேக முடிச்சுக்கள் ஊர்ந்து சென்றன. அப்போது தூரத்தில் வசந்த் வந்து கொண்டிருப்பதை அவள் கண்டாள். என்றுமில்லாதவாறு அவள் நெஞ்சு படபடத்தது. ஏதோ ஒரு மகிழ்ச்சி அவள் உடலெங்கும் பரவியது. அவன் அவளை நெருங்கினான்.

''என்ன சரண்யா வந்து ரொம்ப நேரமா?''

''இல்ல இப்பத்தான் வந்தேன்...''

''சரியான குளிர் இல்லையா...?''

''ஆமாம்...''




''வந்து... நான் கொஞ்சம் அவசரமா போகணும்...''

''அவசரமாப் போறதுக்கா இங்கே மினக்கெட்டு என்னை வரச்சொன்னீங்க...''

''இல்ல.. விஷயத்தோட தான் வந்திருக்கேன்... காரில் தான் வந்திருக்கேன்... வாயேன் காரில போய்க்கிட்டே பேசுவோம்.''

அவள் மறுக்கவில்லை. மௌனமாக அவனுடனேயே நடந்தாள். இருவரும் அந்த புத்தம் புதிய காரை அடைந்தார்கள். வசந்த் முன் புறக் கதவைத் திறந்து அவளை உட்கார வைத்தான். தானே காரை மெதுவாக ஓட்டினான்.

''சரண்யா எனக்கு மூணு மாச பயிற்சிக்காக கொழும்புக்கு வரச் சொல்லியிருக்காங்க. பயிற்சிக் காலத்தில் எங்கேயும் போக ஏலாது. ரொம்ப கடுமையான அந்தப் பயிற்சியை சரியா செஞ்சிட்டா பதவியுயர்வு நிச்சயம்...''

''இதை சொல்லத் தான் என்னை வரச் சொன்னீங்களா...?''

''ஆமா என்னவோ தெரியல... என்னோட பழகின உன் கிட்ட சொல்லணும்னு தோணிச்சி. அது தான்...!''

''அப்படின்னா வேற விஷயம் ஏதும் இல்லையா?'' வசந்த் புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

''இன்னொரு முக்கிய விஷயம் இருக்கு..''

''என்னவாம்...?''

''அதை சும்மா சொன்னா அதுக்கு அவ்வளவா மதிப்பு இருக்காது... நீ காரிலேயே இரு. இதோ வாரேன்...''

அவன் காரை விட்டு இறங்கி அந்த பரிசுப் பொருட்கள் நிரம்பிய கடையை நோக்கி நடந்தான்.

அவளுக்கு அப்போ தான் ஞாபகம் வந்தது. இன்று 'வசந்தின் பிறந்த நாள். அவள் அதை மறந்தே விட்டாள். அவன் அவளுக்குப் பிடித்த ரோஜாப் பூச்செண்டைக் கொடுத்து 'ஐ லவ் யூ' சொல்லப்போகிறான். அதே போல அவளும் சொல்லப்போகிறாள்... அதை நினைக்க அவளுக்கு ஆனந்தமாக இருந்தது.

அவள் நினைத்ததைப் போலவே வசந்த் தனது கையில் பூச்செண்டுடன் பாதையின் அந்தப்புறத்திலிருந்து வேகமாக காரை நோக்கி ஓடி வந்தான். அதே சமயம் தூரத்தில் வேகமாக வந்துகொண்டிருந்த ஒரு வாகனத்தை அவன் கவனிக்கத் தவறிவிட்டான்.

சரண்யா 'ஐயோ' என அலறினாள். அதற்குள் எல்லாமே முடிந்துவிட்டது. வசந்த் இரத்த வெள்ளத்தில் வீதியில் கிடக்கக் கூட்டம் கூடியது.

கட்டிலில் தலை உட்பட உடம்பு முழுவதும் கட்டுக்களுடன் பேச்சு மூச்சில்லாமல் கிடக்கும் வசந்தைக் கண்ணீர் நிரம்பிய விழிகளுடன் சரண்யா பார்த்துக்கொண்டிருந்தாள். வைத்தியர்களால் உறுதியாக எதையுமே கூற முடியவில்லை. அவன் உயிர் பிழைப்பானா, அல்லது பேசாமலேயே உயிரை விட்டுவிடுவானா என்பது எவருக்கும் தெரியாது.

ஆனால், சரண்யா நம்பிக்கையுடன் காத்திருக்கிறாள். நிச்சயமாக வசந்த் கட்டிலை விட்டு எழுவான். 'ஐ லவ் யூ சரண்யா' என்ற சொல்லுவான் என்று. அவள் நம்பிக்கையுடன் வசந்தின்முகத்தை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த இடம் முழுவதும் அமைதி மட்டுமே குடிகொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# வளங்கள் இருந்தும் வாய்ப்புகள் இல்லை வியாபாரப் பொருளான மலையகக் கல்வி

மலையகக்கல்வி அபிவிருத்திக்கும் கலாசார மேம்பாட்டுக்கும் இன்று பல்வேறு வழிகளில் உதவிகள் கிடைக்கின்றன. ஆனால் அவற்றை சரியான முறையில் பயன்படுத்துகின்றார்களா என்பது தான் கேள்விக் குறியாகி உள்ளது.

உதாரணமாக மலையகப் பிள்ளைகளுக்கு கிடைக்கும் புலமைப் பரிசில்களை சிறிது உற்று நோக்குவோம்.

ஐந்தாம் ஆண்டு முதல் பல்கலைக்கழகம் வரை புலமைப்பரிசில்கள் மூன்றுவழிகளில் கிடைக்கின்றன.

முதலாவதாக இந்திய துதரகத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. இராண்டாவதாக தொழில் அமைச்சின் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மூலம் கிடைக்கின்றது. அடுத்ததாக கல்வி அமைச்சு வழங்குகின்றது.

இந்த மூன்று வகையான புலமைப் பரிசில்கள் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன. ஏனைய சமூகத்தவர்களுக்கு இதில் ஏதோ ஒன்று அல்லது இரண்டு மார்க்கங்களில் தான் புலமைப் பரிசில்கள் கிடைக்கின்றன.

ஆனால் மலையகத்தில் இந்த வசதிகளும் வாய்ப்புக்களும் முறையாகப் பயன்படுத்தப் படுவதில்லை. மாணவர்கள் சரியான வழியில் நடத்தப் படுவதில்லை என கல்விமான்களும், பெற்றோரும் குறை கூறுகின்றனர்.

அண்மையில் இரத்தினபுரி மாவட்டத்திலேயே தலை சிறந்து விளங்கிய பாடசாலையான இறக்குவான சென்ஜோன்ஸ் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பொற்றோர், நலன் விரும்பிகள் என பல தரப்பினரையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இவர்கள் எல்லோரும் ஒரே குரலில் கூறுவது ''சார் எங்கள் பாடசாலையின் கல்வித்தரம் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகி விட்டது'' என்பது தான்.

சப்பிரகமுவ மாகாணத்திலேயே ஆகக் கூடுதலான ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் சித்தி அடைந்தனர். அதே போன்று ஜீ.சீ. ஈ சாதாரண தரம், உயர்தரம் என சகல பரீட்சைகளிலும் கூடுதலான மாணவர்கள் சித்தி அடைந்தனர்.

இதோடு நின்றுவிடவில்லை. விளையாட்டுப் போட்டிகள், இலக்கிய விழாக்கள், தமிழ் மொழித் தினப்போட்டி என அகில இலங்கை ரீதியில் தங்கம், வெள்ளி என பதக்கங்களைப் பெற்றுக்குவித்து பாடசாலைக்கு நற்பெயரைத் தேடித் தந்தனர். ஆனால் இன்று அவை எல்லாம் தவிடு பொடியாகி விட்டனவே என்று கவலைப் படுகின்றனர்.

கடந்த மூன்று , நான்கு வருடங்களாக ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடையும் மாணவர்களின் எண்ணிக்கை நான்கு, மூன்று, இரண்டு என தேய்ந்து இம்முறை ஒரே ஒரு மாணவர் மட்டும் சித்தி அடையும் அவலம் ஏற்பட்டுள்ளது.

காரணம் என்ன ? ஆசிரியர்களுக்கு அக்கறை இல்லை. கல்வியை வியாபாரப்பொருளாக்கி விட்டார்கள் என குற்றம் சாட்டுகின்றனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஐந்தாம் ஆண்டிலேயே 12 மாதங்களில் தயார்படுத்தி விட முடியாது. ஆரம்ப வகுப்பு முதலே அத்திவாரம் இடப்பட வேண்டும்.

இங்கே அத்திவாரமே ஆட்டம் கண்டுள்ளது. புலமைப்பரீட்சைக்கு மொழி அறிவு அத்தியாவசியம். ஆரம்ப வகுப்பில் தமிழைத் தமிழாக உச்சரிக்கத் தெரியவில்லை. வாசிப்பு அறிவு சுத்த சூனியம். வாசிக்க முடியாத ஒரு மாணவன் எப்படி தனது கையில் இருக்கும் கேள்விப் பேப்பரில் இருக்கும் கேள்விகளைப் புரிந்து பதில் அளிக்க முடியும். ஆரம்ப வகுப்புகளில் ஏனோ தானோ போக்கு. பாடசாலைக்கு போகிறோம் வருகிறோம் என மாணவர்கள் வந்து போகின்றனர். ஒருசில ஆசிரியர்களுக்கு பாடசாலை மாணவர்களின் பெயரே தெரிய வில்லை.

ஆரம்ப வகுப்புகளில் இந்த நிலையை பொறுப்பாசிரியர்களோ, அதிபர்களோ சென்று பரீட்சிப்பதில்லை. கண்காணிப்பும் மதிப்பீடும் இல்லை. ஆரம்பத்திலேயே தவறுகள் திருத்தப்படுவதும் இல்லை என்பன நேரடியான குற்றச்சாட்டுக்கள்.

அடுத்ததாக ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சைக்கான பாடநெறிகள் வியாபாரமாக்கப்பட்டுள்ளன. நூறு முதல் 125 மாணவர்களை வகுப்பில் வைத்துக்கொள்கின்றனர். உயர்வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பு நடத்துவது போல் லெக்சர். ஒவ்வொரு மாணவனின் அப்பியாசக் கொப்பியையும் தனிப்பட்ட முறையில் திருத்தவும் நேரம் இல்லை. இங்கே மாணவர்களிடம் மாதாந்தம் நூறு முதல் நூற்றி ஐம்பது ரூபாய்வரை வசூலிக்கப்படுகிறது.

இங்கே படிக்கும் மாணவர்கள் அனைவரிடமும் பணம் வாங்கிக்கொண்டு பாடம் நடத்துகிறோமே! பெற்றோர் வேண்டிய வர்களாகி விட்டனரே என்று பரீட்சை எழுத அனுப்புகிறார்கள். கடைசியில் பரீட்சை முடிவு சூனியம் தான்.

நூறு பேரை அனுப்பி ஒரு மாணவன் சித்தி அடைவதை விட, நன்றாகப் படிக்கக் கூடிய 20 மாணவர்களை வடிகட்டி தெரிவு செய்து பரீட்சைக்கு அனுப்பினால் 15 பேரையாவது சித்தி அடையவைக்க முடியும். பெற்றோரைத் திருப்திப்படுத்துவதற்காகப் பிள்ளைகளைப் பலிக்கடாவாக்கிவிடுகின்றனர்.


இறுதியில் பரீட்சையில் பெயிலாகி அவமானப்படும் மாணவர்கள் உளரீதியாகப் பாதிக்கப் படுகின்றனர். இத் தாக்கம் உயர் வகுப்புகளிலும் இம் மாணவர்களைப் பாதிக்கின்றது.

இந்த உண்மை அதிபர்களுக்கோ ஆசிரியர்களுக்கோ தெரியாதது ஒன்று அல்ல. எனினும் தொடர்ச்சியாக இந்தத் தவறுகள் இடம்பெறுகின்றன. ஆசிரியர்கள் நேற்று வந்தோம், இன்று இருப்போம், நாளை போவோம் என்ற போக்குடன் செயற்பட்டால், காலம் காலமாகக் கட்டிக்காத்த இப் பாடசாலையின் கௌரவம் காற்றில் பறந்துவிடும்.

எனவே ஆரம்ப வகுப்புகளில் அதிபரும், ஆசிரியர்களும் அக்கறையுடன் செயற்பட்டால் இப் பாடசாலையின் அழிவைத் தடுத்து நிறுத்த முடியும் என பெற்றோரும் பழைய மாணவர்களும் ஆதங்கப்படுகின்றனர். இவர்களுடைய துடிப்பு நியாயமானதே.

(குறிப்பு:- இது ஒரு பக்கக் கருத்து. நிர்வாகத் தரப்பில் மறு பக்கக் கருத்து வருமானால் அதுவும் பிரசுரிக்கப்படும்.)




கோட்டேசனில் ஓல்ட்டரேசன். அதனால் அவுட்டானது மொடிபிகேசன் என்று பட்டும் படாமல் கூறினார் அந்த அமைச்சின் அதிகாரி.

''என்னங்க ஐயா யாரை மொடிபைபண்ணப்போறீங்க'' என்றோம்.


'' என்ன செய்வது தேர்தல் வந்துவிட்டது. யார் யார் எல்லாமோ எப்படி எப்படியோ சம்பாதிக்கப் பார்க்கிறாங்க. அதை மாற்றி இதை மாற்றி ஓல்ட்டரேசன் செஞ்சு கையும் களவுமா மாட்டிகிட்டாங்களாம். இது ஒன்றும்புதுசு இல்லீங்க. வழமையா நடப்பது தான். இப்ப வேண்டாதவங்க யாரோ போட்டுக் கொடுத்துட்டாங்க. அதுனால மாட்டிக்கிட்டாங்க.''

''அதுக்காக கெட் அவுட்டுன்னா சொல்லுறது?''

''என்ன சார் செய்வது முந்தி வாழ்த்துக் கார்ட் விசயத்தில இரண்டு பேருக்கு கல்தா கொடுத்தவர் இப்ப ஓல்ட்டரேசனைப் பார்த்து ஆடிப் போய்விட்டார். எல்லாம் அந்த விநாயகனின் தம்பிக்கும், பிரம்மனின் பத்தினிக்கும் தான்வெளிச்சம்.''

இரண்டு வாரங்களின் பின்பு தணிகாசலம் அண்ணன் இன்று தான் நற்பணி மன்ற அலுவலகத்துக்கு வந்தார்.

எல்லா இளைஞர், யுவதிகளும் சுற்றி வளைத்துக்கொண்டனர். எல்லோரிடமும்




சுகம் விசாரித்துவிட்டு தணிஅண்ணன் போய் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

மெதுவாக சிவலிங்கம் ஆரம்பித்தான்.

''என்னங்க அண்ணே இங்க ஒரே குழப்பமா கிடக்கு. என்ன செய்வோம். ஏது செய்வோம்னு தடுமாறிக் கொண்டிருக்கிறோம். திடீர்னு நீங்களும் கொழும்புக்குப் பொயிட்டீங்க.''

''ஆமாம் சிவா நம்ப தங்கச்சியோட புள்ளைக்கு ஒரு பெரிய ஆபரேசன். ஐந்தரை லச்ச ரூபா பணம் கேட்டுப்புட்டாங்க. ஒரு மாதிரியா அவரைப்புடிச்சி, இவரைப்பிடிச்சி ஜனாதிபதி நிதியில இருந்து உதவி வாங்க வேண்டியதாய் போச்சி. அதுல ஓடித் திரிஞ்சதில அங்கேயே தங்க வேண்டிய நிலைமை.''

''அடடே எங்களுக்கு இந்த விடயம் தெரியாம போச்சிங்க அண்ணே! இப்ப குழந்தைக்கு எப்படி இருக்கு?'' என்றனர் எல்லோரும்.

''இப்ப கவலைப்பட வேண்டிய மாதிரி ஒன்றும் இல்ல. ஜனாதிபதி நிதியோட வெளிநாட்டில் இருந்து வந்த வெள்ளைக்கார டொக்டர் ஒருவர் மீதிச்செலவை ...ற்றுவிட்டார்'' என்றார் தணி அண்ணன்.

''உண்மை தானுங்களே அண்ணன். ...ங்க யார் யாருக்கோ உதவி செய்தீங்க. ...ங்களுக்கு கடவுள் உதவி செய்வார்'' ...றாள் கோகிலா.

''ஆமாம் தம்பி; ஏழை எளியவர்களின் ...ளங்களில் தான் கடவுள் இருக்கா...னு சொல்லுவாங்க. ஏழைகள் நம் ...க்கம். அதுனால அந்தப்புள்ளைக்கு ஒன்னும் ஆவாது.'' என்று தனக்குத் தானே ஆறுதல் படுத்திக் கொண்டார் தணி அண்ணன்.

திடீர்னு அம்மா பார்லிமென்ட கலைச்சுப் புட்டா. தேர்தல் ஜூரம் படு வேகமா அடிக்குது. ஆளு ஆளுக்கு எதை எதையோ சொல்லுவாங்க. ஒன்றுமே புரியல. இந்த சமயத்தில நீங்களும் இல்ல'' என்றான் சிவலிங்கம்.

''என்ன சிவா உங்களை எல்லாம் இப்படி வளர்த்து வைச்சி இருக்கேன். நீங்க இல்லியா இப்ப எனக்கு வழி சொல்லனும்'' என்று சிரித்தார் தணி அண்ணன்.

''அண்ணன் சொல்லுறது உண்மைதான். என்ன இருந்தாலும் நாங்க எடுத்த முடிவை நீங்கள் உறுதிப்படுத்தினால் தானே எங்களுக்கும் தைரியம்.'' என்றார் நடராஜன்.

''ஆமாங்க அண்ணே தலை இருக்க வால் ஆட முடியாது தானுங்களே. அண்ணன் சொன்னால் எல்லாம் சரி'' என நடராஜன் கூறியதை ஆமோதித்தான் சிவலிங்கம்.

''அடே அப்பா என் பிள்ளைகளுக்கு என் மேல அவ்வளவு நம்பிக்கையா? கேட்கவே



சந்தோஷமா இருக்கு'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணன் வரும் வரை தான் பார்த்துக்கொண்டு இருந்தோம். நாம யாரை ஆதரிப்பது? யாருக்காக வேலை செய்வது என்று இன்னும்முடிவு எடுக்க முடிய வில்லை'' என்றாள் கோகிலா.

''என்ன அம்மா அப்படி சொல்லிப்புட்ட. நமக்கு நல்லது செய்யிரவுங்களுக்கு நம்ப ஆதரவை வழங்க வேண்டியது தானே'' என்றார் தணி அண்ணன்.

என்னங்க அண்ணே அப்படி சொல்லிப் புட்டீங்க. யார் நல்லதை செய்யிராங்க. யார் குழி பறிக்கிறாங்கன்னு கண்டுக்க முடியுலியே'' என்றாள் மீண்டும்கோகிலா.

''நீ சொல்லுறதும் சரி தான்.இப்ப தான் வந்தப்ப பார்த்தேன். எல்லா இடத்திலையும் தலைவர் பிரபாகரன் படமும் சந்திரசேகரனின் படமும் ஒட்டிக்கிடக்கு. இன்னும் ஒரு பக்கம் பார்த்தா தொண்டமான் ஐயாவோட படமும் ஆறுமுகம்தலைவரோட படமும் ஒட்டிக்கிடக்கு.'' என்றார் தணி அண்ணன்.

''உண்மை தாங்க அண்ணே! ரெண்டு பேருமே பிரதமர் ரணிலை ஆதரிப்பவர்கள்.அண்ணன் சந்திரசேகரன் தேசிய உணர்வுடன் செயற்படுபவர். தம்பி ஆறுமுகம் மட்டும் தான்தலைவராக இருக்க முடியும்னு நினைக்கிறாரு என்று சொல்லுறாங்க'' என்றார் நடராஜன்.

''அது எப்படித் தம்பி சரியாய் போயிடும். ஐயா தொண்டமான் தனது காலத்தில இருந்தே பிரதமர் ரணிலை ஆதரித்தவர் தானே! இப்ப என்ன சந்தேகம்'' என்றார் தணி அண்ணன்.

''தொண்டமான் ஐயா எங்க சமுதாயத்துக்கு எவ்வளவோ நன்மை செஞ்சி இருக்கார். அதை எல்லாம் மறந்தால் நாங்க நன்றி கெட்டவங்களாகிவிடுவோம்'' என்றான் சிவலிங்கம்.

''அப்புறம் என்ன தம்பி சந்தேகம். ஆறுமுகம் தொண்டமானை ஆதரிக்க வேண்டியது தானே. தாத்தாவின் வழியில தானே தம்பியும் போவார்'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே தாத்தாவின் வழயில தான் தம்பியும் போவார்னு சொன்னீங்களே! அங்கே தான் ஒரு சிக்கல்.'' என்றாள் அமைதியாக இருந்த கோகிலா.

''என்னம்மா அப்படி ஒரு சிக்கல்?

''அது தாங்க அண்ணே எங்களுக்கும் சந்தேகம். முந்திய தேர்தலின் போது நாங்க எல்லாரும் தொண்டமான் ஐயாவை வெற்றி அடையச் செய்ய வேண்டும் என்று யானைக்கே வாக்களித்து ஏழு பேரை வெற்றி அடையச் செய்தோம்.'' என்றார் நடராஜன்.

''அது தானே தம்பி நம்ப சமூகப்பற்று. அப்படித்தானே ஒற்றுமையா செயல்படனும்''

''என்னங்க அண்ணே நாங்க எல்லோரும் ரணிலை ஆதரித்து தானே யானைக்கு வாக்களித்தோம். ஆனால் கடைசியில் தொண்டமான் ஐயா திடீரென்று தேர்தல்ல வெற்றி அடைந்ததும் அம்மாக்கூட சேர்ந்து மந்திரி ஆகிவிட்டார்'' என்றான் நடராஜன்.

''அவரோட காலம் முடிஞ்சி இப்ப இளம் சிங்கமா தம்பி வந்திருக்காரே அப்புறம் என்ன பயம்'' என்றார் தணி அண்ணன்.

அங்க தாங்க அண்ணே பயமே ஆரம்பமாகி இருக்கு. இப்ப கூட ஏதோ ஒப்பந்தம் செய்யனும்னு சொல்லி இருக்கார். நாம எல்லாம் நாட்டில் நிரந்தர சமாதானம் வேணும்னு வாக்களித்து இவர்களை பார்லிமெண்டுக்கு அனுப்புறோம். அங்கே போனதும் அம்மா பக்கம் குந்திக்கிட்டா என்ன செய்வது? வாக்களித்த நம்ப நிலை என்ன ஆவது? என்ற ஒரு சந்தேகம் இப்ப மலையகத்தில் ஏற்பட்டுள்ளது'' என்றார் தெளிவாக சிவலிங்கம்.

''என்ன தம்பி இப்ப எனக்கும் மூளையில் குழப்பம் ஏற்படுறமாதிரி இருக்கு. இவ்வளவு தூரம் பழையதையும் புதியதையும் சீர்தூக்கிப் பார்க்க ஆரம்பிச்சிட்டாங்களா? இந்த சந்தேகமும் நியாயமானது தான். என்றாலும் திடீர்னு ஒரு முடிவு எடுத்திடக் கூடாது. இன்னும் நாள் இருக்குத் தானே! பொறுத்துப் பார்ப்போம். அடுத்த வாரம் நிலைமையைப் பார்த்து முடிவு எடுப்போம்.'' என்று கூறி விடைபெற்றார் தணி அண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானில் இடம் பெற்ற கோரச் சம்பவம்

ஈரானில் அண்மையில் இடம் பெற்ற கோர ரயில் விபத்தில் 300 பேர் உயிரிழந்தனர். 450 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

17 பெட்டிகள் நிறைய சல்பர் (கந்தகம்) ஆறு பாரிய பெற்றோல் கொள்கலன்கள், ஏழு பெட்டிகள் நிறைய உரம், பத்துப் பெட்டிகள் நிறைய பருத்திப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்த ரயிலே தடம் புரண்டு திடீரென வெடித்துச் சிதறி பெரும் விபத்தை ஏற்படுத்தியது.

இத்தகைய பொருட்களுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் விடிகாலை வேளையில் 'பிரேக்' தளர்ந்து தன்பாட்டில் சில கிலோமீற்றர் தூரம் சென்ற பின்னர் தண்டவாளத்தை விட்டு விலகி தடம் புரண்டது.



இந்த ரயில் தானாகவே ஓடத்தொடங்கியமை, தடம்புரண்டமை ஆகியவற்றுக்கு பல ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஈரானில் பூமி அதிர்ச்சி நிகழ்வது புதிதல்ல. கடந்த ஆண்டிலும் பாம் நகரில் ஏற்பட்ட பூமியதிர்வு 40 ஆயிரம் பேரைப் பலி கொண்டமை தெரிந்ததே.

இந்த விபத்துக்கும் பூமியதிர்வே காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. சிறிய பூமியதிர்வால் பெட்டிகள் தன்பாட்டில் ஓடத்தொடங்கி இருக்கலாம் என்றும், தடம் புரள்வதற்கும் அதுவே காரணம் எனவும் கூறப்படுகிறது.

அதிகளவு எரி பொருட்களுடன் தடம் புரண்ட ரயில் தொடர்பான தகவல் அறிந்தவுடன் தீயணைக்கும் படையினர் அப்பகுதிக்குச் சென்று தீயணைப்பு வேலையில் ஈடுபட்டனர். இருந்தும் அப் பெட்டிகளில் இருந்த அதிகளவு பெற்றோல் ஆறுபோல ஓடி தீ பரவிக் கொண்டிருந்தது.

இதனால் அப்பகுதி மக்களை அந்த இடங்களை விட்டு அகற்றும் பணியும் மும்முரமாக இடம் பெற்றது.

5 மணி நேரமாக மேற்கொள்ளப்பட்ட தீயணைப்பு, மீட்பு பணிகளின் பின்பு அப் பிரதேச மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருந்த போது, தடம்புரண்ட ரயில் பெட்டிகள் அப்பிரதேசமே அதிரும் படி வெடித்துச் சிதறின. இந்த ஒலி பத்து கிலோ மீற்றர் தொலைவு வரை கேட்டது. வெடித்துச் சிதறிய சில பொருட்கள் 50 கிலோ மீற்றர் தொலைவுக்கு அப்பாலும் போய் வீழ்ந்தன.

இந்த நிகழ்வில் தீயணைப்புப் படை அதிகாரி உட்பட 200 பேர் கொண்ட தீயணைப்புக் குழுவினர் உயிரிழந்தனர். ஏனையோர் பொது மக்கள்.

சிதறலின் அதிர்வு காரணமாகசுற்றாடலில்இருந்த மண்குடிசைகள் அனைத்தும் தகர்ந்தன. அதில் அருகிலுள்ள ஆற்றிலும் பல சடலங்கள் கண்டு பிடிக்கப்படலாம் என்றும் அதனால் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அச்சுற்றாடலில் ஒரே புகை மண்டலமும், கந்தக வாடையும் அடுத்த நாளும் நிறைந்திருந்தன.

மேலும் வெடிக்காமல் சில பெற்றோல் கலன்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவை வெடிக்கலாம் என அஞ்சப்படுவதால் அப்பகுதி மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு குடி பெயரச் செய்யும் நடவடிக்கை தீவிரமாக மேற் கொள்ளப்படுகிறது.

ஈரானின் புரட்சிக் காவலர்கள் அப்பிரதேசத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

இத்தகைய எரிந்து வெடிக்கும் தன்மை கொண்ட பொருட்கள் அனைத்தையும் ஒன்றாக ஒரே ரயில் பெட்டி தொடரில் அனுப்புவதற்கு எவ்வாறு தீர்மானித்தனர் என்பது புதிராகவே உள்ளது.

உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கடந்த வாரம் ஈரானில் ஒரு நாள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

—ஆஷா—


உங்கள் இல்லத்துக்கு அதிசிறந்தது, கூரை முதல்



நிவச

கூரை ஓடுகள் மற்றும் டெராகொட்டா தரை ஓடுகள்

தரை வரை

அதிசிறந்த சர்வதேச தராதரத்துக்கு நிகராக, இலங்கை உற்பத்திகளை உயர்த்தும் இலட்சியம் கொண்ட பல்துறைகள் இணைந்த வர்த்தகர்களுள் ஒருவரான DSI குழுவினரின் தயாரிப்பு 'நிவச' கூரை ஓடுகள்! பலவகையான நிறங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

நாம், தரமான டெராகொட்டா தரை ஓடுகளையும் அதை தராதர உயர்வுடன் தயாரிக்கிறோம்.

DSI Samson group

சம்சன் ரஜரட்ட டைல்ஸ் (பிறை) லிமிட்

ஜினசேன மாவத்தை, மஹார, கடவத்தை.
விசாரணைகளுக்கு தொடர்புகொள்ள வேண்டியது:
கிஹான் 0777-815440 அல்லது மஹாநாம 0777-815439
தொலைபேசி: 0112-926065, 0112-928700, 0114-815423, 0114-816443
தொலைநகல் 0112-925064, 0114-816440 தகவல் தளம்: http://www.dsitiles.com



வெள்ளவத்தையில்

ஒரே கூரையின் கீழ் சகலவிதமான பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



Esviem's

Esviem's 1 வருட பூர்த்தி

சகல விதமான
- மளிகைப் பொருட்கள்
- உணவுப்பொருட்கள்
- வீட்டுப்பாவனைப் பொருட்கள்
- காகிதாதிகள்
- மருந்துப் பொருட்கள்
- அழகு சாதனப்பொருட்கள்

1 ஆம் ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

Esviem's SHOPPING COMPLEX

338, Galle Road, Wellawatte.
Tel : 4518844, 4515561, 4525169
E.mail :esviems@wow.lk

விசாலமான வாகனத்தரிப்பிட வசதியுண்டு



The Largest Fuji Frontier Network in Sri Lanka
Perfect Digital Photo Colour Lab
WE UNDERTAKE
All Digital Media
Enlarge Print (50"x100m) From Chromira
- Red-eye compensation
- Soft focus
- Cross filter
- Free cropping
- Album Print
- Calender Prints
- Greeting Card Prints
- Prints with Text
- Frame Prints
- Package Prints
- Card Prints
- Memory Copy Prints

Perfect digital Imaging Services (Pvt)Ltd.

Branch Office:
181, Galle Road, Colombo - 06.
Tel: 011 2361431, Mobile: 0777 668257
52, Dalada Veediya, Kandy. Tel: 08 3222371

Head Office:
265, Ward Place, Borella, Colombo-08, Sri Lanka
Tel: 011 2665827 Fax: 011 2665830
E.mail: pdis@sierra.lk



Hotel Swarkka & Restaurant

For Quality Food
Comfortable A/C, Non A/c Rooms.
and Take Away.

#33, Soosaipillaiyarkulam Road, Vavuniya. Tel: 0242221291 Mobile: 0777563991 E.mail:hotelswarkka@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பி[illegible] ...ண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 மார்ச்.06 ஆம் திகதி வெளியிடப்பட்டது